# வைகறை வெளிச்சம்


ஆசிரியர் : மு. குலாம் முஹம்மது

Volume - 9
Issue -7

ஜூலை 2016 - ஷவ்வால் 1437

விலை ரூ. 20


# முஹம்மது அலீ ஒரு சகாப்தம்



# வைகறை வெளிச்சம்

ஜூலை 2016 - ஷவ்வால் - 1437

ஆசிரியர்
மு. குலாம் முஹம்மது
துணை ஆசிரியர்
கே.எம். இல்யாஸ் ரியாஜி

**தனி இதழ் : ரூ. 20/-**
**ஆண்டுச் சந்தா:**
**உள்நாடு : ரூ. 240/-**
**வெளிநாடு : ரூ. 1500/-**

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
DARUL ISLAM FOUNDATION TRUST
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு
VAIGARAI VELICHAM
52/1, Mannady Street,
Room No.7, Mannady,
Chennai - 600 001.
Cell.: 8148129887
E-mail: darultrust@yahoo.com
Web : www.darulislam.in

All disputes arising out of any publication in this monthly will come under the jurisdiction of chennai courts.

بسم الله الرحمن الرحيم

| | |
|---|---|
| முஹம்மது அலீ – ஒரு சகாப்தம் | 6 |
| அல் குத்ஸ் தினம் | 20 |
| மாற்றத்திற்கெதிரான விஷமம்! | 28 |
| அமெரிக்கா வைத்த உலை! | 35 |
| சவுதிக்கு எதிராக களமிறங்கும் யு.எஸ். பின்னணி என்ன? | 37 |
| டீஸ்டா மீது மோடி அரசின் கெடுபிடி! | 39 |
| கற்காலம் – ஒரு வரலாற்றுப் பொய் | 41 |
| புற்று நோய் – | 44 |
| இந்துத்துவா தீவிரவாதிகள் புரோகித் – பிரக்யா சிங் தாக்கூர் ஆகியோரின் விடுதலை! | 47 |
| தொழில் நகரமான திருப்பூரில் அமைதியைக் குலைக்க இந்து முன்னணி சதி! | 48 |
| பெருமானார் (ஸல்) அவர்கள் நமது காலத்திற்காக அனுப்பப்பட்ட நபி | 49 |
| அப்துல் ரவூஃப்–இன் அம்மாவை அல்லாஹ் அழைத்துக் கொண்டான்! | 52 |
| மதுரையும் வண்டி பந்தயமும் | 54 |
| 35 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் பரபரப்பில் மீனாட்சிபுரம்! | 58 |
| தமிழ்நாடு சிறுபான்மையினருக்கான கடன் உதவி | 59 |
| எது முதலில்? | 60 |
| முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன? | 64 |

**“எனவே(நபியே!) நேர்வழியின் பக்கம் அவர்களை அழைத்துக் கொண்டே இருப்பீராக! மேலும் நீர் ஏவப்பட்டப் பிரகாரம் உறுதியுடன் நிற்பீராக, அவர்களுடைய இழிவான மனோ இச்சைகளை நீர் பின்பற்றாதீர்!”**

அல்குர்ஆன் : 42:15

http:/www.facebook.com / vaigaraivelichammgm

அல்லாஹ்வின் அழகிய திருப்பெயரால்

# பெண்ணியத்தின் பரிணாம வளர்ச்சி!

**லோ**கேஷினி என்ற ஆசிரியை! வழக்கறிஞர் முருகன் என்பவரை மணந்து கொள்கின்றார்.

திருமணமாகி பத்து ஆண்டுகள் ஆகிவிட்டன. இரண்டு குழந்தைகளின் தாயார்.

ஆனால் தன்னுடைய பள்ளிப் பருவ மாணவன் ஷண்முக நாதன் என்பவுடன் ஏற்பட்ட தொடர்பை ஊரறியாமல், உறவறியாமல் வளர்த்து வந்தாள்.

தன் கள்ளக்காதலுடன் கொள்ளும் காமக்களியாட்டங்களுக்கு கணவன் வழக்கறிஞர் முருகன் தடையாக இருப்பதாக நினைக்கின்றாள்.

இந்தத் தடைமைய அகற்ற வேண்டும் என்பதற்கான சதி திட்டங்களைத் தன் கள்ளக் காதலனோடு இணைந்து தீட்டுகின்றாள்.

தனது கையில் இருக்கு ரூபாய் இரண்டு லட்சத்தை தியாகம் செய்து தனது கணவனை தனது சரச விளையாட்டுக்களுக்கத் தடையாக இருக்கும் கணவனை கொலை செய்ய கூலிப்படை ஒன்றை அமர்த்துகின்றாள்.

நான்கு பேர் கொண்ட ஓர் கொலைகார அணியைத் தயார் செய்கின்றார். அந்த அணி லோகேஷினி கட்டியக் கணவனை துரத்துகின்றது.

கணவன் தன்னை துரத்துபவர்கள் கொலைகாரர்கள் தாம் என்பதை புரிந்து கொள்கின்றான்.

மனைவியிடம் கூறுகின்றான். ஆறுதல் தேடுகின்றான். அந்தோ பரிதாபம்! கொலைகாரியிடமே அபயம் தேடியிருக்கின்றான். அவள் அதாவது கணவனைக் கொலை செய்திட ஆளை அமர்த்திய மனைவி "அப்படி எதுவும் நடந்துவிடாது" எனக் கூறிக் கொண்டே கூலிப்படையை உஷார் படுத்துகின்றாள்.

கணவன் வழக்கறிஞர். உயிர் பிழைக்க வேண்டும் என்றால் நாம் வசியுமிடத்தை மாற்றிக் கொள்வதே உற்ற வழி என நினைக்கின்றான். ஆகவே வேறு வீடு தேடி அலைகின்றான் ஒரு வீட்டையும் ஏற்பாடு செய்து விட்டான்.

ஆனால் அதற்குள் மனைவி முந்திக் கொண்டாள். கூலிப்படையை அனுப்பிக் கொலையை அரங்கேற்றி விட்டாள். சரமாறியாக வெட்டுகள் வீழ்கின்றன. மடிந்து வீழ்கின்றாள். கொலைகாரர்கள் திட்டமிட்டபடி தப்பிச் சென்றுவிடுகின்றார்கள்.

உடனேயே யோகேஷினிக்கு உங்கள் கணவரை முடித்துவிட்டோம் எனத் தகவல் சொல்லுகின்றார்கள்.

குதூகலத்தில் லோகேஷ்னி மிதக்கிறாள். இனி தன் காம களியாட்டத்திற்கு தடையில்லை என சந்தோஷப்படுகின்றாள்.

ஆனால் அடுத்த நாளே அவள் கைது செய்யப்படுகின்றாள். அடுத்த நாள் கள்ளக்காதலன் லோகநாதன் கைது செய்யப்படுகின்றான். எல்லோரும் சிறையில்,

எத்துணைக் கொடுமையான எண்ணம்! எந்த அளவிற்கு காம வெறி, தலைக்கேறி கொலை வெறியாக மாறி இருக்கின்றது.

இந்த நிகழ்ச்சி பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற அளவில் தான் குறிப்பிடுகின்றோம்.

தன் கள்ளக்காதலை தன் மகன் கண்டு கொண்டான் என்பதற்காக மகனை கொலை செய்து தன் வீட்டு (பிரிட்ஜ்) குளிர்சாதனப் பெட்டியில் வைத்த தங்க மனைவி ஒருத்தியை நமது தாம்பரத்தில் வாழும் மக்கள் சந்தித்தார்கள்.

ஆக, அடங்காத ஒரு காமவெறி அதில் தடைகள் வந்தால் கொலை வெறி எனச் சில பெண்கள் வாழ தலைப்பட்டுவிட்டார்கள்.

இந்தக் குரூரமான கொலைகளைத் தடுகக என்ன வழி? "பெண்ணுரிமை, பெண்ணியம்" எனப் பேசியவர்கள் இங்கே எந்தத் தீர்வையும் சொல்லவில்லை. உண்மையில் அவர்களிடம் இது போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு இல்லை.

இதற்கிருக்கும் மிக நேர்மையான வழி தன் கணவனால் திருப்தி அடையாத பெண்கள் கணவனின் ஆண்மையை அதிகரிப்பதற்கான வழி வகைகளை ஆராயலாம். கணவனோடு நேரடியாகவே இதை விவாதிக்கலாம். மருத்துவ வழிகளை ஆராயலாம்.

அதற்கு மனமில்லை என்றால் நேரடியாக கணவனிடம உள்ளதைச் சொல்லலாம். கண்ணியமாக பிரிந்து போகலாம். தான் விரும்பியவனை திருமணம் செய்து கொண்டு வாழலாம்.

அதே போல் அந்த வழக்கறிஞரையும் வேறு ஒரு பெண்ணை மனந்து முறையாக நேர்த்தியான ஓர் வாழ்க்கையை நடத்த வழிவிட்டிருக்கலாம்.

இங்கே ஏன் கணவனை தீர்த்துக் கட்டுவது என்ற முடிவுக்கு வருகின்றார்கள் என்றால் சாதாரணமாக இந்து சமுதாய அமைப்பில் கணவனைத் பிடிக்காத, ஒரு பெண் தன் கணவனிடமிருந்து தன்னைப் பிரித்துக் கொள்வது மிகவும் கடினமான ஒன்று. இயலாத ஒன்று என்று சொல்லலாம். காரணம் விவாகரத்து அத்துணை எளிதாக கிடைக்காது. நீதிமன்றங்களின் நெடிய படிக்கட்டுகளில் பல ஆண்டுகள் ஏறி இறங்கினால் தான் இது கிடைக்கும். அப்போது அவர்கள் தங்கள் இளமை, கையிலிருந்த பணம் ஆகியவற்றை இழந்திருப்பார்கள்.

இதனால்தான் இது போன்ற அதாவது கொலை செய்வது போன்ற குறுக்கு வழிகளைப் பற்றிச் சிந்திக்கின்றார்கள். செலவு செய்கின்றார்கள். இறுதியில் சிக்கிக் கொள்கின்றார்கள். வாழ்க்கையை இழந்து விடுகின்றார்கள். மானம் என்றொன்று இருந்தால் அதையும் இழந்து விடுகின்றார்கள்.

இஸ்லாத்தில் மட்டுமே இதற்கான வழிமுறை இருக்கின்றது. கணவனால் திருப்தி அடையாத பெண் அல்லது வேறு காரணங்களுக்காக கணவனோடு வாழ்ந்திட விரும்பாத பெண் அவனிடமிருந்து "குலவா" என்ற திருமண விடுதலையைப் பெறலாம். அவள் அதை அறிவித்து விட்டால் போதும் அதற்காக அவள் வெறுபிரயத்தனங்களை செய்ய வேண்டாம்.

அத்தோடு அவள் பெற்ற திருமணப் பணத்தை திரும்பத் தந்திட வேண்டும். அவ்வளதான்.

இங்கே ஒன்றை மனதிற் கொள்ள வேண்டும். இது கள்ளக் காதலை வளர்த்த பிறகு செய்ய வேண்டிய ஒன்றல்ல. மாறாக தாம்பத்திய உறவை இனி தக்க வைத்திட இயலாது என்ற நிலையிலேயே செய்திட வேண்டியது.

இது போன்ற கள்ள காதலுக்கு இஸ்லாம் மரண தண்டனையைத் தருகின்றது. காரணம் கணவனுக்குத் துரோகம் செய்யாமல் அவனிடமிருந்து விடுதலையைப் பெற்றிட மிகவும் எளிதான வழி இருந்திடும் போது, கட்டிய கணவனுக்குத் துரோகம் செய்வதை இஸ்லாம் அனுமதிப்பதில்லை தண்டிக்கின்றது.

இதுபோன்ற தண்டனைகள் தரப்படுவதால் தான். அரபு நாடுகளில் இதுபோன்ற பாதகங்கள் நடப்பதில்லை.

இந்த வாழ்க்கை முறைகளை நெறி முறைகளை இங்கே நம் நாட்டில் வாழ்க்கை வழி முறையாக ஆக்கினால்தான். இது போன்ற கொலைகளை நிறுத்திட முடியும்.

இந்த வாழ்க்கை முறையின் முதல் அடிப்படை இந்த வாழ்க்கை நெறியை வகுத்து வழங்கிய இறைவனை ஏற்றுக் கொள்வதாகும். அதன் பின் ஓர் நேர்த்தியான வாழ்க்கை நெறிதானாக கைவரப் பெறலாம்.

இந்த இறைவனை ஏற்போம்.

அவன் வகுத்து வழங்கிய வாழ்க்கை நெறியை நமது வாழ்க்கையாக ஆக்கிக் கொள்வோம். இந்த வாழ்க்கை நெறி நீதி நெறி வேறெப்பதையும் விட இன்றைய இந்தியாவுக்கு மிகவும் அதிகமாகத் தேவைப்படுகின்றது.

இதனை இந்த வாழ்க்கை வழிமுறையை தொடர்ந்து இந்த மக்களிடம் எடுத்துச் சொல்லிட வேண்டும். விளக்கமாக எடுத்துச் சொன்னால் அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள். இதனால் தான் இறைவன் இப்படிக்கட்டளை இட்டான்.

"எனவே(நபியே!) நேர்வழியின் பக்கம் அவர்களை அழைத்துக் கொண்டே இருப்பீராக! மேலும் நீர் ஏவப்பட்டப் பிரகாரம் உறுதியுடன் நிற்பீராக, அவர்களுடைய இழிவான மனோ இச்சைகளை நீர் பின்பற்றாதீர்!" - அல்குர்ஆன் : 42:15

# முஹம்மது அலீ ஒரு சகாப்தம்



அமெரிக்காவை உலக வரைபடத்தில் உயர்த்தி நிறுத்தியவர் முஹம்மத் அலீ (ரஹ்) 1942-2016.

அவருடைய இயற்பெயர் - கேசியஸ் மார்சிலஸ் கிளே ஜூனியர். இவருடைய தந்தை கேசியஸ் மார்சிலஸ் கிளே சீனியர். தாயார் ஒடைஸ்ஸா கிரேடி கிளே என்பவர். இவர்கள் இருவருக்கும் மகனாக ஜனவரி 17, 1942 இல் பிறந்தவர் தான் கேசியஸ் மார்சிலஸ் கிளே ஜூனியர். பின்னர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு முஹம்மத் அலீ என்றானார்.

பிறந்த இடம் - அமெரிக்காவிலுள்ள கென்டுச்சி மாவட்டம் லூவிஸ் வில்லி.

இவர் பள்ளிப் பருவத்தில் இருந்தபோது இவருடைய சைக்கிள்-ஐ யாரோ திருடி விட்டார்கள். கோபம் பொத்துக் கொண்டு வந்தது கேசியஸ் கிளேக்கு!

பக்கத்திலிருந்த காவல் நிலையத்திற்குச் சென்று திருடியவனைப் பிடித்துத்தாருங்கள். நான் அவனைப் புடைத்து எடுக்க வேண்டும் என்றார்.

இதை செவிமடுத்த ஜோமார்ட்டின் என்ற காவல் துறை அதிகாரி "அப்படியானால் நீ அதற்குரிய பயிற்சியை எடுக்க வேண்டும்" என்றார். காவல்துறை அதிகாரி, ஜோ மார்ட்டின் இப்படிச் சொன்னதற்குக் காரணம், அவர் குத்துச் சண்டை பயிற்சிகளை வழங்கி வந்தார்.

(6¼) ஆறே கால் அடி உயரமுள்ள அலீயைக் குத்துச் சண்டை பயிற்சிகளைப் பெற்றிட அழைத்தார். அலீ பயிற்சியில் கலந்து கொண்டார் எடுத்த எடுப்பிலேயே தொடர்ந்து 10 சண்டைகளில் வென்றார்.

18 ஆம் வயதில் National Golden Golves title என்ற "தங்கக் கை" விருதைப் பெற்றார் தொடர்ந்து கலந்து கொண்ட 100 சண்டைகளில் 8ல் மட்டுமே தோற்றார்.

அது முதல் அவர், குத்துச் சண்டையில் புகழ் மலையில் கொடிநாட்டினார். இஸ்லாத்தையும் ஏற்றார். அந்த வரலாற்றை அப்படியே தருகின்றோம்.

குல்லு நஃப்ஸின்தாயிகத்துல் மௌத். நிச்சயமாக ஒவ்வொரு ஆன்மாவும் மரணத்தை சுவைத்தே தீரும். (திருக்குர்ஆன்)

இந்த வசனத்தின் மூலம் அல்லாஹ்வை தவிர இந்த பிரபஞ்சத்தில் ஏதும் நிரந்தரம் இல்லை என்று அல்லாஹ் குறிப்பிடுகின்றான்.


இந்த உலகில் மனிதனாக பிறந்து மனிதாகவே இறப்பவர்கள் சிலர், இன்னும் வெகு சிலரே மனிதனாகப் பிறந்து புனிதராக இறக்கின்றனர். அந்த புனிதர்கள் யார்? என்று தீர்மானிப்பது அவர்கள் வாழும் வாழ்க்கை. அவர்கள் வாழ்ந்த வழிமுறை. அவர்கள் தேர்ந்தெடுத்த சித்தாந்தங்கள். அவர்கள் தேர்ந்தெடுத்த மார்க்கம். அதில் அவர்கள் வைத்துக் கொள்ளும் ஈடுபாடு. அப்படி வாழ்ந்த ஒரு புனிதர் தான் முஹம்மது அலி. காசியஸ் க்ளே என்பது பழைய பெயர்.

சிறு வயதில் இருந்தே குத்துச் சண்டை ஆர்வம் கொண்டு மிக சிறு வயதிலேயே ஒலிம்பிக் புத்தகங்களை வென்றெடுத்தார். உலக நாயகனாக நான் மாறிவிட்டேன் என்று மனதில் எண்ணிக் கொண்டு துள்ளிக் குதித்தார். எனக்கு மிகப்பெரிய ரசிகர் கூட்டம் சேர்ந்துவிடும் என்று நினைத்தார். மக்கள் அவரை ஏற்கவில்லை. நீ போட்டியில் வேண்டுமானால் ஜெயித்து இருக்கலாம். ஆனால் உன் நிறம் என்றும் மாறாதது. அடிமையின் மகனே! இதுதான் உன்னுடைய அந்தஸ்து என்று மக்கள் சொல்லவில்லை. செயலில் செய்து காட்டினார்கள். உணவகங் களில் இருந்து விரட்டப்பட்டார். விடுதிகளில் தங்க அனுமதிக்கப்படவில்லை.

தீண்டாமையின் உச்சமாக இந்தக் கடற்கரை காற்றை வெள்ளையர்கள் மட்டுமே சுவாசிக்க வேண்டும், ஓடிவிடு இங்கிருந்து கருப்பின அடிமையே என்று விரட்டப் பட்டார்.

இந்த சம்பவம் அவருடைய மனதில் ஒரு மிகப்பெரிய எரிமலையை உருவாக்கியது. மக்களுக்கு மாற்றத்தை கொண்டுவர வேண்டும் என்று நினைத்தார். ஆனால் வழி தெரியவில்லை.

அல்லாஹ் ஒருவருடைய உள்ளத்தில் நேர்வழியை நாடிவிட்டால் தடுப்பவர்கள் யாரோ? ஒரு கருப்பின முதியவர், ஒரு மடக்கோலையை அவரிடம் கொடுத்து இதோ முஹம்மது (எலிஜா முஹம்மது) பேசுகிறார் என்று சொன்னதும், என்னுடையவர்கள் எங்கு இருக்கின்றார்களோ என்னை அங்கு அழைத்து செல்லுங்கள் என்று பதிலளித்தார்.



## 20 இலட்சம் பேரை இஸ்லாத்திற்கு கொண்டு வந்தவர்

முஹம்மது அலி அவர்கள் தன் வாழ்நாளில் 20 இலட்சம் பேருக்கும் மேலான எண்ணிக்கையிலானவர்களை இஸ்லாத்திற்கு கொண்டு வந்தார். தன் ஆண்டு வருமானத்தில் 20 கோடி டாலர்கள் அதற்காக முஹம்மது அலி அவர்கள் செலவழித்தார்.

தன் வீட்டை பெரிய மஸ்ஜித் ஆகவும் குர்ஆனிய வகுப்பாகவும் மாற்றினார்.

ஒரு நேர்முகத்தில் முஹம்மது அலி இவ்வாறு கூறினார், "விரைவில் நான் கிழவனாகி விடுவேன். நான் எந்த நேரமும் மரணத்தை சந்திக்கக்கூடும். அல்லாஹ் என்னை சிறந்த விளையாட்டு வீரனாகவும், உலக பிரபல்யமாகவும் உருவாக்கினான். இந்த பிரபல்யத்தை நான் இஸ்லாத்தை பிரச்சாரம் செய்ய பயன்படுத்திக் கொண்டேன். மது, மங்கை, போதை பொருட்கள் போன்ற தீமைகளை விட்டு விலக்கும் இஸ்லாமிய போதனைகளை பிரச்சாரம் செய்ய என் பிரபல்யத்தை பயன்படுததிக் கொண்டேன்."

முஹம்மது தமாஷி எழுதிய "Acceptance of Islam by great personalities and thinkers" என்ற புத்தகத்தில் இருந்து. . .

http://www.siasat.com/news/mohammed-ali-clay-converted-20-lakh-americans-islam-968237/

அங்கு மால்கம் X இன் நட்பு அவருக்கு கிடைத்தது. மால்கம் X இன் மூலம் இஸ்லாத்தை படித்தார்.

அடுத்து அவருடைய வாழ்க்கையிலே மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது ஒரு குத்துச் சண்டை போட்டி. அந்தக் காலத்தில் விளையாட்டுப் போட்டிகள் எல்லாம் வியாபாரத்திற்காகவும் புகழுக்காகவும் நடத்தப்பட்டன. குறிப்பாக குத்துச் சண்டை போன்ற பயங்கரமான போட்டிகளில் வெள்ளையர்கள் கலந்து கொள்ள மாட்டார்கள். நம்முடைய ஊர் சேவல் சண்டை, ஜல்லிக்கட்டு பிராணிகளைப் போல் கருப்பின அடிமைகள் இருக்கும் போது வெள்ளையர்களுக்கு என்ன வேலை. லிங்கன் எனக்கூடிய இன்னொரு கருப்பரோடு அலி மோத வேண்டிய சூழ்நிலை.

மால்கம் X என்ற இஸ்லாமிய தலைவரோடு நெருங்கிப் பழகியதால் அலி இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார் என யூகித்து இது இரண்டு பேருக்கான போட்டி இல்லை. இரண்டு மதங்களுக்கான போட்டி என்று சில ஊடகங்கள் வர்ணித்தன.

அல்லாஹ்வுடைய கிருபையைக் கொண்டு நாக் அவுட் முறையில் வெற்றி பெற்றார் அலி. மறுதினமே இஸ்லாத்தில் இணைவதாக பகிரங்க அறிவிப்பு விடுத்தார் அலி. இன்றிலிருந்து எனக்கு 75 கோடி சகோதர சகோதரிகள் இருக்கிறார்கள் என்று மகிழ்ச்சியோடு அறிவித்தார். அடிமைத்தன கைவிலங்கு விலகியதை உணர்ந்தார். கருப்பினத்திற்கும் தான் சுவாசிக்கும் விடுதலைக் காற்று கிடைக்கு வேண்டும் என்று (ஆஃப்ரோ அமெரிக்கன்ஸ்) என்ற கருப்பின அமெரிக்கர்களுக்கு குரல் கொடுத்தார். வியட்நாம் போரில் கலந்து கொள்ள மறுத்தார் அலீ. வழக்குகள் பாய்ந்தன. கைது செய்யப்பட்டார்.

"எனக்கும் வியட்நாம் மக்களுக்கும் என்ன பிரச்சனை? நான் ஏன் அவர்களோடு சண்டையிட வேண்டும்? அல்லாஹ்வுக்கும் அல்லாஹ்வுடைய தூதருக்காகவும் மட்டுமே சண்டையிடுவேன். இந்த கிருஸ்தவப் போரிலே எனக்குப் பங்கில்லை" என்று கர்ஜித்தார். மார்ட்டின் லூதர் கிங்குமே, அதுவரையில் வியட்நாம் போரைப்பற்றி வெளிப்படையாக பேசவில்லை. கருப்பின விடுதலைக்காக போராடியவர்களில் மார்ட்டின் லூதர் கிங்கை விட அலிதான் பல இளைஞர்களை ஈர்த்தார் என சில அறிஞர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

இந்த சிந்தனைகளும் புரட்சியும், தன்னுடைய குத்துச் சண்டை, வாழ்க்கையில்



முக்கியமான பகுதியை ஏற்க வேண்டிய தாயிற்று. அஞ்சவில்லை, சோர்ந்து போக வில்லை. ஈமானின் உறுதியும், அல்லாஹ் வுடைய உதவியும் கொண்டு அந்நேரத்தை வீணடிக்காமல் குத்துச் சண்டை பார்த்தது போதும் என் நாவாற்றலை பாருங்கள் என்று மக்களிடம் தொடங்கினார். காலத்தை வென்றார். மீண்டும் குத்துச் சண்டையில் வெற்றிகளை குவித்தார். ஆனால் புரட்சியை விடவில்லை.

ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு குத்துச் சண்டை வீரன் தனக்கு அலீ யார் என்று தெரியாது. ஆனால் காசியஸ் க்ளே யார் என்று தெரியும் என்று முகமது அலி அவர்களின் அடிமைத்தனத்தின் பெயரை குறிப்பிட்டதால் கோபம் அடைந்த அலி போட்டியின் மத்தியிலே அவன் மீது சரமாரியாக குத்துக்களை விட்டு என் பெயரை சொல், என் பெயரை சொல் என்று அவனை ஒரு வழியாக்கிய போது அலியின் இஸ்லாத்தின் மீதான பற்றும் தன்மான உணர்வும் வெளிப்பட்டன.

டோனால்ட் டிரம்ப் எனக்கூடிய அமெரிக்கா அதிபர் வேட்பாளர் ஒருவர் இஸ்லாமியர்களுக்கும் அமெரிக்கர்களுக்கும் சம்பந்தமில்லை என்றார். ஒரு காலத்தில் குவைத் போருக்கு மத்தியில் 14 அமெரிக்கர் களை சிறைபிடித்திருந்தார் சதாம் உசேன் அவர்கள். யார் பேச்சும் எடுபடவில்லை. கைதிகளை விடுதலை செய்ய சதாம் உசேன் ஒப்புக் கொள்ளவில்லை. அந்த பாரம் அலியிடம் கொடுக்கப்பட்டது. சதாமை சந்தித்தார் அலி, சம்மதிக்க வைத்தார்.

அல்லாஹ்வுடைய கிருபையைக் கொண்டு அந்த 14 அமெரிக்க கைதிகளும் விடுவிக்கப்பட்டனர். இஸ்லாமிய வரலாற்றை சிதைக்கும் அமெரிக்கர்களுக்கு இது மறந் திருப்பது வியப்பில்லை. நல்ல பெயர்களை வையுங்கள். அதனால் சிறப்பிருக்கிறது என்பார்கள். முஹம்மதையும் அலியையும் சேர்த்துக்கொண்டே முஹம்மது அலி அவர்கள் இந்த பொன்மொழிக்கு சாட்சியாக இருக்கிறார்.

ஒரு பேட்டியின் போது உங்களுக்கு எத்தனை பாதுகாவலர்கள் உள்ளனர் என்று நெறியாளர் கேட்க நகைச்சுவைக்காக ஒன்று, இரண்டு என்று விரல் விட்டு எண்ண ஆரம்பித்த அலி பின்னர் சிரித்து விட்டு எனக்கு ஒரே ஒரு பாதுகாவலன் அவனுக்கு காது இல்லை ஆனால் செவியுறுவான், கண் இல்லை, ஆனால் பார்க்கக்கூடியவன் என்று அவனிடம் கூறினார்.

பார்க்கின்சன் என்னும் கொடிய நோய் தாக்கியும் வருத்தப்படவில்லை. அல்லாஹ் என்னுடைய பாவங்களை மன்னிக்கக்கூடிய வாய்ப்பை தந்திருக்கின்றான் என்றார் புன்னகையுடன். நான் தான் பெரியவன் என இறுமாப்புற்றிருந்தேன். ஆனால் இறைவன் தான் பெரியவன் என்பதை இந்த நோயின் மூலம் புரியவைத்து விட்டான் என அடக்கத்துடன் கூறினார்.

நிர்ணயித்தது நிர்ணயத்த நேரத்தில்

**தீவிரவாதத்தைப் பற்றி**

ஒரு முறை தீவிரவாதத்தைப் பற்றிய கேள்விக்கு பதிலளிக்கும் போது முஹம்மது அலீ, “நான் ஒரு முஸ்லிம். இங்கே ஓர் அப்பாவியை கொல்ல இடமில்லை. அது பாரிசாக இருந்தாலும் சரி. உலகின் எந்த மூலையாக இருந்தாலும் சரி” என்று பதிலளித்தார்.

**அதிபரை கண்டு அஞ்சாத தைரியம்**

அமெரிக்காவின் அதிபர் ஜார்ஜ் புஷ் ஒரு முறை பார்க்கின்சன் நோயால் பாதிக்கப்பட்டு இருந்த வயோதிகரான முஹம்மது அலீயைப் பார்த்து என்னுடன் குத்துச் சண்டை வருகிறாயா என்று சாடையில் கேட்க முஹம்மது அலீ அவர்கள் ஜார்ஜ் புஷ்யை பார்த்து இவருக்கு மண்டை குழம்பி விட்டது என்று கை சாடை காட்டி பதிலளித்தார்.

நிர்ணயித்தபடி நடக்கும். அலிக்கும் நடந்தது. அல்லாஹ்வுடைய நாட்டத்தின் பேரில் முஹம்மது அலி அவர்கள் வஃபாத்தானார்கள்.

ஒரு நாயகனை இழந்தோம்.

ஒரு வீரனை இழந்தோம்.

ஒரு புரட்சியாளனை இழந்தோம்.

ஒரு பிரளயத்தை இழந்தோம்.

ஒரு இஸ்லாமிய அழைப்பாளனை இழந்தோம்.

பிரார்த்திப்போம் அவருக்காக. . . !

## அமெரிக்காவின் பழி தீர்க்கும் படலம்

முஹம்மத் அலீ ஓர் கறுப்பர் என்பதால் அமெரிக்க அரசு அவரை அவமானப்படுத்தும் வாய்ப்புகளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. அந்த வாய்ப்பு 1966-67 இல் அவர்களுக்கு வாய்த்தது. ஆமாம், இந்த ஆண்டில்தான் அமெரிக்கா வியட்நாம் நாட்டின் மீது போர் தொடுத்தது. அந்தப் போரில் முஹம்மத் அலீ வியட்நாம் சென்று கலந்து கொண்டு சண்டையிட வேண்டும் என்றார்கள். கட்டாய இராணுவ சேவை செய்ய வேண்டும் எனக் கட்டாயப்படுத்தினார்கள்.

அமெரிக்காவில் இந்தக் கட்டாய இராணுவ சேவை செய்யாவிட்டால் "இராஜ குத்தம்" வந்துவிடும்.

எங்கோ இருக்கும் வியட்நாம், அந்த மக்கள் எனக்கு எந்தத் தீமையையும் செய்யவில்லை. நான் ஏன் 10,000 மைல்கள் கடந்து சென்று அந்த அப்பாவி மக்களை தாக்கிட வேண்டும்? நான் ஏற்றுக் கொண்டிருக்கும் மார்க்கமாம் இஸ்லாம் அப்பாவி மக்களைக் கொலை செய்வதை அனுமதிக்கவில்லை. எனக்கு வியட்நாம் காங்கிரஸூக்கும் எந்தப் பகையுமில்லை. என்னை அவர்கள் ஒரு போதும் கறுப்பனே என அழைக்கவில்லை எனக் கூறி வியட்நாம் செல்ல மறுத்துவிட்டார்.

அத்தோடும் நிற்கவில்லை. முஹம்மத் அலீ கறுப்பர்களையெல்லாம் ஒன்றிணைத்து வியட்நாம் போருக்கு எதிராக கருத்துக்களை உருவாக்கினார். முஹம்மத் அலீக்குப் பின்னால் ஒன்று திரண்ட மக்கள் குறிப்பாக கறுப்பு நிறத்தை உடையவர்கள். "அவர் போகவில்லை, என்றால் நாங்களும் போகமாட்டோம்" எனச் சொல்லி விட்டார்கள்.

இது அமெரிக்காவின் வெள்ளையர்களை மிகவும் ஆத்திரம் கொள்ளச் செய்தது. அவர்களின் ஆத்திரத்தை அதிகப்படுத்திடும் அளவில் பலப் பல்கலைக்கழகங்களுக்குச் சென்று உரைகளை நிகழ்த்தினார். அவற்றில் ஒன்றில் இப்படிப் பேசினார்:

"என்னுடைய எதிரி வெள்ளையர்கள் தாம். அல்லாமல் வியட்நாம் காங்கிரஸ் -ஐ சார்ந்தவர்களல்ல. நான் விடுதலை அடைய வேண்டும் என விரும்பியபோது வியட்நாம் காங்கிரஸ் - ஐ சார்ந்தவர்களல்ல என்னை எதிர்த்தது. இங்கே உள்ள வெள்ளையர்கள் தான். நான் நீதி கேட்ட போது அதை மறுத்தவர்கள் வெள்ளையர்கள், வியட்நாம் காங்கிரஸ் அல்ல. நான் சமத்துவத்தைக்





கேட்டபோது, அதை மறுத்தவர்கள் வெள்ளையர்கள். என்னுடைய மத நம்பிக்கை களை வெள்ளையர்களால் பொறுத்துக் கொள்ள இயலவில்லை. அதனால் நீங்கள், என்னை வேறு நாடுகளுக்குச் சென்று குத்துச் சண்டை செய் என்கின்றீர்கள்"

**- The Week, June 19, 2016**

இது போன்ற பேச்சால் ஆத்திர மடைந்தார்கள் வெள்ளையர்கள். அதனால் அவரைக் கைது செய்தார்கள். குத்துச் சண்டை செய்ய வழங்கப்பட்டிருந்த அனுமதியைப் பிடிங்கினார்கள். அவருடைய விருதுகளை கைப்பற்றினார்கள். அரசின் தீர்ப்புக்கு எதிராக மேல் முறையீடு செய்து பிணையில் வந்தார் முஹம்மத் அலீ.

43 மாதங்கள் குத்துச் சண்டை போட்டி களில் கலந்து கொள்ள இயலவில்லை.

இதனிடையே வியட்நாம் போரில் அமெரிக்கா தோல்வியைத் தழுவியது. பல அமெரிக்கர்கள் கொல்லப்பட்டார்கள். அமெரிக்க மக்கள் வெகுண்டெழுந்தார்கள். எல்லா மக்களும், அமெரிக்க அரசுக்கு எதிராக ஒன்று திரண்டார்கள். இதனால் மேல் முறையீட்டில் நல்ல தீர்ப்புக் கிடைத்தது. மேல் முறையீட்டில் நீதிமன்றம் அரசின் முடிவுகள் தவறு என்று தீர்ப்பளித்தது. முஹம்மத் அலீ பழைய நிலைக்கே வந்தார் தொடர்ந்து வெற்றிகளை குவித்தார்.

## கேசியஸ் மார்சிலஸ் கிளே (முஹம்மது அலீ கிளே Vs மால்கம் x)

புகழ் மலையின் உச்சியிலே கொடி நாட்டி, குத்துச் சண்டையில் தலை நிமிர்ந்து நின்றவர் கேசியஸ் மார்சிலஸ் கிளே! இவர் நிறத்தால் கறுப்பானவர். இதனால் இவரும் நிறவெறியின் நர்த்தனங்களிலிருந்து விடு பட்டிட இயலவில்லை.

உலகக் கோப்பையை வென்றபோது இவரை அமெரிக்காவில் ஆரவாரம் செய்து வரவேற்றார்கள் அனைவரும். அந்த வரவேற்பு நிகழ்ச்சிகளிலே கண் சிமிட்டிக் குதூகலித்து விட்டுக் கலைந்து சென்றார்கள் வெள்ளையர்கள்.

உலகக் கோப்பையையே வென்றோம்! அதன் மூலம் அமெரிக்காவுக்குப் புகழைப் பெற்றுத் தந்தோம்! என்ற மதமதப்போடு அவர் அட்லாண்டா, ஜார்ஜியா போன்ற பகுதிகளுக்குப் பயணம் சென்றபோது அவருக்கு எந்த வெள்ளையர் விடுதியிலும் உணவு கிடைக்கவில்லையாம்.

உணவு விடுதிகளிலும், தங்கும் விடுதிகளிலும் அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது. கரையோரம் நின்று கைக்குக் கிட்டியதை உண்டு விட்டு தன் காரிலேயே தூங்கினாராம். அங்கே ஒரு விடுதியில் அவரிடம் இப்படிக் கூறினார்களாம். "Yor are just another boy when you just come out of the ring".

அதாவது, "குத்துச்சண்டை, களத்தைவிட்டு வெளியே வந்து விட்டால் நீ இன்னொரு கறுப்பன்தான்" - : (Mohammed Ali by Don Alyeo and F Elix Dennis, Page 166)

வளமும், பணமும் வரப்பெற்று விட்டால் வெள்ளையர்கள் பாரபட்சம் பாராட்டமாட்டார்கள் என்றொரு பிரம்மையில் பல கறுப்பர்கள் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். இவர்களை மால்கம் X, "வெள்ளையர்களோடு வெள்ளையர்களாகி விடலாம் என வருணம் பூசிக் கொள்பவர்கள்" என அழைப்பர். இப்படிப் பிரம்மையில் வாழ்ந்தவர்களில் ஒருவர்தான் கேசியஸ் கிளே.

**அமெரிக்கா பற்றி. . .**

நான் அமெரிக்காவால் உபயோகப்படுததிக் கொள்ளப்பட்ட ஆனால் அங்கீகரிக்கப்படாத ஒரு பகுதி.

**போரில் பங்கேற்பதைப் பற்றி**

*நான் யாரையும் ஏமாற்றவில்லை. நான் எந்த கொடியையும் எரிக்கவில்லை. நான் கனடாவிற்கு ஓடிவிட இல்லை. நான் இங்கேயே தான் இருக்கிறேன். நீங்கள் என்னை சிறைச்சாலைக்கு அனுப்ப விரும்புகிறீர்களா? நல்லது. செய்யுங்கள். நான் சிறையில் 400 வருடங்களானாலும் அல்லது அதை விட அதிக காலமானாலும் இருப்பேன். ஆனால் இங்கிருந்து 10000 மைல்களுக்கு அப்பால் ஏழை மக்களை கொலை செய்ய செல்ல மாட்டேன். நான் சாக விரும்பினால் இங்கேயே இப்போதே உங்களுடன் சண்டையிட்டு சாவேன். சீனர்களோ, வியட்னாமியர்களோ அல்லது ஜப்பானியர் களோ என்னுடைய எதிரிகள் அல்ல. நான் விரும்பிய என் சுதந்திரத்தை பறித்து என்னை அடக்கி வைத்துள்ள நீங்களே என் எதிரி. நான் விரும்பிய எனக்கான நீதியை தராத நீங்களே என் எதிர்கள்.*

*என்னுடைய பகுத்தறிவு என்னை என்னுடைய சகோதரனை, கருப்பினத் தவனை அல்லது பசித்த மக்களை சுட்டுக் கொலை அனுமதிக்கவில்லை. எதற்காக அவர்களை சுட வேண்டும்? அவர்கள் என்னை நீக்ரோ இனத்தை சேர்ந்தவன் (கருப்பன்) என்று அழைக்கவில்லை. அவர்கள் என்னை துன்புறுத்தவில்லை. அவர்கள் என் மீது நாய்களை ஏவவில்லை. அவர்கள் என்னுடைய தேசிய அடை யாளத்தை திருடிக் கொள்ளவில்லை. அவர்கள் கற்பழிக்கவில்லை. என் தாய் தந்தையரை கொல்லவில்லை. பின்னர் எதற்காக அவர்கள் சுட வேண்டும்? அந்த ஏழை மக்களை நான் எப்படி சுட முடியும்? என்னை சிறையில் அடையுங்கள்.*

*இவர் வளத்தோடு வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில் “மியாமி” கடற்கரையில் வெள்ளையர்களுக்கான பகுதிகளில் அமர முடியாமல் வெளியேற்றப்பட்டார். அவருக்கு மனித உரிமைகளைப் பெற்றுத் தந்தது இஸ்லாம்தான். அந்த வரலாற்றைச் சுருக்கமாகப் பார்ப்போம்.*

*கேசியஸ் மார்சிலஸ் கிளேயின் வாழ்க்கை வரலாற்றை எழுதியவர் இப்படிக் குறிப்பிடுகின்றார்: “வெள்ளையர்கள் கண்மூடித்தனமாகச் செயல்படுத்திய நிற வெறித் தீண்டாமைதான் கேசியஸ் கிளேயை இஸ்லாத்தில் பிடித்துத் தள்ளியது.” (முஹம்மத் அலீ, பக்கம் 185)*

*1962 ஆம் ஆண்டு கேசியஸ் மார்சிலஸ் கிளே பத்திரிகையொன்றை வாங்கிட ஒரு பத்திரிகைக் கடையை நோக்கி நடந்து கொண்டிருந்தார்.*

*இவரை வழி மறித்தார் ஒரு வயதான கறுப்பர். ஒரு பத்திரிகையை நீட்டினார். அந்தப் பத்திரிகையில் முஹம்மத் பேசுகின்றார் என்று குறிப்பிட்டிருந்தது.*

*ஒரு புன்னகையைப் பதிலாகத் தந்தார் இந்தக் குத்துச் சண்டை வீரர். உன் உணர்வு களைப் பாராட்டுகின்றேன் என்பதைத்தான் அந்தப் புன்னகை உணர்த்திற்று.*

*பத்திரிகையை வாங்கிவிட்டு வயதானவரின் முகத்தைப் பார்த்தார்.*

*ஒரு தாபம் தலைகாட்டிற்று.*

*“நாளை மறுநாள் முஹம்மத் இங்கே பேசுகின்றார். வாருங்களேன்!” என்று கெஞ்சிக் கூப்பிட்டார் அந்த வயோதிகர்.*

*அவர் காட்டும் ஆர்வத்தைக் கண்டு ஆனந்தம் கொண்டார் கேசியஸ் கிளே.*

*அவருடைய கன்னத்தில் தட்டித் தந்துவிட்டு, இப்படி கூறினார்: “என்னை நீங்கள் இருக்குமிடத்திற்கு என்னை அழைத்துச் செல்லுங்கள்!”* (take me where my folks are!)

இத்தனையும் நடந்தது டெட்ராயிடில் வைத்துத்தான். எலிஜா பேசவிருந்த நாளுக்கு முந்தைய நாள், மால்கம் ஒரு ஹோட்டலின் உணவு விடுதிக்கு வந்தார்.

யாரோ பின்னால் வந்து நிற்பது போல் பட்டது.

திரும்பிப் பார்த்தார்.

கேசியஸ் மார்சிலஸ் கிளே நின்று கொண்டிருந்தார்.

அவரே தின்னை அறிமுகம் செய்து கொண்டார்.

"நான்தான் கேசியஸ் மார்சிலஸ் கிளே" என்றார்.

"நான்" என வாய் திறந்தார் மால்கம். "நன்றாக அறிவேன்"என இடைமறித்தார் கேசியஸ் மார்சிலஸ் கிளே!

"மாட்டிக் கொண்டது ஒரு மீன்" என மனதில் நினைத்துக் கொண்டார் (அந்த முன்னாள் குத்துச் சண்டை வீரர்) மால்கம்.

நீண்டதொரு உரையாடலை ஆரம்பித்தார் மால்கம்.

மிகவும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டு வந்தார் கேசியஸ் மார்சிலஸ் கிளே.

முடிவில் மறுநாள் எலிஜா முஹம்மதின் உரையின் போது சந்திப்பது என இருவரும் முடிவு செய்தனர்.

அடுத்த நாள், எலிஜா முஹம்மதின் உரை கேட்க அனைவரும் குழுமினார்கள்.

அரங்கில் எலிஜா முஹம்மதின் இருக்கைக்குப் பின்னாலிருந்த மால்கம் கூட்டத்தில் ஒருவரைத் தேடினார்.

அவர் வரவில்லையே, வரமாட்டாரோ என்ற ஏக்கத்தைத் தான் அவருடைய முகம் வெளிக்காட்டிக் கொண்டிருந்தது.

அதோ வந்துவிட்டார்! இந்த உரை கேட்க அவர் புத்தாடை அணிந்து புதுக் கோலம் பூண்டு அங்கே வந்து நின்றார்.

ஆமாம்! கேசியஸ் மார்சிலஸ் கிளே அங்கே வந்து நின்றார்.

மால்கம் மேடையிலிருந்து இறங்கி வந்தார். அவரை அழைத்து வந்து முன் வரிசையில் அமர்ந்திருந்த தன் குடும்பத் தினரிடம் அறிமுகம் செய்து வைத்தார். குடும்பத்தினரோடு அவரையும் அமர வைத்தார். தானும் அமர்ந்தார்.

எலிஜா முஹம்மத் சுவை சொட்ட கருத்துக்களைச் சொன்ன போதெல்லாம் முதல் கோஷம், கரவொலி கேசியஸ் மார்சிலஸ் கிளேயிடமிருந்தே வந்தது.

கூட்டம் முடிந்தது! மெத்த மகிழ்ச்சியோடு விடைபெற்றுச் சென்றார் கேசியஸ் கிளே!

அவர் உடனேயே இஸ்லாமிய சமுதாயப் பேரவையில் உறுப்பினர் ஆவதில் சில தடைகளிருந்தன.

இந்தத் தடைகளில் முதலிடத்தைப் பிடித்துக் கொண்டது கிளேயைச் சுற்றிப் பிணைந்திருந்த சூழ்நிலைகள்.

### நான் நம்பர் 1 கிடையாது

இந்த வாழ்க்கை உண்மையானது கிடையாது. நான் இந்த உலகை வென்றேன். ஆனால் அது எனக்கு மன நிறையை அளிக்கவில்லை. இறைவன் எனக்கு இந்த நோயை கொடுத்ததன் மூலம் நான் நம்பர் 1 கிடையாது. அவன் தான் எல்லாவற்றையும் மிகைத்தவன் என்பதை எனக்கு உணர்த்தினான்.

மற்றவர்களுக்கு உதவுவது என்பது இந்த உலகில் உனக்கு அளிக்கப்பட்ட இடத்திற்கான வாடகையை தருவது போன்றது.

குத்துச் சண்டைக்கு பிறகு நான் செய்யப்போவது இறைவனை சந்திக்க ஆயத்தம் செய்வது. நமக்கு இருப்பது ஒரே வாழ்க்கை. அது விரைவில் கடந்து போகும் இறைவனுக்காக நாம் என்ன செய்கிறோமோ அது வே நிலைத்திருக்கும்.

## துண்டு பிரசுரங்களில் கையெழுத்து

முஹம்மது அலீ தன் கடைசி நாட்களில் இஸ்லாமிய பிரச்சார துண்டு பிரசுரங்களில் தன்னடைய கையெழுத்திட்டு தான் போகும் இடங்களிலெல்லாம் வழங்கி வந்தார். இவ்வாறு அவர் ஏன் செய்கிறார்? என அலீயிடம் கேட்டபோது "ஏனெனில் என் கையெழுத்திட்ட காகிதத்தை யாரும் தூக்கி எறிய மாட்டார்கள் என்பதை நான் அறிவேன்" என பதிலளித்தார்.

அந்தச் சூழ்நிலைகளைச் சூறாவளியாக மாற்றிக் கொண்டிருந்த பெண்கள், அத்தோடு போதைப் பொருள்கள், அவற்றின் அடிப் படையில் அமைந்த உணவு பழக்கங்கள். இவற்றின் நடுவே அவருள் ஒரு நல்ல பழக்கம்.

அடிக்கடி மால்கம், பெற்றி ஆகியோரைச் சந்திப்பதில் ஒரு வேகத்தைக் காட்டினார். அதில் அவர் ஒரு புத்துணர்ச்சியைப் பெற்றார்.

மால்கம் ஏற்பாடு செய்த ஊர்வலங்கள், கண்டனப் பேரணிகள் அனைத்திலும் தவறாது கலந்து கொண்டார்.

மால்கம் தான் மேற்கொண்ட வலிமையான உபதேசங்களால் கேசியஸ் கிளேயிடம் குடிகொண்டிருந்த பல தீமைகளைக் களைந்தார்.

கேசியஸ் கிளேயைச் சுற்றி வந்த பெண்கள், அவரை விட்டு மெல்ல மெல்ல அகன்றனர்.

கேசியஸ் கிளேயை முழுமையாகத் தயாரிப்பதற்குள் மால்கம் X இஸ்லாமியச் சமுதாயப் பேரவையிலிருந்து வெளியேற்றப் பட்டார்.

இஸ்லாமிய சமுதாயப் பேரவை யிலிருந்து வெளியேற்றப்பட்ட மால்கம் X தனது நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை. மேடைகளில் இல்லாவிட்டாலும், தனிப் பட்ட முறையில் தன் இஸ்லாமிய பிரச்சாரத்தைத் தொடர்ந்திட விரும்பினார்.

## டொனால்ட் டிரம்பை நாக்அவுட் செய்த அலீ

தான் இறப்பதற்கு முன்பாக முஸ்லிம்களை அமெரிக்காவில் அனுமதிக்கக்கூடாது என பேசிவரும் அமெரிக்க அதிபர் தேர்தலுக்கான வேட்பாளர் டொனால்ட் டிரம்பை வழக்கம் போல நாக் அவுட் முறையில் வீழ்த்தி வெற்றி பெற்றே இறந்துள்ளார் என்றால் மிகையாகாது.

ஏனெனில் டிரம்ப்பின் மத வெறிப் பிரச்சாரம் சூடு பிடித்து வந்த நிலையில் முஹம்மது அலீ அவர்கள் இறந்தார்கள். அதன் பின்னர் வேறு வழியின்றி முஹம்மது அலீ என்று முஸ்லிமின் புகழ்பாட வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானார்கள் மேற்கத்திய ஊடகங்கள். இது எந்த அளவிற்கு சென்று என்றால் கிட்டத்தட்ட ஒரு வாரத்திற்கும் மேலாகக பி.பி.சி., சி.என்.என்., போன்ற ஊடகங்கள் முஹம்மது அலீயின் வாழ்க்கை வரலாற்றையும் அவரின் உரிமை போராட்டங்களையும் தொடர்ச்சியாக காட்டிக் கொண்டே இருந்தன. (அத்தகைய கட்டாயத்திற்கு ஆளாகின)

ஒரு கட்டத்தில் அமெரிக்காவின் அரசியல் பிரபலங்கள் டொனாலட் டிரம்பை நோக்கி "முஹம்மது அலீ போன்ற ஒரு முஸ்லிமை தவிர்த்து விட்டு எவ்வாற அமெரிக்க வரலாற்றை எழுத முடியும்?" என் கேள்வியை எழுப்பினர்.

இது டிரம்பின் செல்வாக்கை வெகுவாக சரித்தது. அவருடைய எதிர் வேட்பாளர் ஹிலாரி கிளின்டனின் செல்வாக்கு வெகுவாக உயர்ந்தது.

எலிஜாவினால் வெளியேற்றப்பட்டு வீட்டுக்கு வந்த மால்கம், பெற்றி இடம் தனது நிலைமைகளை விளக்கினார்.

அவளும் அவரைத் தேற்றினாள்.

எலிஜாவின் முடிவைப் பத்திரிகைகள், பத்தி பத்தியாய் எழுதின. பல பத்திரிகைகள் அதையே தலைப்புச் செய்தியாய் போட்டுத் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தன.

பத்திரிகைச் செய்திகள் மால்கமைக் குத்திக் குதறின. இதனால் அவருள்ளிலிருந்து அவரை எரித்துக் கொண்டிருந்த வேதனைகள் இன்னும் அதிகமான அளவோடு அவரைத் தாக்கின. இத்தனை வேதனையிலும் ஆறுதலாய் அவருக்கோர் செய்தி வந்தது.

ஆமாம்! அது கேசியஸ் கிளேயிடமிருந்து வந்த செய்திதான்.

மால்கம், மியாமி வந்து கேசியஸ் கிளேயுடன் சில நாள்கள் தங்கிச் சென்றிட வேண்டும் என்பதே அது.

மால்கமும் அந்த அழைப்பை ஏற்று அங்கே சென்றார் தன் குடும்பத்தோடு, சற்று நிம்மதி தேடி.

கேசியஸ் மார்சிலஸ் கிளே, மால்கமிடம் ஒரு பெரிய திட்டத்தை பற்றிப் பேசிடவே அவரை அழைத்திருந்தார்.


“சோனி லிஸ்டன்” என்றொரு குத்துச் சண்டை வீரன். இவனை இதுவரை யாரும் வெற்றி கொள்ளவில்லை என்றொரு திமிர் அவனுக்கு.

இந்தத் திமிரால் அவன் வெள்ளையர்களோடு சேர்ந்து கொண்டு, கறுப்பர்களின் விடுதலைக்காகப் பாடுபட்டு வரும் இயக்கங்களைக் கிண்டல் செய்து வருகின்றான் என்றொரு செய்தி.

இப்போது அவன் இஸ்லாத்தையும், இஸ்லாமியச் சமுதாயப் பேரவையையும் கிண்டல் செய்ய ஆரம்பித்திருக்கின்றான் என்றொரு பின்னணியையும் சொன்னார் கிளே! சோனி லிஸ்டனோடு தான் சண்டையிட விரும்புவதாக கூறினார். தான் சண்டையிட விரும்பினாலும் தன்னால் இயலுமா என்பது ஒரு பெரிய வினாவே என்று தன்னுடைய இயலாமையையும் சொன்னார்.

மால்கம் கேசியஸ் கிளேயைத் தேற்றினார். கடினமாக முயற்சி செய்தால் அல்லாஹ் நிச்சயமாக உதவி செய்வான் என்று உறுதியும் தந்தார்.

மால்கம் கேசியஸ் கிளேயைச் சந்திக்கச் சென்றதுதான் மிச்சம், பத்திரிகைகளின் பார்வை இந்தப் பக்கம் திரும்பிற்று.



பத்திரிகைகள் இருவரின் சந்திப்பையும் பற்றி எழுதிற்று. அத்தோடு சோனி லிஸ்டனை வீழ்த்த இருவரும் திட்டம் போட்டிருப்பதை யும் கூறின.

இந்தப் பத்திரிகைப் பேட்டிதான் மால்கம் X ஐ இஸ்லாமியச் சமுதாயப் பேரமைப்பிலிருந்து வெளியேற்றிற்று. இருந்தாலும் அவரை விடுவதில்லை என்று பத்திரிகைகள் தொடர்ந்தன.

பத்திரிகைகள் பக்குவமாகச் செய்திகளைப் போட்டு கேசியஸ் கிளே மால்கம் ஆகியோரின் திட்டத்திலிருந்த குத்துச் சண்டையைச் சந்திக்குச் கொண்டு வந்தன.

“விளையாட்டுப் பகுதி” என்றொரு பகுதி பத்திரிகைகளில் இடம் பெறுவதுண்டு. பத்திரிகைகளில் கடைசிப் பக்கத்தில் அல்லது அதற்கு முந்தைய பக்கத்தில் அது இடம் பெறும்.

இந்த விளையாட்டுப் பகுதியில்தான், கேசியஸ் கிளே பற்றிய செய்தி இடம் பெறும்.

கேசியஸ் கிளேயோடு மால்கம் சேர்ந்தவுடன் அந்த செய்திகள் முதல் பக்கத்திற்கு வந்தது.

இப்படி நாள் தவறாமல் செய்திகளைப் போட்டு, பத்திரிகைகள் கேசியஸ் கிளேயை உசுப்பிவிட்டன. லிஸ்டனைக் கிளறிவிட்டன. இன்னம் சில பத்திரிகைகள் ஒரு படி மேலே போய் இந்தச் சண்டைக்கு மத வருணம் பூசின.

காலப்போக்கில் பத்திரிகைகள் கேசியஸ் கிளேக்கும் லிஸ்டனுக்கும் நடக்கப் போகும் போர் என்றாக்கிவிட்டன. தங்கள் வர்ணனையில் கேசியஸ் கிளே இஸ்லாத்தை அழுத்தமாக நம்புவதாகவும், அதனாலேயே வெற்றி பெற்றுவிடுவேன் என அவர் வட்டாரத்தில் நம்பப்படுவதாகவும் எழுதிக் குவித்தன.

அடுத்து, கேசியஸ் கிளே எப்படி இஸ்லாத்தை நம்புகின்றாரோ அதே போல், அதே அழுத்தத்தில் சோனி லிஸ்டன் கிறிஸ்தவத்தை நம்புவதாக எழுதின.

உண்மையிலேயே அப்படியொரு ஆன்மீகப் பலம் உண்டென்றால், அது மால்கம் வழியாகத் தனக்குக் கிடைத்திட வேண்டும் என விழைத்தார் கேசியஸ் மார்சிலஸ் கிளே!

மால்கம் இதற்கு ஒப்புக் கொண்டார். ஆனால் ஒரு நிபந்தனை:

"கேசியஸ் கிளே எலிஜாவைத் தொடர்பு கொண்டு இஸ்லாமியச் சமுதாயப் பேரவையில் இணைந்திட வேண்டும்."

கேசியஸ் ஒப்புக் கொண்டார்.

எலிஜாவைத் தொடர்பு கொண்டார்.

எலிஜா முஹம்மத் மால்கம் அங்கே இருக்கக்கூடாது என்றும், இஸ்லாமிய சமுதாயப் பேரவை இவை போன்றவற்றில் கவனஞ் செலுத்த இயலாது என்றும் கூறிவிட்டார்.

எலிஜாவின் விருப்பப்படி மால்கம் அங்கிருந்து (மியாமியிலிருந்து) அகன்று விடுவதாகவும், ஆனால் துஆக்களைத் தொடர்ந்திடுவதாகவும், சண்டை ஆரம்பிப் பதற்கு முந்திய நாள் வந்துவிடுவதாகவும் முடிவாயிற்று.

மால்கம் தற்காலிகமாக மியாமியை விட்டு வந்தார். பல சிறப்புத் தொழுகைகளைத் தொழுது துஆக்களைச் சமர்ப்பித்தார் அல்லாஹ்விடம்.

1964 பிப்ரவரி மாதம், 25 ஆம் நாள் சோனி லிஸ்டனோடு கேசியஸ் மார்சிலஸ் கிளே மோதுவதாக முடிவாகியிருந்தது.

பத்திரிகைகள் தங்கள் பதிப்புகளை இந்தத் தேதியை நோக்கிப் பாய்ச்சின.

கேசியஸ் மார்சிலஸ் கிளே எந்த விதத்திலேயும் சோனி லிஸ்டனுக்கு இணையாக மாட்டார்.

இந்த இளைஞர் விவரமறியாமல் மரணத்தின் வாயிலில் நுழைகிறார் என்றெல்லாம் பத்திரிகைகள் எழுதின.

குத்துச் சண்டைகளை நடத்தி வந்த குழுக்களுக்கு மனுக்கள் பறந்தன.

ஈடு கொடுக்கவியலாத ஓர் இளைஞரை (அதாவது கேசியஸ் கிளேயை) வீணாகப் பலி கொடுக்கும் இந்தச் குத்துச் சண்டை வேண்டாம் என அந்த மனுக்கள் வேண்டின.

அப்போது அமெரிக்காவில் பொதுவாக ஒரு போராட்டம் நடந்து கொண்டிருந்தது.

இந்தப் போராட்டத்தின் பொதுவான கோரிக்கை! 'குத்துச் சண்டைகளை ஒட்டு மொத்தமாகத் தடை செய்திட வேண்டும்' என்பதே!

இந்தக் குத்துச் சண்டைகளை ஒட்டு மொத்தமாக தடை செய்யும் நடவடிக்கையின் முதல் கட்டமாக கேசியஸ் கிளே - சோனி லிஸ்டன் சண்டையை நிறுத்திட வேண்டும் என வலியுறுத்தினார்கள்.

சண்டை நாள் நெருங்க, நெருங்க பத்திரிகைகள் சோனி லிஸ்டனை (The invincible, "Only death can take him the title") 'வெல்ல முடியாதவன்', 'மரணம் மட்டுமே அவனிட மிருந்து இந்தப் பட்டத்தைப் பிரிக்க முடியும்' என்றெழுதின.

அதாவது, 'லிஸ்டனை விஞ்சி ஒரு குத்துச் சண்டை வீரன் வரவியலுமென்றால் அது அவன் இறந்த பின்னரே இயலும்'எனப் பீற்றின பத்திரிகைகள்.

சில பத்திரிகைத் தலையங்கங்கள், "சோனி லிஸ்டனின் கைகளில் மரணத்தைத் தழுவவிருக்கும் கேசியஸ் கிளேயைக் காப்பாற்றுங்கள்" எனக் குத்துச் சண்டை நடத்துபவர்களைக் கேட்டுக் கொண்டன.

இப்படிப் பத்திரிகை உலகம் கிளேயின் மீது பரிதாபம் கொண்டு, அவரை உள்ளத்தால் பலவீனப்படுத்திக் கொண்டேயிருந்தன.

மால்கம் X தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கிளேயை உற்சாகப் படுத்திக் கொண்டேயிருந்தார்.

தொழுகை, துஆ பயிற்சி ஆகியவை முழு மூச்சாய்த் தொடர்ந்தன.

சில பத்திரிகைகள், இந்தக் குத்துச் சண்டைக்கு டிக்கட்டுகள் அதிகமாக விற்பனையாகப் போவதில்லை என்றும் அதனாலேயே இந்தக் குத்துச் சண்டை நின்றுவிடப் போகிறது என்றும் எழுதின.

'வெல்லப்போவது லிஸ்டன்தான் என்பது உறுதியான பின் யார்தான் இந்தத் காட்சியைக் காண வருவார்கள்?' எனப் பிரஸ்தாபித்தன சில பத்திரிகைகள். ஆனால் பத்திரிகைகளின் இந்த அனுமானம் அவர்கள் எதிர்பார்த்தது போல் இருக்கவில்லை.

லிஸ்டனின் சண்டை நுணுக்கங்களைப் பார்ப்பதற்கும், அவர் கையில் கிளே படும பாட்டைப் ரசிப்பதற்கும், ஏராளமானோர் டிக்கட்டுகளை வாங்கினார்கள்.

இந்தச் சண்டைக்குப் பின்னால் மறைந்து நின்ற ஆன்மிகப் போட்டிக்காக, தொலைக்காட்சி நிலையம் தன் சிறகுகளை விரித்து நாடு முழுவதும் ஒளிபரப்பக் காத்துக் கிடந்தது.

இதனால் இந்தக் குத்துச் சண்டையைப் பார்ப்பவர்களின் எண்ணிக்கை பெருமளவில் பெருகியே இருந்தது.

சண்டைக்கான நாள் வந்தது.

அதாவது 1964 பிப்ரவரி 25 ஆம் நாள் வந்தது!

மால்கம் மியாமி வந்துவிட்டார். தனியறையில் துஆவை இருவரும் இணைந்தே செய்தார்கள். மால்கம் தொழுகைக்கு மேல் தொழுகையாக தொழுது கொண்டேயிருந்தார்.

காலை 10 மணி. சண்டை நடக்கும் மேடையைச் சுற்றி 43 பத்திரிகையைச் சார்ந்தவர்கள் அமர்ந்திருந்தார்கள். இந்தப் பத்திரிகையாளர்கள் சோனி லிஸ்டனின் வரவை வழிமேல் விழி வைத்துக் காத்திருந்தார்கள்.

கேசியஸ் கிளேதான் முதன் முதலில் சண்டை மேடைக்கு வந்தார். முழுமையாகத் தன் உடலைப் போர்த்திக் கொண்டிருந்தார். முன் வரிசையில் அமர்ந்திருந்த பத்திரிகை யாளர்கள் அவர் மீது ஏளனங் கலந்ததோர் பார்வையை வீசினார்கள்.

இன்னும் சில நிமடங்களில் சாகப் போகின்றவனை இப்போது உயிரோடு பார்த்துக் கொண்டிருக்கின்றோம் என்ற பாங்கில்தான் அவர்களின் பார்வை அமைந்திருந்தது.

அடுத்த சில நிமடங்களுக்கெல்லாம் லிஸ்டன் மேடையை நோக்கி நடந்தான்.

வளையமென வீற்றிருந்த பார்வையாளர்களும், பத்திரிகையாளர்களும் கரவொலி எழுப்பி, வாழ்த்து முழக்கங்களை அதிர்ந்தது, அவனை மமதை கொள்ள செய்து, அவன் நடையில் தென்பட்ட திமிரைப் தினவு கொள்ளச் செய்தனர்.

லிஸ்டன் சென்ற வருடம்தான் 'பேட்டர்ஸன்' என்ற குத்துச் சண்டை வீரனை நிரந்தரமாக அழித்திருந்தான்.

எடையில் சோனி லிஸ்டன் 218 பவுண்ட்; கேசியஸ் கிளேயை விட இரட்டிப்பு அனுபவமுள்ளவன்.

அதுவரை சோனி லிஸ்டன் 36 சண்டைகளில் அனுபவமுள்ளவன். கேசியஸ்

**ஓர்லாண்டோ தாக்குதல்**

விளைவு. . . அமெரிக்காவின் ஃபுளோரிடா மாகாணத்தில் ஓர்லாண்டோவில் இரவு விடுதி ஒன்றில் (ஓரின சேர்க்கையாளர்கள் கூடும் விடுதி) உமர் மத்தீன் என்பவனால் துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது. இதில் 50 அமெரிக்கர்கள் கொல்லப்பட்டனர். இதற்கு காரணம் முஸ்லிம் மற்றும் இஸ்லாமிய தீவிரவாதம் என்ற பிரச்சாரம் செய்யப்பட்டது.

ஆனால் பின்னர் மதீன் என்பவனும் போதைக்கு அடிமையான ஒருவன் என்பதும் அவனும் ஓர் ஓரினசேர்க்கை யாளன் என்பதும் தெரிய வந்தது. அவன் அந்த இரவு நேர விடுதிக்கு அடிக்கடி வந்து செல்பவன். பின்னர் யாருக்காக இந்த வேலையை செய்தான் என்பது வெளிப்படவில்லை. ஆனால் இதனால் பலனடைந்தது டொனால்ட் டிரம்ப் என்பவரே.

ஆனால் இந்த செய்திகள் பரபரப் பான வெளிவந்துக் கொண்டிருந்த நேரத் திலும் ஊடகங்களை ஆக்கிரமித்து கொண்டிருந்தவர் முஹம்மது அலீ அவர்கள். எனவே இறந்த பின்னரும் அலீ இஸ்லாத்தை முன்நிறுத்திக் கொண்டே இருந்தார்.

கிளே 19 சண்டைகளில் மட்டுமே கலந்து கொண்டிருந்தார்.

ஆனால் கேசியஸ் கிளேயிடமிருந்த ஒருவித வெறிக்கு லிஸ்டனின் வெறி மிகவும் குறைவு.

இந்த வெறியும் அதைத் தொடர்ந்து வந்த குமுறலும் தேவையில்லாதது; பீதியின் வெளிப்பாடு என்று பேசினர் பத்திரிகையாளர்கள்.

கேசியஸ் கிளே மேடையில் ஏறியதும் முதல் அறிவிப்பு:

“கேசியஸ் கிளே சில சாங்கியங்களைக் கடைப்பிடிப்பதில்லை”

அதனால் அவருக்கு டாலர் 2500 அபராதம் விதிக்கப்படுகின்றது என்றது அந்த அறிவிப்பு.

கரவொலி எழுப்பி இந்த அறிவிப்பை வரவேற்றனர் குழுமியிருந்தோர்.

சற்றும் கவலை கொள்ளவில்லை கேசியஸ்!

முதல் சுற்றுக்கான மணி அடித்தது.

அரங்கம் நிசப்தமானது.

இருவரும் நெருங்கி வந்தனர்.

எடுத்த எடுப்பில் தன்னை சரியாக மறைத்துக் கொண்டு, தனது முழுப்பலத்தையும் பிரயோகித்து ஒரு குத்து விட்டான் சோனி லிஸ்டன்.

இந்தக் குத்தோடு கேசியஸ் மார்சிலஸ் கிளேயின் குத்துச் சண்டை வரலாறு ஒரு முடிவுக்கு வந்திருக்க வேண்டும்.

ஆனால் குத்து வந்த வேகத்தைவிட அதிகமான வேகத்தில் கேசியஸ் கிளே, பின் வாங்கிவிட்டார்.

அதன் பிறகு அதே சுற்றில் பல குத்துக்களைத் தந்தான் சோனி லிஸ்டன். கேசியஸ் கிளே இந்தக் குத்துக்களில் பலவற்றைச் சமாளித்தார். பலவற்றைத் தன் உடலில் ஏற்றுக் கொண்டார். முகத்தை மறைத்துக் கொண்டார்.

இந்தச் சண்டையில் ஒரு தெளிவான வியூகத்தோடு நின்றார் கேசியஸ் கிளே!

லிஸ்டன் தளரும் வரை இப்படியே சமாளிப்பது என்றும் லிஸ்டன் தளர்ந்த பின்னர், தன்னுடைய வலுவான தாக்குதலைத் தொடர்வது என்றும் திட்டமிட்டிருந்தார்.

இந்த அடிப்படையிலேயே தன்னுடைய பயிற்சியையும் அமைத்துக் கொண்டிருந்தார்.

நான்காவது சுற்று வரை கேசியஸ் கிளேயின் திட்டம் நிறைவேறியது.

ஐந்தாவது சுற்றில் லிஸ்டனின் குத்து ஒன்று கேசியஸ் கிளேயின் கண் இமைகளின் மேற்பகுதியில் பட்டுவிட்டது.

இரத்தம் கசிந்தது! இது அவருள் ஒரு மயக்கத்தை ஏற்படுத்தியது.

'சண்டையை இனிமேல் நம்மால் தாக்குப்பிடிக்கவியலாது. இனி நாம் இறந்து போக நேரிடலாம்' என எண்ணிய கேசியஸ் கிளே சண்டையிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளலாம் என எண்ணினார்.

இல்லை!

அழிவு அல்லது அல்லாஹ்வின் பாதையில் வாழ்வு என முடிவு செய்த பின்னர் பின்வாங்குவது என்ற பேச்சுக்கே இடமில்லை.

சமாளித்துக் கொண்டு நின்றார் கேசியஸ் கிளே!

ஆறாவது சுற்று ஆரம்பமானது.

இதுவரை சோனி லிஸ்டன் குத்துக்களைத் தடுப்பதற்கு நின்ற கேசியஸ், இப்போது தன்னுடைய மொத்த பலத்தையும் கொண்டு ஒரு குத்துவிட்டார்.

லிஸ்டனின் முகத்தில் வாகாய் வீழ்ந்தது. லிஸ்டன் தரையில் வீழ்ந்தான். நடுவர் அவனைச் சுற்றி சுற்றி வந்தார். எழவில்லை லிஸ்டன்! எழவே இல்லை!

கேசியஸ் மார்சிலஸ் கிளே வென்றார் என்ற அறிவிப்பு, அரங்கத்தை நிரப்பிற்று.

மீண்டும், மீண்டும் இந்த ஒலி எழுந்து கொண்டேயிருந்தது.

வெற்றியின் உச்சியில் மால்கம், கிளே ஆகியோர் கட்டித் தழுவி கண்ணீரால் தங்களைக் குளிப்பாட்டிக் கொண்டனர்.

கேசியஸ் கிளே "முஹம்மத் அலீ கிளே" என்றானார்.

கேசியஸ் மார்சிலஸ் கிளேயின் வாழ்க்கையில் மால்கம் ஏற்படுத்திய மகத்தான மாற்றத்தை, முஹம்மத் அலீ கிளேயின் வாழ்க்கையை எழுதியவர். இப்படிக் குறிப்பிடுகின்றார்.

"மால்கம் கேசியஸ் கிளேக்கு எப்படிப்பட்ட அறிவுரைகளை வழங்கினார் என்பது தெரியவில்லை; எனினும் கேசியஸ் மார்சிலஸ் கிளேயை இஸ்லாமியச் சமுதாயப் பேரவையில் இணைத்திடுவதற்கு மால்கம் தான் மிக முக்கியமான கருவியாக இருந்தார்."

Mohammed Ali, Page:188

அலீ (ரலி) அவர்களின் வீரத்தை முன்னிறுத்தி கேசியஸூம், மால்கம் xம் தெரிவு செய்த பெயரே "முஹம்மத் அலீ".

அடுத்த நாள் பத்திரிகையாளர்கள் முஹம்மத் அலீயைச் சூழ்ந்து கொண்டார்கள். அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது பற்றி அவருடைய கருத்துக்களைக் கேட்டார்கள். அதில் அவர் இப்படிப் குறிப்பிட்டார்.

"அல்லாஹ் ஒருவனைத் தவிர வேறு இறைவன் இல்லை என்று நான் உறுதி கூறுகின்றேன். இனி நான் இஸ்லாமிய சமுதாயப் பேரியக்கத்தின் ஓர் அங்கம். நான் என்னை இணைத்துக் கொண்டிருக்கின்ற இஸ்லாம் 75 கோடி முஸ்லிம்களால் பின்பற்றப்படுகின்றது. இப்போது எனக்கு 75 கோடி சகோதர சகோதரிகள் இருக்கின்றார்கள்."

சிறிது காலஞ்சென்ற பின் பிளேட் பேட்டர்சன் என்ற குத்துச் சண்டை வீரன் ஓர் அறிவிப்பைச் செய்தான். அதில், "தான் என்னபாடுபட்டாகிலும் இந்த முஸ்லிமிடமிருந்து 'உலகக் குத்துச் சண்டை வீரன்' என்ற பட்டத்தைக் காப்பாற்றியேயாக வேண்டும். அதற்காக முஹம்மத் அலீயுடன் மோதிடத் தயாராக இருக்கின்றேன்" என்றான்.

**சண்டை நடந்தது.**

முஹம்மத் அலீயிடம் வாங்கிய குத்துக்களின் விளைவாக மருத்துவ செலவுகளுக்கு தனது வீட்டை பேட்டர்சன் விற்றுவிட வேண்டியதாயிற்று.

கேசியஸ் மார்சிலஸ் கிளேயை, முஹம்மத் அலீ என்றாக்கி விட்டு மால்கம் ஹார்லேம் திரும்பினார்.

**- அபூ கதீஜா**

# அல் குத்ஸ் தினம்





***நான் நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களிடம் கேட்டேன் "பூமியில் எது முதல் மஸ்ஜித்?" "புனித மிக்க மஸ்ஜிதுல் ஹரம் (கஅபா)" என பெருமானார் (ஸல்) அவர்கள் சொன்னார்கள். அடுத்து எது? என நான் கேட்டேன். தொலைவில் உள்ள (மஸ்ஜிதுல் அக்ஸா) என பெருமானார் (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள்.*** **– அறிவிப்பு : அபூதர் (ரலி), முஸ்லிம்**

***பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள் "மூன்று பள்ளிவாசல்களைத் தவிர வேறெங்கும் நன்மையை நாடி பயணம் செய்வது என்பது இல்லை. ஒன்று மஸ்ஜிதுல் ஹராம், மஸ்ஜிதுன் நபவி என்ற என்னுடைய பள்ளிவாசல், பைத்துல் முகத்திஸ் என்ற மஸ்ஜிதுல் அக்ஸா".*** **– ஆதாரம் : புகாரி, முஸ்லிம்**

*பாலஸ்தீனத்தில் - ஜெரூசலத்தில் அமைந்துள்ளது அல் அக்ஸா மஸ்ஜித்.*

*இந்த ஜெரூசலம் (பைத்துல் முகத்திஸ்) அதில் அமைந்துள்ள அல்அக்ஸா மஸ்ஜித் தான் நமது முதல் கிப்லா "தொழுகையில் முன்னோக்குமிடமாக" இருந்தது.*

*பெருமானார் (ஸல்) அவர்களின் பெயரால் நிறுவப்பட்ட மதினா பள்ளிவாசலிலும் கிப்லா இதை நோக்கியே அமைந்திருந்தது.*

*17 மாதங்களுக்குப் பின் பின்வரும் இறைவசனம் கிப்லாவை "கஅபா"வை நோக்கித் திருப்பிற்று. நபியே "நாம் உம்முகம் அடிக்கடி வானத்தை நோக்கிட காண்கின்றோம். எனவே, நீர் விரும்பும் கிப்லாவின் பக்கம் உம்மைத் திடமாகத்திருப்பி விடுகின்றோம். ஆகவே நீர் இப்போது (மக்காவின்) மஸ்ஜிதுல் ஹராம் பக்கம் உம் முகத்தைத் திருப்பிக்கொள்ளும். (முஸ்லிம்களே) நீங்கள் எங்கிருந்தாலும் உங்கள் (முகங்களை) அந்தப் பக்கம் திருப்பிக்கொள்ளுங்கள்." (அல்குர்ஆன் : 2:144)*

*விண்ணேற்றம் (மிஹ்ராஜ்) என்ற வரலாற்று சிறப்புமிக்க பயணத்தின் மையப்பகுதி அல் அஸ்கா மஸ்ஜித்தான். (காண்க : அல்குர்ஆன் 17:1)*

*இதனால் பைத்துல் முகத்திஸ் (ஜெருசலம்) முஸ்லிம்களின் வரலாற்றின் பிரிக்க முடியாத ஒரு பகுதி. அதை பிரிக்க யூதர்கள் தொடர்ந்து முயற்சி செய்து வருகிறார்கள். இப்போது,*

*உலகம் முழுவதும் உள்ள முஸ்லிம்களால் ரமழான் மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமை அல் குத்ஸ் தினமாக அனுசரிக்கப்படுகிறது. யூதர்களின் (ஜியோனிச) ஆக்கிரமிப்புகளிலிருந்து ஜெருசலத்தை பாதுகாக்க இந்த தினம் உலக நாடுகள் முழுவதும் அனுசரிக்கப்பட வேண்டும், பொது நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும் என்பதை இஸ்லாமிய நாடுகளின் கூட்டமைப்பு* (Organisation of Islamic Cooperation - OIC) *1988 ஆம் ஆண்டு அறிவித்தது.*

*பாலஸ்தீனில் யூதர்களால் அடக்கு முறைகளுக்கு உள்ளாக்கப்படும் மக்களுக்கு உலக முஸ்லிம்களின் உதவியும், ஒத்துழைப்பும்*

என்றென்றும் உண்டு என்ற செய்தியை, உண்மையை இந்த தினம் உறுதி செய்கின்றது. அடக்கு முறைகளுக்கும், அநீதிகளுக்கும் உள்ளாகும் அனைத்து சமுதாய மக்களுக்கும் "அல் குத்ஸ்" தினம் பொதுவானது. ஆக இந்த தினம் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலை முழக்க தினம்.

பாலஸ்தீனில் உள்ள காசா, மேற்கு கடற்கரை மற்றும் கிழக்கு ஜெருசலேம் ஆகிய இடங்களில் பெரும் நிலபரப்பை இஸ்ரேல் ஆக்கிரமித்து வைத்துள்ளது. இந்த ஆக்கிரமிப்புக்களில் இருந்து வெளியேற வேண்டும் என்ற ஐ.நா. பாதுகாப்பு அவையின் தீர்மானம் 242-ஐ நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும்,

1948ஆம் ஆண்டு பாலஸ்தீனில் இருந்து அநியாயமாக விரட்டப்பட்டு அகதிகளாக மாறியுள்ள மக்களுக்கு மீண்டும் தங்கள் சொந்த இடம் திரும்பிட வழிவகை செய்ய வேண்டும் என்ற ஐக்கிய நாடுகளின் தீர்மானம் 194-யும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் அல் குத்ஸ் தினத்தில் உலக முஸ்லிம்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

தொடரும் இஸ்ரேலின் அநியாயங்கள், கொலை செய்யப்படும் குழந்தைகள்

1948இல் சூழ்ச்சிகளினாலும், சூது மதிகளினாலும் உருவாக்கப்பட்ட இஸ்ரேல் இன்று வரை தனது அநியாயங்களை நிறுத்தவில்லை. வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் படுகொலைகளை நடத்தி வருகிறது. இஸ்ரேலின் இந்த நடவடிக்கைகள் அனைத்தும் மனித இனத்திற்கு எதிரான குற்றங்கள். தினம், தினம் அழுகுரல்களும், கதறல்களும் பாலஸ்தீன மக்களை கவ்விக் கொண்டுள்ளது. இஸ்ரேலின் தாக்குதல் களினால் ஒவ்வொரு நாட்களும் ஒரு யுத்தத்திற்கு ஓர் ஆக்கிரமிப்பிற்கு உள்ளாகி வருகின்றார்கள் பாலஸ்தீன மக்கள்.

ஒவ்வொரு வருடமும் இஸ்ரேல் இராணுவனத்தினரால் கொல்லப்படும் பாலஸ்தீன குழந்தைகளின் எண்ணிக்கை 500 முதல் 700 வரை ஆகும். இவை உலகத்தில் எங்கேயும் நடக்காதவை.

இஸ்ரேலின் சிறைச்சாலைகளில் அடைப்பட்டிருக்கும் பாலஸ்தீன குழந்தைகளில் 100க்கும் மேற்பட்ட குழந்தைகள் சுமார் 12-15 வயது வரையிலானவை.

இஸ்ரேல் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் பொழுதே 75 சதவிகிதம் குழந்தைகள் தாக்குதலுக்கும் தொந்தரவுக்கும் உள்ளாகின்றன. பாலஸ்தீன குழந்தைகளின் பாதுகாப்பு அமைப்பு னுஊஐஞ (னுநகநஉந டிக ஊாடைன ஐே- வநசயேவழையேட ஞயடநளவநே) யின் அறிக்கையின் படி 40 சதவிகிதம் கைதுகள் நடு இரவில் இருந்து விடியற்காலை 5 மணிக்குள் வரை தான் நடக்கின்றன. நடு இரவில் வந்து வீடுகளின் கதவுகளை தட்டுகின்றனர். கதவுகள் திறக்கப்படவில்லை என்றால் அவை உடைக்கப்படுகின்றன.

அங்கே தூங்கி கொண்டிருக்கும் குழந்தைகளை தூக்கி செல்கின்றனர் இஸ்ரேலிய இராணுவத்தினர். இந்தக் குழந்தைகளின் மீது சுமத்தும் குற்றம் எல்லாம் அவர்கள் இஸ்ரேலிய படைகளின் மீது கற்களை தூக்கி வீசினர் என்பதே. இப்படி அநியாயத்தின் முழு உருவமாக திகழ்கின்றது இஸ்ரேல்.

## 80 நாடுகளில் எழும் எதிர்ப்பு

கிட்டத்தட்ட 80 நாடுகளில் அல் குத்ஸ் தினம் அன்று அணிவகுப்புகளும், பொது கூட்டங்களும் நடத்தப்படுகின்றன. இதில் பாலஸ்தீன விடுதலையை முன் வைத்தும், இஸ்ரேலிய பயங்கரவாதங்களை நிறுத்தக் கோரியும் போராட்டங்கள் நடைபெறு கின்றன. இஸ்ரேலை புறக்கணியுங்கள், பாலஸ்தீனை விடுதலை செய்யுங்கள், இனப்படுகொலைகளுக்கு நிதி உதவி அளிப்பதை நிறுத்துங்கள் என்ற முழக்கங்கள் எழுப்பப்படுகின்றன. இந்தப் போராட்டங் களில் அனைத்து தரப்பு மக்களும், குறிப்பாக சில யூத ரபிக்களும் கலந்து கொண்டு பாலஸ்தீன மக்களுக்கு தங்கள் ஆதரவை தெரிவிக்கின்றனர்.

*பாலஸ்தீன விடுதலை குறித்து உலகத் தலைவர்களின் பார்வைகள்*

*பாலஸ்தீனியர்களின் விடுதலை இல்லாமல் நம்முடைய விடுதலை முழுமை பெறாது.* **- நெல்சன் மண்டேலா**

*பாலஸ்தீனியர்களின் சுதந்திரம் அவர்களிடமே ஒப்படைக்கும் வரை, இஸ்ரேலின் ஆக்கிரமிப்புகளுக்கு எதிரான நிலையே இந்தோனேசியா எடுக்கும்* **- இந்தோனேஷியா அதிபர் சொகர்னோ**

*இஸ்ரேலின் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த முடியாமல் உலகத்தில் உள்ள அனைத்து அரசாங்கமும் செயல் இழந்து நிற்கிறது. பாலஸ்தீனியர்களை பாதுகாக்கும் முயற்சியில் நாம் நேரடியாக இறங்கிட வேண்டும். ஒட்டு மொத்த உலகமும் இஸ்ரேலை புறக்கணிக்க வேண்டும்.* **- மகாதீர் முஹம்மது - மலேசியாவின் முன்னாள் பிரதமர்**


*எப்படி இங்கிலாந்து ஆங்கிலேயர்களுக்கு சொந்தமோ, பிரான்ஸ் பிரெஞ்சுகாரர்களுக்கு சொந்தமோ அவ்வாறே பாலஸ்தீன் அரபுகளுக்கே சொந்தமானது. யூதர்களை அரபுக்களின் மேல் திணிப்பது தவறு. மனித தன்மையற்ற செயல். கண்டிப்பாக இது மனித இனத்திற்கு எதிரான குற்றம்.* **- அண்ணல் காந்தியடிகள்**

***காந்திஜியின் அறிவிப்பையும் அறிந்திட படியுங்கள் - பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு.***

## பாலஸ்தீன் பற்றி காந்தி அடிகள் சொன்னதென்ன?

*1938 நவம்பர் திங்கள் 26 ஆம் நாள், ஹரிஜன் என்ற பத்திரிகையில் காந்தியடிகள் எழுதிய கட்டுரை ஒன்றின் தமிழாக்கத்தை இங்கே தருகின்றோம். இந்த ஹரிஜன் பத்திரிகை காந்திஜியே நடத்தி வந்த பத்திரிகையாகும்.*

*இந்தக் கட்டுரை வெளிவந்த காலங்களில், யூதர்கள் காந்தியடிகளைப் பலவழிகளில் அணுகினார்கள்.*



*காந்தியடிகளுக்குப் பல யூத நண்பர்கள் இருந்தார்கள். இவர்கள் தென்னாப்பிரிக்காவில் வைத்து காந்தியடிகளுக்கு பழக்க மானவர்கள். இப்படிக் காந்தியடிகளுக்குப் பழக்க மானவர்கள் அனைவரும் யூத பயங்கரவாத அமைப்பாகிய 'ஜீயோனிசம்' என்ற அமைப்பைச் சார்ந்தவர்கள்.*

*யூத தீவிரவாத அமைப்பைச் சார்ந்த அனைவரும் காந்தியடிகள் பாலஸ்தீனைப் பிளந்திட சம்மதம் தெரிவிக்க வேண்டும். பிளக்கப்பட்ட பாலஸ்தீனின் ஒரு பகுதியில் யூதர்களைச் குடியமர்த்திட மேற்கொள்ளப் படும் முயற்சிகளுக்கு ஆதரவு தந்திட வேண்டும் என்றெல்லாம் கேட்டுக் கொண்டார்கள்.*

*ஆனாலும் காந்தியடிகள் தனது நிலையில் உறுதியாக நின்றார்கள்.*

*காந்தியடிகள் அன்று எடுத்த அந்த நிலையே இந்திய அரசின் நிலையாகவும் இருந்தது; நாடு விடுதலையடைந்த நாள்களில்.*

*காங்கிரஸிலிருந்த ஆர்.எஸ்.எஸ். காரர் என்றறியப்பட்ட நரசிம்மராவ், அவரைத் தொடர்ந்து ஆட்சியில் அமர்ந்த பாசிச பாரதீய ஜனதா கட்சி அரசு ஆகியவற்றால்தான் இந்தியாவின் பாலஸ்தீன கொள்கை திசைமாறிப் போய் துரோகத்தைத் தொட்டது. இந்தப் பின்னணியில் காந்திஜி சொன்னதென்ன என்பதைப் பார்ப்போம்.*

## காந்திஜி சொன்னதென்ன?

*'பல கடிதங்கள் (காந்திஜிக்கு) வரப்பெற்றேன். இந்தக் கடிதங்கள் பாலஸ்தீன் பற்றிய எனது கருத்துக்களை நான் வெளிப்படையாகச் சொல்லிட வேண்டும்*

எனக் கேட்டுக் கொண்டன. அதே போல் ஜெர்மனியில் யூதர்கள் எப்படி யெல்லாம் அநீதிகளுக்கு ஆட்படுத்தப்பட்டார்கள் என்பது பற்றியும் என் கருத்துக்களைக் கேட்டிருந்தன அந்தக் கடிதங்கள். . .'

"நான் யூதர்களுக்காக அனுதாபப் படுகின்றேன். என்னுடைய நண்பர்கள் வழி அவர்கள் நீண்ட காலமாக கொடுமைப் படுத்தப்பட்டு வருகின்றார்கள் என்பதை நான் அறிந்து வருகின்றேன். யூதர்கள் கிறிஸ் தவத்தின் தீண்டத்தகாதவர்கள். அவர்களை கிறிஸ்தவர்கள் எப்படி நடத்தி னார்கள் என்பதற்கும் இந்தியாவில் தீண்டத்தகாதவர் களை இந்துக்கள் எப்படி நடத்தினார்கள் என்பதற்கும் இடையே வேற்றுமைகள் அதிகமில்லை."

"யூதர்களை தீண்ட தகாவதவர்களாக நடத்திட மத அங்கீகாரம் அடிப்படையாகக் காட்டப்பட்டது. இந்தியாவிலும் மத அங்கீகாரத்தின் அடிப்படையில் தாம் ஒரு சமூகம் தீண்டத்தகாதவர்களாக நடத்தப் பட்டார்கள். மத அடிப் படையில் தான் இரண்டு சமூகங்கள் மீதும் கொடுமைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன."

"நான் யூதர்கள் மீது அனுதாப் படுவதற்குக்காரணம், அவர்களில் பலர் எனக்கு நண்பர்கள் என்பதால் மட்டுமல்ல. அதற்குப் பல பொதுவான உலகளாவிய காரணங்களும் உண்டு."

"நான் அவர்கள்பால் கொண்ட அனுதாபம் நீதியின் பார்வையிலிருந்து என்னைக் குருடாக்கிடவில்லை. யூதர்களுக் கென ஒரு தனிநாடு வேண்டும் என்ற ஓலம் பொருத்தமானதாக எனக்குத் தெரியவில்லை. யூதர்களுக்கு பாலஸ்தீனத்தில் ஒரு நாட்டை அமைக்க பைபிள் -இல் ஆதாரங்களைத் தேடுகின்றார்கள். அவர்களில் சிலர் இப்போது பாலஸ் தீனத்திற்கு வந்துவிட்டதையும், அவர்கள் பாலஸ்தீனின் மேல் பேராசையை வளர்த்துக் கொண்டதையும், சாட்சியத்திற்கு அழைக்கின்றார்கள். தாங்கள் பிறந்து வளர்ந்த நாட்டை, அவர்கள் தங்கள் வாழ்வுக்குத் தேவையானதைச் சம்பாதிக்கும் நாட்டை, அவர்கள் ஏன் தங்கள் தாய் நாடாகக் கொள்ளக் கூடாது? இதைத்தானே உலகெங்கிலுமுள்ள மக்கள் செய் கின்றார்கள். அதையே ஏன் யூதர்களும் செய்திடக்கூடாது?"

"பாலஸ்தீனம் அரபு மக்களுக்குச் சொந்தமானது. எப்படி இங்கிலாந்து இங்கிலாந்தை சார்ந்தவர்களுக்கு சொந்த மானதோ, அதேபோல் பாலஸ்தீன் அரபுகளுக்குச் சொந்த மானது. யூதர்களை அரபுக்கள் மீது திணிப்பது தவறானது. மனிதாபிமானமற்றது. பாலஸ்தீன் மீது பிரட்டனுக்குத் தரப்பட்ட அதிகாரம் தற்காலிகமானது. அது (முதல்) உலகப் போரோடு முடிந்துபோனது."

"நிச்சயமாக யூதர்களைப் பாலஸ்தீன் மீது திணிப்பது மனித இனத்திற்கெதிரான குற்றம். அங்கே பாலஸ்தீனில் யூதர்களை முழுமையாகக் குடியேற்றினாலும் சரி அல்லது பாலஸ்தீனை பிளந்து அதில் ஒரு பகுதியில் யூதர்களைக் குடியேற்றினாலும் சரி அது மனித இனத்திற்கெதிரான குற்றம்."

"இந்தப் பிரச்னைக்கிருக்கும் கண்ணியமான வழி, யூதர்கள் அவர்கள் பிறந்து வாழுமிடங்களில் அவர்களைக் கண்ணியமாக நடத்திட வேண்டும் எனக்கோருவதே! பிரான்ஸ் நாட்டில் பிறந்த யூதர்கள் பிரஞ்சு குடிமக்களே!"

'பாலஸ்தீனில் தங்களுக்கு ஒரு தேசம் வேண்டும் எனக் கேட்பதன் மூலம் யூதர்கள் தாங்கள் உலகெங்கிலுமிருந்து பாலஸ்தீனை நோக்கி விரட்டப்பட வேண்டும் என விரும்புகின்றார்களா? அல்லது அவர்கள் உலகின் இதரப் பகுதியில் தாங்கள் விரும்பினால் தங்கிட ஒரு உரிமையும் தாங்கள் விரும்பினால் பாலஸ்தீனம் சென்றிட ஒரு உரிமையும் இருக்க வேண்டும் என விரும்புகின்றார்களா?'

"ஜெர்மனியிலிருந்து யூதர்கள் வெளியேற்றப்படு கின்றார்கள் என்ற ஈனச் செயலை மிகவும் சிறந்தச் செயல்போல் காட்டுவதற்கே யூதர்களுக்குக்கோர் தனிநாடு வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்

படுகின்றது. யூதர்களுக்குத் தனி நாடு வேண்டும் என்ற கோரிக்கை, ஜெர்மனியில் யூதர்களுக் கிழைக்கப்படும் கொடுமைகளை நியாயப்படுத்துவதைப் போலிருக்கின்றது..."

"ஆனால் ஜெர்மனியில் யூதர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு வர லாற்றில் எங்கேயும் ஈடு இணை இல்லை. அன்றைய நாட்களின் கொடுங்கோலர்களுக்கு ஹிட்லரின் அளவுக்கு பைத்தியம் பிடித்ததைப்போல் தெரியவில்லை. அவன் இதையொரு மதவெறியோடு செய்திருக் கின்றான். அவன் (ஹிட்லர்) பயங்கரவாதங்கள் நிறைந்ததொரு தேசியவாதத்தை வளர்க் கின்றான். அஃது அவன் வளர்க்கும் புதிய மதம். இந்தப் பயங்கரவாத தேசியவாதத்தால் செய்யப்படும் எல்லா தீவிரவாதங்களும், மனிதாபிமானமற்ற செயல்களும் தேசிய நலன்மிக்க செயல்களாகக் காட்டப் படுகின்றன. அந்த மனிதாபி மானமற்ற குரூர செயல்களுக்கு இம்மையிலும் மறுமையிலும் கூலி கிடைக்கும் என்கின்றான் ஹிட்லர்."

"ஒரு தனிமனிதனின் தவறுக்கு ஓர் இனமே பழிவாங்கப் படுகின்றது. அதில் காட்டப்படும் வேகம் நம்மை மலைக்கச் செய்கின்றது. நீதிக்காகவும் அநியாயத்திற் கெதிராகவும் ஒரு போர் தொடுக்கப்பட வேண்டும் என்றால் அதற்கு மிகவும் பொருத்தமான நாடு ஜெர்மனிதான். அப்படியொரு போர் தொடுக்கப்பெற்றால் ஓர் இனம் முற்றாக அழிக்கப்படுவதிலிருந்து பாதுகாக்கப்படும். அந்தப் போர் முழுமையாக நியாயப்படுத்தப்படும். ஆனால் நான் போர்களின் மீது நம்பிக்கை உடையவன் அல்ல."

"ஜெர்மனியில் யூதர்களின் மீது இழைத்த அநீதிகளுக்காகப் போர் தொடுக்கவில்லை என்றால் (உலக நாடுகள்) அதனுடன் குறைந்தபட்சம் கூட்டுச் சேராமலாவது இருந்திட வேண்டும். நீதியையும் ஜன நாயகத்தையும் ஒரு புறம் இலட்சியங்களாகப் பேசுபவர்கள் மறுபுறம் எப்படி ஹிட்லரோடு கைகோர்த்துக் கொள்கின்றார்கள் என்பது புரிந்திடவில்லை"

"தீவிரவாதத்தை எப்படியெல்லாம் செயல்படுத்திட இயலும் என்பதை ஜெர்மனி உலகுக்குக் காட்டிக் கொண்டிருக்கின்றது.

யூதர்கள் இந்தக் கொடுமைகளை எப்படிப் பொறுத்துக் கொள்வார்கள். அவர்களால் தங்கள் சுயமரியாதையை எப்படிக் காப்பாற்றிட இயலும். அவர்கள் எப்படி விரக்தியடையாமல் இருந்திட இயலும்...?"

"நான் ஒரு யூதனாக இருந்திருந்தால் அதுவும் ஜெர்மனியில் பிறந்த யூதனாக இருந்திருந்தால் என்னுடைய வாழ்க்கை தேவைகளை ஜெர்மனியிலேயே சம்பாதிப் பவனாக இருந்திருந்தால், நான் ஜெர்மனியை யே என்னுடைய தாய் நாடாகக் கொள்வேன்; கோருவேன். ஜெர்மனியை எனது தாய் நாடாகக் கோருவதற்கெதிராக எவ்வளவுப் பெரிய ஜெர்மானியன் என்னை எதிர்த்தாலும் எதிர்த்து நிற்பேன். என்னை எதிர்க்கும் ஜெர்மானியனிடம் என்னை வேண்டுமானால் சுட்டுக் கொன்றுவிடு. ஆனாலும் நான் ஜெர்மனியைவிட்டு வெளியேறிட மாட்டேன் என்றே கூறுவேன். என்னை வெஞ்சிறையில் தள்ளுங்கள் ஆனால் நான் ஜெர்மனியைவிட்டு வெளியேறிட மாட்டேன், என்றே அறைகூவல் விடுப்பேன். என்னை ஜெர்மனியை விட்டு யாரும் வெளியேற்றிட இயலாது. அதே போல் என்னை தரங்கெட்ட நடத்தைகளுக்கு ஆட்படுத்தினால் நான் அதை ஒத்துக் கொள்ளவும் மாட்டேன். இதில் ஏனையோர் என்னோடு சேர்ந்திட வேண்டும் என நான் எதிர்பார்த்திட மாட்டேன். தன்னந்தனியாக எதிர்த்து நிற்பேன். வேறு வழியின்றி எல்லோரும் என்னோடு சேருவார்கள். என்னைப் பின் பற்றுவார்கள். இதில் யூதர்கள் என்னுடைய முன் மாதிரியைப் பின் பற்றலாம்."

"யூதன் ஒருவன் தனியாகவோ அல்லது யூதர்கள் பலர் கூட்டாகவோ நான் இங்கே சொன்ன நடவடிக்கையை மேற் கொள்வார்கள் என்றால் அவர்களின் நிலைமை இத்தனை மோசமானதாக ஆகி இருக்காது என்பது திண்ணம்."

"தாங்களே முன்வந்து ஏற்றுக்கொள்ளும் கொடுமைகள், சகித்துக் கொள்ளும் சித்திரவதைகள் இவை உலகில் பல்வேறு அவைகளிலும் நிறைவேற்றப்படும் தீர்மானங்களைவிட வலுவானவை."

"தாங்களாகவே முன்வந்து ஏற்றுக் கொள்ளும் துன்பங்களும் துயரங்களும் அவர்களுக்கு ஓர் உள்பலத்தை ஆத்மபலத்தை வழங்கிடும். இந்தப் பலம் உலக அவைகளில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களைவிட வலிமைமிக்கது. உலகெங்கிலும் நிறைவேற்றப் படும் அனுதாப தீர்மானங்களை விட இந்த உள்ளார்ந்தபலம் வலுவானது."

"பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய நாடுகளெல்லாம் ஒன்றாய் சேர்ந்து ஜெர்மனியோடு ஒரு போரை பிரகடனம் செய்தால்கூட இந்த உள்பலம் கிடைக்காது. அநியாயத்தை எதிர் கொண்டு நிலைகுலையாமல் இருப்பதில் ஓர் அக மகிழ்ச்சி இருக்கின்றது."

"ஹிட்லரின் திட்டமிட்ட கொலைகள், ஒரு பெரும் இனப் படுகொலையில் முடியலாம். அதைக் கொண்டு ஹிட்லர் தனக்கும் யூதர்களுக்குமிடையேயுள்ள பகையைப் பறை சாற்றலாம். ஆனால் யூதர்களின் மனதை தயார்படுத்திட இயலும் என்றால் நான் கற்பனை செய்யும் அந்த இனப்படுகொலை கூட ஒரு பெரும் நன்றி கூறும் நிகழ்ச்சியாக அமையும். யூதக் கடவுளாகிய ஜெகோவா அந்த மக்களைக் காப்பாற்றிவிட்டதாக எடுத்துக் கொள்ள லாம்."

"ஏனெனில் இறைவனை அஞ்சி வாழ்பவர்களுக்கு மரணம் அச்சத்தைத் தராது. அது மிகவும் மகிழ்ச்சியான ஓர் தூக்கம். அந்த தூக்கத்திற்குப் பின்னால் துயிலெழுவார்கள்; அது புத்துணர்ச்சி மிக்கதொரு நிகழ்வாக அமையும்."

"நான் சொல்வதை செக்கஸ்லோவிய மக்களைவிட யூத மக்கள் பின்பற்றுவது நல்லது. சிறந்தது."

"தென்னாப்பிரிக்காவில், இந்தியர்கள் நடத்தும் சத்தியாகிரக வழிமுறைகளைப் பின்பற்றுவது யூதர்களுக்குப் பயன்பல பயக்கும். தென் ஆப்பிரிக்காவில் இந்தியர்கள் எந்த நிலையில் இருக்கின்றார்களோ அதே நிலையில்தான் யூதர்கள் ஜெர்மனியில் இருக்கின்றார்கள். இருநிலைகளிலும் நடக்கும் சித்திரவதைகள் மதத்தின் ஆதரவோடு நடக்கின்றன. அதிபர் குருக்கர் (President Kruger) வழக்கமாக இப்படிக் கூறுவார். வெள்ளைக் கிறிஸ்தவர்கள் ஆண்டவனால் தேர்ந்தெடுக்கப் பட்ட மக்கள். இந்தியர்கள் வெள்ளையர்களுக்கு ஏவல் புரிவதற்காக ஏற்படுத்தப்பட்ட தாழ்ந்த மக்கள். இது அவர்களின் அரசியல் நிர்ணயச் சட்டத்தின் பிரிக்க முடியாத ஒரு பகுதி. அவர்களின் அரசியல் சாசனங்கள் வெள்ளையர்களுக்கும், இதர நிறத்தவர்களுக்குமிடையில் எந்த ஒற்றுமையும் இல்லை என்றே கூறுகின்றது. அதில் (கீழானவர்களாக நடத்தப்படுபவர்களில்) ஆசிய நாட்டைச் சார்ந்தவர்களும் அடங்குவார்கள். அங்கே இந்தியர்களெல்லாம் சேரிகளை நோக்கித் தான் அனுப்பப் படுகிறார்கள். அதே போல்தான் யூதர்களும் ஜெர்மனியில் சேரிகளை நோக்கி அனுப்பப்படுகின்றார்கள்."

"இந்தியர்கள் எண்ணிக்கையில் மிகவும் குறைந்தவர்கள். தென்னாப்பிரிக்காவில் சத்தியாக்கிரக வழிகளைக் கை யாண்டார்கள். அவர்களுக்கு வெளி உலகத்திலுள்ளவர்கள் யாரும் உதவி செய்திடவில்லை. ஏன் இந்திய அரசாங்கம் கூட அவர்களுக்கு உதவி செய்திடவில்லை."

"யூதர்கள் ஜெர்மனியில் சிறந்த முறையில் ஒருங்கிணைக்கப் பட்டவர் களாகவே வாழுகின்றார்கள். அவர்கள் தென்னாப் பிரிக்காவில் வாழும் இந்தியர் களைவிட வசதி மிக்கவர்களாகவே ஜெர்மனியில் வாழுகின்றார்கள். அவர்கள் உலக மக்களின் ஆதரவையும் திரட்டி வைத்திருக்கின்றார்கள்."

"யூதர்களுக்கிடையே நெஞ்சுரமும் தொலைநோக்கும் உடையவர் ஒருவர் தலை

தூக்குவார் என்றால் அவர்கள் தங்கள் விரக்தியை நம்பிக்கையாகவும், நம்பிக்கையை நல்வாழ்வாகவும் மாற்றிட இயலும்."

"இன்று ஜெர்மனியில் நடக்கும் மனித வேட்டையை யூதர்கள் தங்கள் மத நம்பிக்கையுடன் எதிர்கொண்டால், அவர் களின் கடவுள் ஜெஹோவா மீதுள்ள நம்பிக்கையுடன் எதிர்கொண்டால், நிச்சய மாக அவர்கள் இந்த மனித வேட்டையை மத நம்பிக்கையின் பின்பலத்தோடு வெல்லலாம். அவர்களுக்குத் தேவைப்படுவதெல்லாம் சகிப்புத் தன்மையும், பொறுமையும்."

"அவர்கள் மீது இழைக்கப்படும் மனிதாபிமானமற்றச் செயல்களை அவர்கள் ஆயுதமின்றி சந்திக்கலாம். சாதிக்கலாம். இதன் மூலம் ஜெர்மன் நாட்டு யூதர்கள், காலமெல்லாம் நிலைக்கும் நிரந்தர வெற்றியை அடையலாம். வெகு விரைவில் ஜெர்மன் நாட்டிலுள்ள அறிவாளிகளெல்லாம் அவர்களுக்கு உதவி செய்ய முன்வந்து விடுவார்கள். அதேபோல் அவர்கள் தங்கள் சகோதர ஜெர்மானியர்களுக்கு ஒரு பெரும் உதவியைச் செய்தவர்களாவார்கள். எல்லோரும் ஜெர்மானியர் என்று தலை நிமிர்ந்து நிற்கலாம்."

"ஜெர்மன் நாட்டைச் சார்ந்தவர் களுக்குச் சேவைகளைச் செய்வதன் மூலம் அவர்கள் தாங்கள் உண்மையிலேயே ஜெர்மன் நாட்டைச் சார்ந்தவர்கள் என்பதை நிரூபித் திருக்கலாம். இன்று ஜெர்மன் நாட்டின் பெயரை சேற்றுக்குள் இழுத்துக் கொண்டிருப்பவர்களிடமிருந்தும் அதைக் காப்பாற்றி இருக்கலாம்."

**பாலஸ்தீனில் வாழும் யூதர்களுக்கு**

"இனி பாலஸ்தீனில் இருக்கும் யூதர்களுக்கு ஒரு வார்த்தை! அவர்கள் பாலஸ்தீனில்தாம் குடியமர்வோம் என்று கூறுவதிலிருந்து அவர்கள் மிகவும் தவறான வழிக்குத்தான் சென்று கொண்டிருக்கிறார்கள் என்பதில் எனக்கு எந்த ஐயமுமில்லை."

"பாலஸ்தீன் பற்றி பைபிளில் சொல்லப்பட்டிருப்பது பூகோள ரீதியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றல்ல. அது உங்கள் உள்ளங்களில் உள்ளது. பூகோள ரீதியாக பாலஸ்தீன்தான் உங்கள் நாடு என நீங்கள் கருதுகின்றீர்கள் என்றால், நீங்கள் அங்கே ஆங்கிலேயர்களின் துப்பாக்கி முனையின் கீழ் நுழைவது தவறு. மத சடங்கு ஒன்றை குண்டுகளைக் கொண்டும், துப்பாக்கி களைக் கொண்டும் நிறைவேற்றுவது தவறு. அரபுக்கள் மனம் விரும்பி இடம் தந்தால் மட்டுமே நீங்கள் பாலஸ்தீனில் குடியிருக்க இயலும். அதற்கு நீங்கள் அரபுக்களின் இதயங்களில் இடம் பிடிக்க வேண்டும்."

"அரபுக்களின் இதயத்திலிருக்கும் இறைவன்தான் உங்கள் இதயத்திலும் இருக்கின்றான். நீங்கள் (யூதர்கள்) அங்கேயும் சத்யாகிரகத்தைத்தான் கடைபிடிக்க வேண்டும். அவர்கள் உங்களைச் சுட்டுக் கொன்றாலும் சகித்துக் கொள்ள வேண்டும். செங்கடலில் எடுத்து வீசினாலும் சகித்துக் கொள்ள வேண்டும். இதைச் செய்தால் உலக மக்களின் அனுதாபம் உங்களுக்கு (யூதர் களுக்கு) கிடைக்கும். அப்போது உங்களின் மத நம்பிக்கை நிறைவேறலாம். அரபுக்களை நம்ப வைப்பதற்கு ஆயிரமாயிரம் வழிமுறை களைக் கண்டுபிடிக்கலாம். ஆனால் நீங்கள் துப்பாக்கி முனையில் காரியம் சாதிக்க நினைக்கும் பிரிட்டனை நிராகரித்தாக வேண்டும்."

"இப்போதையை சூழலில் யூதர்கள், தங்களுக்கு எந்தப் பாதகத்தையும் செய்யாத மக்களை அழிப்பதில் ஆங்கிலேயர் களின் கூட்டாளிகளாகிவிட்டார்கள்."

"அரபுக்கள் செய்வதை நான் நியாயப்படுத்தவில்லை. மாறாக, அவர்கள் மீது அநியாயமாகத் திணிக்கப்படும் மக்களிடம், அவர்களின் சொந்த இடங்களை அநியாயமாக அபகரிக்கும் மக்களிடம் அவர்களும் அகிம்சையை கடைபிடிக்க வேண்டும் என்பதே என் எண்ணம். ஆனால் விருப்பு வெறுப்பற்ற வகையில் நியாயத்தைச் சொன்னால் அரபுக்கள் செய்வதில் எந்தத் தவறுமில்லை. இதுவே யதார்த்தம். அரபுக்கள் தங்களை எதிர்த்துவரும் பாரதூரமான தாக்குதல்களுக்கிடையேயும் தலைநிமிர்ந்து போராடி வருகின்றார்கள்."

“யூதர்கள் அஹிம்சாவழில் தாங்கள் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் என்பதை நிரூபிக்கட்டும். தீவிரவாதத்தின் வழி அதை சாதிக்க அவர்கள் முயற்சிக்க வேண்டாம். அவர்கள் மேலை நாட்டவர்களால் செய்யப்படும் சமுதாயப் புறக்கணிப்புகளை ஏற்றுக் கொள்ள வேண்டாம். மேலை நாட்டவர்கள் அவர்களைத் தீண்டத்தகாதவர்களாக ஆக்கிவிட்டு பின்னர் அடுத்தவர்களின் நிலங்களை ஆக்கிரமிக்க அவர்களுக்கு உதவி செய்கின்றார்கள்.”

“யூதர்கள் இப்போது இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களைப்போல் நடந்து கொள்ளவில்லை. இறைவனால் கைவிடப்பட்ட மக்களைப்போல் நடந்து கொள்கின்றார்கள். மேலை நாட்டவர்களும் அவர்களைஅப்படித்தான் நடத்து கின்றார்கள்.”

யூதன் மனிதனாக நடந்து கொள்வதன் மூலம் உலகின் கவனத்தையும், கண்ணியத்தையும் பெறலாம். அவர்கள் தங்களின் பல சேவைகளோடு அஹிம்சாவழி இன்னொரு சேவையை செய்யலாம். ஆனால் அவர்கள் நேர் எதிராகவே நடந்து கொண்டிருக்கின்றார்கள்.”

நாசிக்கள் எப்படி யூதர்களிடம் நடந்து கொண்டார்களோ அதை விட கொடுமையாக யூதர்கள் அரபுக்களிடம் நடந்து கொள்வதை பார்க்கும் பொழுது மிகுந்த வேதனை அடைகிறேன். **- ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்**

## இப்போது நடந்தது

இந்த வருடம் 26.6.2016 அன்று இஸ்ரேலிய இராணுவம் 1055 வெளி நாட்டவர்களை அல் அக்ஸா மஸ்ஜித்குள் அனுமதித்திருக்கின்றார்கள். இதனை முஸ்லிம்கள் எதிர்த்தார்கள். இஸ்ரேல் இராணுவம் சுட்டது பல முஸ்லிம்கள் காயமடைந்தார்கள்.

சர்வதேச விதிகளின் படி ரமழான் மாதத்தின் கடைசி 10 நாட்களில் (இஃதிகாஃபின் காலம்) முஸ்லிம் அல்லாதவர்கள் அனுமதிக்கப்படக்கூடாது.

இஸ்ரேல், இப்போது பைத்துல் முகத்திஸ் வளாகத்தில் இறந்த யூதர்களின் உடல்களைப் புதைத்து வருகின்றது. இதனையும் அங்கு வாழும் முஸ்லிம்கள் எதிர்த்து வருகின்றார்கள்.

## நமது வேண்டுகோள்

இஸ்ரேலின் பயங்கரவாதங்களை முழு உலகிற்கும் எடுத்து சொல்வோம். உலக முஸ்லிம்களுடன் இணைந்து நாமும் இந்த தினத்தை அனுசரித்து பாலஸ்தீன மக்களின் விடுதலைக்கு குரல் கொடுப்போம். நம்முடைய துவாக்களில் பாலஸ்தீன மக்களையும் அதேப் போன்று பாதிப்புக்கு உள்ளாகி நிற்கும் கஷ்மீர், ரோஹிங்கியா முஸ்லிம்களையும் இணைத்துக் கொள்வோம். அவர்களின் நல்வாழ்விற்காக துவா செய்வோம். அல்லாஹ் நம்முடைய அனைத்து நற்செயல்களையும் பொருந்திக் கொள் வானாக.


**இப்போது பரபரப்பான விற்பனையில்**




விலை ரூ. 30 மட்டுமே

**வேர்கள் பதிப்பகம்,**
**52/1, மண்ணடி தெரு, மண்ணடி,**
**சென்னை - 600 001.**
**தொடர்ப்புக்கு : 8148129887**

## கருப்பாயி என்கிற நூர்ஜஹான் நாவல்

# மாற்றத்திற்கெதிரான விஷமம்!

"மதம் மாறியவர்களுக்கும் மாற இருப்பவர்களுக்கும் அர்ப்பணம் என குறிப்பிட்டு, 'இது விவாதத்துக்கான நாவல்; வாருங்கள் மனந்திறந்து விவாதிப்போம்' என முன்னுரையில் ஆசிரியரால் அழைப்பு விடப்பட்ட நாவல் 'கருப்பாயி என்கிற நூர்ஜஹான்'.

அன்வர் பாலசிங்கம் என்பவரால் 2011ல் எழுதப்பட்டு கலங்கை பதிப்பகம் வெளியிட்டுள்ள இந்நூல் இன்று இந்துத்துவாதிகளால் அதிகம் பரப்பப்படுகிறது. சமூக வலைதளங்களில் இந் நாவல் கதைச் சம்பவங்களை காரணமாகக் கொண்டு வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்று வருகின்றன.

இந்த நாவலில் குறிப்பிடப்படும் சம்பவங்கள் உண்மையா? என அறிந்து கொள்வதற்காகவும், அது கட்டுக்கதை என்றால் விளக்குவதற்காகவும், தன் வாழ்வில் 55 ஆண்டுகளை தலித் விடுதலைக்காகவும், தீண்டாமை கொடுமைகளுக்கெதிராகவும் செலவிட்ட தியாகி டி.எம். உமர்பாரூக் (முன்னாள் பெயர் டி.எம். மணி) அவர்களும் தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் அறக்கட்டளை காப்பாளர், ஆக்கப்பூர்வ போராளி மு. குலாம் முஹம்மது அவர்களும் சம்பந்தப்பட்ட இடங்களுக்கு நேரில் சென்று ஆய்வு செய்ததோடு, விவாதங்களில் பங்கேற்று அம்பலப்படுத்திய விஷயங்களும் 'கருப்பாயி என்கிற நூர்ஜஹான்- கதை ஆசிரியர் அன்வர் பாலசிங்கத்துடன் நேர் முகம்' என்ற பெயரில் நூலாக வெளிவந்துள்ளது.

2016 ஜூன் 5 ஆம் தேதி இரவு சென்னையில் நடைபெற்ற இதன் வெளியீட்டு விழாவிற்கு என்னை அழைத்தார் வைகறை வெளிச்சம் இணை ஆசிரியர் மௌலானா கா.மு. இல்யாஸ் ரியாஜி.

அவசியம் வரவேண்டும் என அவர் அழைத்ததற்கு காரணம் 1981 மதமாற்றம் நடைபெற்ற மீனாட்சிபுரத்தில் களத்தில் இருந்தவன், தென் இந்திய இஷா அத்துல் இஸ்லாம் சபை பொறுப்பில் இருந்தவன் நான் என்பதற்காக, முதல் பிரதியை பெற்றுக் கொண்டு நான் உரையாற்றுகிற போது, மீனாட்சி புரத்தில் நான் நேரில் பார்த்த ஒரு விஷயத்தையும், இஷா அத் தலைவர் குடும்பத்தை பற்றி எனக்கு தெரிந்த ஒரு விஷயத்தையும் பதிவு செய்தேன். வந்திருந்த அனைவருக்கும் அவை ஆச்சரியமான செய்திகளாக இருந்தன.

அந்த செய்திகள் தான் என்ன? . . . . . . . . . .

*1981 பிப்ரவரி 19.*

*இயற்கை எழில் கொஞ்சும் மேற்கு தொடர்ச்சி மலையின் அடிவாரம்.*

*திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டையிலிருந்து கடையநல்லூர் செல்லும் சாலையில் பன்மொழி ஊரில் இருந்து 1.7 கி.மீட்டர் தூரமுள்ள தேன்பொத்தை ஊராட்சியின் மீனாட்சிபுரம் ஒட்டு மொத்த இந்தியாவையும் திரும்பிப் பார்க்க வைத்தது.*

*இல்லை. . . . இல்லை இந்தியத் தலைவர்களை தன்னகத்தே வரவழைத்தது.*

*அரசியல் தலைவர்கள் ஆச்சரியத்துடன் பார்க்க - இந்துத்துவ தலைவர்கள் அதிர்ச்சியுடன் மிரள அன்றாடம் படையெடுப்புக்கள் நடந்து கொண்டே யிருந்தன.*

*அந்த கிராமத்தில் நடந்து என்ன?*

*மாபெரும் மத மாற்றம்.*

*மீனாட்சி புரம் தீனாட்சிபுரமானது.*

*ஆம் "தீன்" (இஸ்லாம் மார்க்கம்) ஆட்சிபுரம் 'ரஹ்மத் நகரானது'.*

*படையெடுத்து வந்த தலைவர்கள் பக்குவமாகக் கேட்டார்கள்.*

*"பண ஆசை காட்டித்தானே உங்களை மதம் மாற்றினார்கள்?, அரபு நாடுகளுக்கு அனுப்பி வைப்பதாக சொல்லித்தானே மதம் மாற்றினார்கள்?"*

*கேட்டவர்களுக்கு உறுதியுடன் சொல்லப்பட்ட பதில் -*


*"எங்களை யாரும் மதம் மாற்றவில்லை."*

*அப்படியானால்...? மனம் மாறினோம்; ஆகவே மதம் மாறினோம்!*

*இங்கு என்ன இல்லை என்று அங்கே போனீர்கள்?*

*இந்து மதத்தில் இல்லாத ஒன்று இஸ்லாத்தில் இருக்கிறது. சமத்துவம், சகோதரத்துவம், சமூக நீதி.*

*எங்களிடத்தில் சொத்து இருக்கிறது - வயிற்றை நிரப்பிக் கொள்ள, விளை நிலங்கள்*




*இருக்கின்றன, வாழ்வை கழித்துக் கொள்ள - இருந்தும் என்ன பயன்? நாங்கள் அடிமை படுத்தப்பட்டல்லவா கிடக்கிறோம்.*

*காலிலே செருப்பு, தோளிலே துண்டு இதற்கு உரிமை இல்லை இங்கே! அரசுப் பேருந்துகளில் கூட அமர்ந்து போக முடியாத நிலை. எங்கள் பேரப்பிள்ளை வயதுக் கொப்பான சிறுவன் கூட 'டேய்' என விளித்து பெயர் சொல்லி அழைக்கும் அவமானம். பாதிக்கப்பட்ட நாங்களே காவல் நிலையத்தில் புகார் கொடுத்தால் அங்கே நாங்களே குற்றவாளியாக்கப்படும் சூழல். ஆக சமத்துவத்தை நாடினோம், சத்திய மார்க்கத்தை ஏற்றுக் கொண்டோம்.*

*இந்த உறுதியான பதிலை கேட்டு கேள்வி கேட்டவர்களெல்லாம் அதிர்ச்சியில் உறைந்து போனார்கள்.*

*இந்துத்துவ தலைவர்கள் விசாரணை கள் இப்படியிருக்க - இன்னொருபுறம் காவல்துறை, வருவாய் துறை, தாழ்த்தப் பட்டோர் நலத் துறை, மாவட்ட நிர்வாகம், மாநில அரசு, மத்திய அரசு என அனைத்தும்*

களமிறங்கி என்ன வேண்டும் உங்களுக்கு? "தாய் மதம் திரும்புங்கள்" என அன்பு கட்டளையுடன் கெஞ்ச, அத்தனையை யும் தைரியத்துடன் எதிர் கொண்டனர் மீனாட்சி புரத்தில் கலிமா சொன்ன ஏகத்துவ சிப்பாய்கள்.

இந்த இரு தரப்பு விசாரணைகளுக்கு மத்தியில் ஊடக வியலாளர்கள் விடுவார்களா?

தமிழ் நாட்டில் இருந்து மட்டுமல்ல இந்தியா முழுவதிலிருந்து ஏன் சர்வதேச அளவில் ஊடகவியலாளர்கள் வருகை தந்து நேர்காணல் நடத்தினர்.

"மதமாற்றம் தவறல்லவா?" என்ற ஊடக வியலாளர்களின் கேள்விக்கு தடுமாற்றமின்றி பதில் வந்தது.

"யார் சொன்னது மதமாற்றம் தவறு என்று? அது எங்கள் அடிப்படை உரிமை. இந்திய அரசியல் சட்டம் அதற்கு உத்தரவாதம் அளித்துள்ளது."

மதமாற்றம் தவறு என்றால் அந்த தவறை முதலில் செய்வதர் புத்தர்தானே! ஆரிய ஆபத்தை எதிர்த்துத்தானே புத்தர் பௌத் தத்தையும், மகாவீரர் சமணத்தையும் உருவாக்கினார்கள். அம்பேத்கர் ஏன் இந்து மதத்தை துறந்தார்? என்ற எதிர் கேள்விகளை கேட்டார்கள் மதம் மாறிய வீரமிக்கவர்கள்.

1981 பிப்ரவரி 19 அன்று 180 குடும்பங்களைச் சார்ந்த ஆயிரக்கணக் கானோர் மீனாட்சி புரத்தில் மதம் மாறி இஸ்லாத்தில் இணைந்தனர். அவர்களுக்கு முஸ்லீம் லீகின் மூத்த தலைவர் தியாகி மௌலானா அபுல்ஹஸன் ஷாதலி ஹஸரத் கலிமா சொல்லிக் கொடுத்தார்.

இநத்ச் செய்தி சில நாட்களுக்குப் பின்னர் நாளிதழில் வந்த போது வெளி உலகிற்கு தெரிந்தது.

மதம் மாறியவர்களின் நோக்கம் விளம்பரம் அல்ல. மதம் மாற முன் வந்தவர்களுக்கு மார்க்கத்தை வழிகாட்டிய சபைக்கும் விளம்பரம் நோக்கம் அல்ல. பத்திரிக்கை செய்திதான் அதை விளம்பரப் படுத்தியது. ஊடக செய்தி உலகை எட்டிய போது அத்தனை தலைவர்களும் அந்த சின்ன கிராமத்தை நோக்கி படையெடுத்தார்கள்.

வாஜ்பாயி, அத்வானி முதற்கொண்டு அத்தனை இந்துத்துவ தலைவர்கள், மடாதிபதிகள், துறவிகள், சமய தலைவர்கள், ராம் கோபால் ஸ்ரீ கால்வே, ஓ.பி. தியாகி, வந்தே மாதர ராமச்சந்திர ராவ், பிரீதிவ்சிங், கிருஷ்ணலால், நாராயணன் என வட இந்திய இந்துத்துவ தலைவர்கள், தாணுலிங்க நாடார் போன்ற தமிழக இந்துத்துவ தலைவர்கள் வந்து குவிந்தனர். ஹிந்து எழுச்சி மாநாடு, ஹிந்து மத சிறப்பு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்றன. அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளிலிருந்து இந்து மதத்திற்கு மாறியவர்கள் அழைத்து வரப்பட்டு பேச வைக்கப்பட்டனர்.

மதமாற்றத்துக்கு காரணம் சாதீய ஏற்றத் தாழ்வுகளும் அடக்கு முறை கொடுமைகளும் தான் என விசாரித்து தெரிந்த பின் சமத்துவத்தை நிலை நாட்டுகிறோம் எனச் சொல்லி எச்.எஸ்.எஸ். என்ற ஹிந்து சமுதாய வளர்ச்சி மன்றத்தை ஏற்படுத்தினர். தேவர் சமுதாயத்தின் ராமச்சந்திரன் என்பவரை தலைவராக கொண்டு அமைக்கப்பட்ட இந்த அமைப்பில் தேவேந்திர வேளாளர் சமுதாயத்தைச் சேர்ந்த எஸ். சுப்ரமணியன் என்பவர் செயலாளராக அறிவிக்கப்பட்டார்.

இஸ்லாத்தில் இணைந்த சிலர் மீண்டும் இந்து மதத்திற்கு திருப்பப்பட்டனர்.

அவர்களிடமும் கேட்கப்பட்டது.

'இஸ்லாத்திற்க சென்ற நீங்கள் மீண்டும் தாய் மதம் திரும்ப காரணம் என்ன?'

"அரசின் சலுகைகள், இந்து இயக்கங்களின் வாக்குறுதிகள்"

இந்த சலுகைகளுக்காக மதம் மாறிவிட்டு மீண்டும் திரும்பியது போல் மீண்டும் இஸ்லாத்திற்கு செல்வீர்களா?

சலுகைளை ஏற்றுவிட்டு மீண்டும் செல்வது மனசாட்சிக்கு உறுத்தலாக இருக்கும்.

இப்படி பதில் அளித்தவர்களும் உண்டு.

இத்தனை பரபரப்பிற்கும் பின்னரும் அடுத்தடுத்து அதே ஊரில் மதமாற்றங்கள் தொடர்ந்து கொண்டேயிருந்தன. 23.5.1981ல் 27 குடும்பங்களைச் சார்ந்த நூற்றுக் கணக்கானோர் இஸ்லாத்தில் இணைந்தனர்.

இவ்வளவு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் அவர்கள் ஏன் இஸ்லாத்தில் இணைகிறார்கள்?

அப்போதெல்லாம் முகாமிட்டிருந்த நான் அன்றாடம் மீனாட்சிபுரம் சென்று விடுவேன். இந்து எழுச்சி மாநாட்டில் அத்தனை பேரின் பேச்சையும் முழுமையாக கேட்பேன்.

மதம் மாற்றம் நடந்து, இந்து எழுச்சி மாநாடு முடிந்த அந்த பதற்றமான நேரம்.

ஒரு மாலைப் பொழுது சுமார் 5 மணி, மாவட்ட ஆட்சியர், காவல் கண்காணிப் பாளர் என உயர் அதிகாரிகளும் மீனாட்சி புரத்தில் முகாமிட்டிருந்தனர்.

குடிநீர் எடுப்பது தொடர்பாக மீனாட்சிபுரத்தில் மதம் மாறிய, மாறாத சகோதரர்களுக்குள் வாய் தகராறு. சத்தம் வலுக்கவே காவல்துறை விரைகிறது.

இருதரப்பையும் சமாதானம் செய்கிறது. அப்போது மதம் மாறாத தேவேந்திர குல வேளாளர்களை “அடே போ தள்ளி நில் வரிசையாக வா” என காவலர்கள் அதட்ட. . . மதம் மாறியவர்களை பார்த்து “பாய் போங்க தள்ளி வரிசையாக நில்லுங்கள்” என கூற. . . அப்போது மதம் மாறாதவர்கள் சொன்னார்கள். . . ஒரே ஊர், ஒரே குடும்பம், நேற்று வரை ஒரே சாதி எங்களைப் பார்த்து டேய் தள்ளி நில்லுடா, வரிசயைா வாடா, அவர்களைப் பார்த்து பாய் தள்ளி நில்லுங்க; வரிசையா வாங்க. ஒரே நாளில் அந்தஸ்து மாறிவிட்டதா? மாறுங்கடா இஸ்லாத்துக்கு என்ற குரல் அங்கேயே ஒலித்தது.

நான் நேரில் பார்த்து அதிசயித்துப் போன அந்தகாட்சியை பொதிகைக் கவிஞர் அ. சாகுல் ஹமீது எம்.எல்.ஏ. உள்ளிட் டோரிடம் பின்னர் கூறினேன். அதைத்தான் 2016 ஜூன் 5ம் தேதி நூல் வெளியீட்டு விழாவிலும் பதிவுச் செய்தேன்.

மீனாட்சி புரம் மதம் மாற்றம் தொடர்பாக இஷா அத்துல் இஸ்லாம் சபையும், அதன் நிர்வாகிகளும் தொடர் துன்பத்திற்கு ஆளானார்கள்.

தென்காசி மேடை முதலாளி மு.ந. அப்துர் ரஹ்மான் சாகிப் அவர்களால் 1944ல் உருவாக்கப்பட்டதுதான் தென் இந்திய இஷா அத்துல் இஸ்லாம் சபை. அச்சபை 1955ல் பதிவு செய்யப்பட்டது. பாளையங்கோட்டை ஹைகிரவுண்டிஸ் 10ம் நம்பர் பங்களா அதன் பதிவு அலுவலகமாக இருந்தாலும் திருநெல்வேலி கைலாசபுரத்தில் உள்ள 17ம் இலக்க ரஹ்மானியா பில்டிங் என்ற இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாவட்ட அலுவலகத்திலேயே இயங்கி வருகிறது. இஸ்லாத்தை எத்திவைக்கும் பணியை மு.ந. அப்துல் ரஹ்மான் சாகிப் செய்துவந்தார்கள்.

(என்னுடைய முதல் பொது மேடை பேச்சு அரங்கேற்றம் மு.ந. அப்துல் ரஹ்மான் சாகிப் முன்னிலையில்தான் நடந்தது. 1971ல் இஸ்லாமிய இளைஞர் இயக்க சொற்பயிற்சி மன்ற செயலாளராக இருந்த போது காயல்பட்டினம் ஸி-கஸ்டம்ஸ் சாலை எல்.கே. தொடக்கப்பள்ளியில் அந்நிகழ்ச்சி நடைபெற்றது என்பதை இப்போதும் நினைவு படுத்தி பெருமைபடுகிறேன்.

மு.ந. அப்துல் ரஹ்மான் சாகிப் முஸ்லிம் லீகிற்கும் மாவட்ட தலைவர், இஷா அத்திற்கும் தலைவர். அதற்குப்பின் இரண்டிற்கும் தலைவரானவர் அவர்களின் இளைய புதல்வரான அ. ஷாகுல் ஹமீது அவர்கள் 1980 ஜூன் 9 முதல் 1985 ஜனவரி 15 வரை கடையநல்லூர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர். அதற்கு முன் தென்காசி நகராட்சியின் முதல் சேர்மன். அப்போது இஷா அத் செயலாளராக இருந்தவர் கரீம் அண்ணன் என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பட்ட கடையநல்லூர் டி.இ. அப்துல் கரீம் சாஹிப்.

மத்திய, மாநில புலனாய்வு அதிகாரிகள் தங்கள் தங்கள் அலுவலகங்களுக்கு செல்கிறார்களோ இல்லையோ இஷா அத் சபைக்கு தவறாமல் வருவர். அவர்களின் கேள்விகளக்கு பதில் சொல்வதே அன்றைய மேலாளர் சலீம் அவர்களின் வேலை.

மீனாட்சி புரம் மதமாற்றத்திற்கு பின் அ. ஷாகுல் ஹமீது எம்.எல்.ஏ. அவர்களை தேசிய பாதுகாப்பு சட்டத்தில் கைது செய்து சிறையில் அடைக்க மிகப் பெரும் முயற்சி நடைபெற்றது. இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர்களான கேரள சிங்கம் சி.எச். முஹம்மது கோயா, சிராஜுல் மில்லத், ஆ.கா.அ. அப்துல்ஸமத் சாகிப் போன்றோர் அன்றைய பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களை சந்தித்து முறையிட்டு அந்த முயற்சியை தடுத்து நிறுத்தினர்.

அ. சாகுல் ஹமீது சாகிபின் உடன் பிறந்த மூத்த சகோதரர் ஏ.கே. ரிபாயி சாகிப், பன்னூல் ஆசிரியர், 1973 முதல் 79 வரை நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராக இருந்தவர். அ. ஷாகுல் ஹமீது சாகிப் விலகலுக்குப்பின் நெல்லை மாவட்ட இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தென் இந்திய இஷா அத்துல் இஸ்லாம் சபை தலைவராக இருந்தவர் ஏ.கே. ரிபாயிசாகிப். அவர்களை யும் கைது செய்ய பெருமுயற்சி மேற்கொண்ட போது அதுவும் முறியடிக்கப்பட்டது. புனித ஹஜ் பயணம் சென்றிருந்த போது 21.3.1997ல் சவூதிலேயே மரணமடைந்தார் ரிபாயி சாகிப். இன்று தென் இந்திய இஷா அத்துல் சபை தலைவராக எஸ். முஹம்மது காதர் முகைதீன் (முன்னாள் எம்.எல்.ஏ.) அவர்களும், பொதுச் செயலாளராக தென்காசி எம்.எஸ். துராப்ஷா அவர்களும் பணியாற்றி வருகின்றனர்.

இந்த இடத்தில் இன்னொரு முக்கிய விஷயத்தை பதிவு செய்வது என் கடமை.

மீனாட்சிபுரம் மதமாற்றத்தை அன்றைய தமிழக முதல்வர் எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்களிடத்தில் மதமாற்ற தடை சட்டத்தை கொண்டுவர பல தரப்பிலிருந்தும் வற்புறுத் தினார்கள். அதற்கான முன் வடிவு மாதிரி கோப்புகள் கூட தயார் ஆயின. எதையும் தீர்க்கமாக சிந்திக்கும் எம்.ஜி.ஆர். மத மாற்ற தடைச்சட்டம் கொண்டு வருவது ஆபத் தானது என உணர்ந்து அந்த ஆலோசனை களை புறக்கணித்தார்.

எம்.ஜி.ஆர்.1981ல் கொண்டு வர தயங்கிய மதமாற்ற தடைச்சட்டத்தை 2002ல் முதல்வர் ஜெயலலிதா கொண்டு வந்தார். 2004 நாடாளுமன்றத் தேர்தலில் அதற்கான விலை கொடுத்தபின் 18.5.2004ல் அதை ரத்து செய்வதாக அவசர சட்டம் பிறப்பித்தார் என்பது இங்கு நினைவு கூறத்தக்கது.

மீனாட்சி புரம் மத மாற்றத்திற்குபின் தென் இந்தியா இஷா அத்துல் இஸ்லாம் சபைக்கெதிரான பிரச்சாரங்கள் முடுக்கி விடப்பட்டு விசாரணைகளும் தொடர்ந்து கொண்டிருந்தன.

மத்திய அரசின் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியின நல ஆணையர் ஆர்.பி. ஹன்னா அவர்களின் உத்தரவின் பேரில் தமிழ்நாடு எஸ்.சி., எஸ்.டி. இயக்குநர் கே. ஆறுமுகம் விசாரணை அதிகாரி சத்திய நாராயண மூர்த்தி, திருநெல்வேலி மாவட்ட காவல் கண்காணிப்பாளர், மாவட்ட வருவாய் அலுவலர் உள்ளிட்டோர் குற்றாலத்தில் வைத்து விசாரணை மேற்கொண்டனர்.

தென் இந்திய இஷா அத்துல் இஸ்லாம் சபை சார்பில் ஏ.கே. ரிபாயி சாகிப், எம். ஜமால் முஹம்மது சாகிப் உள்ளிட்ட ஐவர் குழுவினர் ஆஜராயினர்.

உங்கள் சபையின் சார்பில் 2000 பேரை மதம் மாற்றி இருக்கிறீர்கள், என்ன சொல்கிறீர்கள்?

- இது விசாரணை அதிகாரிகளின் கேள்வி.

“இல்லை, 8000 பேரை மதம் மாற்றியிருக்கிறோம்” - இது ஏ.கே. ரிபாயி சாகிபின் பதில்.

‘1981ல் 2000 பேரை மதம் மாற்றியிருக்கிறீர்கள் - இது விசாரணை அதிகாரியின் கேள்வி. 1945 லேயே

தெற்குபட்டி மானூரில் 4000 பேரை இஸ்லாத்திற்கு மாற்றி இருக்கிறோம்.'

- இது ஏ.கே. ரிபாயி சாகிபின் பதில். அதிர்ந்து போயினர் அதிகாரிகள்.

எங்களிடத்தில் ஒளிவு மறைவு இல்லை; ஆதாரங்கள் இருக்கின்றன. நாங்கள் எவரையும் ஆசை காட்டியோ கட்டாயமாகவோ மதம் மாற்றுவதில்லை. மதம் மாறுகிறோம் என்று வந்தால் மறுப்பதும் இல்லை.

ஏ.கே. ரிபாயி சாஹிபின் இந்த வாதங்கள் பொன்னெழுத்துக்களால் பதிக்கப்பட வேண்டியவை.

ஒரு முறை ஒரு விசாரணை அதிகாரி ஏ.கே. ரிபாயி சாகிபிடம், 'மதம் மாறி வந்தவர்களுக்கு நீங்கள் மாப்பிளை கொடுப்பீர்களா?' எனக் கேட்டார்.

ஏ.கே. ரிபாயி சாகிப் சிரித்துக் கொண்டே பதில் சொன்னார். . . "கொடுப்பீர்களா என்றா கேட்கிறீர்கள்? எனக்கு 5 ஆண்மக்கள் அதில் இருவர் மதம் மாறி வந்தவர்களை மணம் முடித்துள்ளனர். ஒருவர் பிற்படுத்தப்பட்ட வகுப்பிலிருந்து வந்தவர். ஒருவர் தாழ்த்தப்பட்ட வகுப்பிலிருந்து வந்தவர்" என்று. இதையும் 5.6.2016 நூல் வெளியீட்டு விழாவில் பேசும் போது நான் பதிவு செய்தேன்.

இந்த மீனாட்சிபுரம் மதம் மாற்றம் தான் 35 ஆண்டுகளுக்கு பின்னர் சர்ச்சையாக்கப் பட்டுள்ளது. மீனாட்சி புரத்தில் மதம் மாறியோர் மேக்கரை, பன்பொழி, வடகரை என சுற்று வட்டாரங்களிலும் வாழ்கின்றனர். அந்த ஊரிலிருந்து 6 கி. மீட்டர் தொலைவில் உள்ள கலங்காத கண்டியை சேர்ந்த அன்வர் பாலசிங்கம் என்பவர் எழுதிய கருப்பாயி என்கிற நூர்ஜஹான் நாவல்தான் இந்த சர்ச்சைக்கு காரணம்.

இது கதை என்றால் கற்பனை என்ற முடிவிற்கு வந்திருக்கலாம். ஆனால் மதம் மாறியவர்களுக்கும் மாற இருப்பவர்களுக்கும் அர்ப்பணம் என குறிப்பிட்டுவிட்டு இது விவாதத்துக்கான நாவல் என அழைப்பு விடுக்கிறார்.

மீனாட்சிபுரத்தை காமாட்சிபுரம் என மாற்றி ரஹ்மத் நகரை பிலால் நகர் என குறிப்பிட்டு மதம் மாறிய இஸ்லாமிய கதாபாத்திரங்களாகவே சித்தரித்துள்ளார்.

இந்த நாவலின் கதை மதம் மாறிய குடும்பத்தைச் சார்ந்த ஒரு பெண் 40 வயதாகியும் புதிய முஸ்லிம் என கூறி மாப்பிள்ளை கிடைக்காததால் தற்கொலை செய்து கொள்வதாகவும், அதனை தொடர்ந்து அவளது தந்தை, தாய் விஷமருத்தி தற்கொலை செய்வதாகவும் அவரது பாசமுள்ள மதம் மாறா சித்தி கிணற்றில் விழுந்து தற்கொலை செய்வதாகவும், ஆக ஒரே நாளில் 4 தற்கொலைகள் அரங்கேற்றி அடுத்து இரண்டு பெண்ணுக்கும் பெண் பார்க்க மாப்பிள்ளை வீட்டார் வருவதாகச் சொல்லி வராததால் அப் பெண்ணின் தந்தை வீட்டு மாடியில் தூக்கு மாட்டி தற்கொலை செய்ததாகவும் அப்பெண் பைத்தியமாகி விட்டதாகவும் பரிதாபப்பட வைத்திருக்கிறார்.

அந்த நாவல், தற்கொலை செய்ததாக வர்ணிக்கப்பட்ட நூர்ஜஹான் தந்தைக்கு எழுதிய கற்பனை கடிதத்தில் தொடங்கி, 'தன் தம்பியை தனியே கிடத்திவிட்டு பள்ளிக்குச் செல்ல மனமின்றி இருந்தார் பழைய தலைவர். ஆனாலும் மனசு கேக்கலை. எ.மம்மது பள்ளிக்கு வாரியாத்தா? என்று சொன்னதும்', மொத்த ஜமாஅத்தும் அவரை பின் தொடர்ந்ததா இல்லை அங்கேயே நின்று விட்டதா? மாறியவர்கள் பேசுவார்கள் என முடிக்கிறார் அன்வர் பாலசிங்கம்.

இதுதான் இந்துத்துவத்தின் உச்சகட்ட வெளிப்பாடு. இந்த நாவல் உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்ட தல்ல. மதம் மாறிய ஒரு ஊரில் ஒரே நாளில் ஒரே குடும்பத்தில் நால்வர் தற்கொலை செய்திருந்தால் அதுதான் ஊடக தலைப்புச் செய்தியாக இருந்திருந்தால் அதுவும் மீனாட்சிபுரத்தில் இப்படி ஒரு சம்பவம் நடந்திருந்தால் ஒட்டு மொத்த விவாதப் பொருளாகியிருக்கும்.

இந்த நாவல் வளமான கற்பனை என்பதற்கு இன்னொரு எடுத்துக் காட்டு கடையநல்லூர் முன்னாள் எம்.எல்.ஏ. தென்காசியிலிருந்து அ. ஷாகுல் ஹமீது. கதாபாத்திரத்தில் அவர் பெயர் காஜா என வருகிறது. அவர் உடல் நலம் பாதிக்கப்பட்டு வீட்டோடு இருந்த அவர் 14.4.2002 அன்று மரணமடைந்து விட்டார். ஆனால் கருப்பாயி என்கிற நூர்ஜஹான் நாவல் உருவானதோ 2011.

மீனாட்சிபுரத்தில் போய் இதுபற்றி விசாரித்தால் தற்கொலையா? எங்கள் ஊரிலா? என்று தான் கேட்டார்கள்.

அன்வர் பாலசிங்கத்தின் அயோக்கியத் தனத்தை தோலுரித்து காட்டுவதுதான் 2016 ஜூன் 5 அன்று வெளியிடப்பட்ட கருப்பாயி என்கிற நூர்ஜஹான் கதை ஆசிரியர் அன்வர் பால சிங்கத்துடன் நேர் முகம் என்ற நூல்.

இந்நூலில் அன்வர் பாலசிங்கத்துக்கு டி.எம். உமர் பாரூக் கொடுத்த மறுப்பு. 2012 ஏப்ரல் 21 அன்று தஞ்சாவூரில் பசு கௌதமன் ஏற்பாட்டில் நடைபெற்ற விவாதம். மதமாற்றம் நடைபெற்ற மீனாட்சிபுரத்தில் மீண்டும் கள ஆய்வு செய்த குலாம் முஹம்மது அவர்களின் பதிவு 4.1.2015ல் டைம்ஸ் ஆஃப் இந்தியா நாளிதழ் வெளியிட்ட கட்டுரை இடம் பெற்றுள்ளன.

2014ல் ரெடிஃப் இணைய தளத்தின் கணேஷ் நாடார், ‘மீனாட்சிபுரத்தில் 33 வருடங்களுக்கு முன்பு இஸ்லாத்தை ஏற்றவர்கள் மகிழ்ச்சியுடன் உள்ளனர். ஆனால் இதனை யாரும் அறிந்து கொள்ள வேண்டும் என அவர்கள் விரும்பவில்லை. ஆனால், இந்துக்களாகவே இருந்து விட்டவர்கள் மகிழ்ச்சியாக இல்லை. இதனை அவர்கள் உலகறிய வேண்டுமென விரும்புகிறார்கள்’ என பதிவு செய்துள்ளனர்.

‘மீனாட்சிபுரத்தில் மதம் மாறியோர் இட ஒதுக்கீடு உரிமையை இழந்ததால் பொருளாதார மாற்றம் காணப்படாமல் இருக்கலாம் ஆனால் சமூக அந்தஸ்து, கலாச்சார சுதந்திரம் காரணமாக அவர்கள் மிக மிகழ்ச்சியாக இருக்கிறார்கள் என மதம் மாறாத ஒரு இந்துவின் கூற்றையும்,

முஸ்லிமாக மதம் மாறிய 70 வயது நபர் கல்லாலும் கான்கிரீட்டாலும் கட்டப்பட்ட தன் வீட்டில் பெருமையாக அமர்ந்திருப் பதையும் - இந்த பெருமைக்கு காரணம் அவர் தலித் ஆக இருந்த போது ஓலையால் வேயப்பட்ட குடிசைகட்ட மட்டுமே அனுமதிக்கப்பட்டிருந்தார் என்பதையும்,


சூரிய அஸ்தமனத்தின் போது ரஹ்மத் நகர் பள்ளிவாசல் தொழுகைக்கான பாங்கு அழைப்பு ஒலிக்கிறது. மக்கள் தொழுகைக்கு விரைகிறார்கள். ஊர் நாட்டமையும் உள்ளூர் இந்து இயக்க தலைவருமான 66 வது கருப்பையா மாடசாமியும் பள்ளி வாசலுக்குள் சென்று அமர்கிறார். தொழுகை முடியும்வரை காத்திருந்து முஸ்லிம்களை தம்பேரப்பிள்ளைகளை வீட்டிற்கு அழைத்துச் செல்கிறார்’.

என டைம்ஸ் ஆஃப் இந்தியா தன் கட்டுரை பதிவை நிறைவு செய்திருக்கிறது.

அன்வர் பாலசிங்கத்தின் விஷமத்தனத்திற்கு இதை விட இன்னொரு மரண அடி வேண்டுமோ?

**காயல் மகபூப்**


**வரப்பெற்றோம்**




# வழி காட்டும் வான்மறை

மௌலவி
கே.எம். இல்யாஸ் ரியாஜி

**விலை : 100.00**

**அஹத் பப்ளிஷர்ஸ்**

**50, தெற்கு மாட சாலை, மதுரை - 625 001.**

**கைபேசி :9345055666**

# அமெரிக்கா வைத்த உலை!

அமெரிக்கா அதிபர் ஒபாமாவும், குஜராத் இனப்படுகொலை புகழ் மோடியும் ஜூன் 6ஆம் தேதி அலுவல் நிமித்தமாக வெள்ளை மாளிகையில் சந்தித்து பேசிக் கொண்டனர்.

இதில், இந்தியாவில் வெஷ்டிங் ஹவுஸ் (Westing House) நிறுவனம் தயாரிக்கும் ஆறு AP1000 ரக அணு உலைகளை நிறுவுவதறக்காக துவங்கியிருக்கும் ஆரம்பக்கட்ட பணிகளை இரண்டு தலைவர்களும் வரவேற்று பேசினர். இதனை நிறுவுவதற்காக ஆகும் மொத்த செலவு ரூபாய் 4 இலட்சம் கோடி என்று கணக்கிடப்பட்டுள்ளது. இது ஒருபுறமிருக்க வெஷ்டிங் ஹவுசை தேர்ந்தெடுத்ததில் எடுக்கப்பட்ட தன்னிச்சையான முடிவுகள், விபத்து ஏற்பட்டால் நஷ்ட ஈடு பெறுவதில் அரசாங்கத்திற்கும், வெஷ்டிங் ஹவுஸ் நிறுவனத்திற்கும் ஒப்புக் கொள்ளப்பட்ட சட்ட விதிகள், இந்த அணு உலைகளிலிருந்து மின்சாரம் தயாரிப்பதற்கு ஆகும் அதிகப் படியான செலவுகள் ஆகியவை குறித்து மறுபுறம் கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

### புத்திசாலித்தனமானதா இந்த பொருளாதார ஒப்பந்தம்?

ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் இருந்த போது வெஷ்டிங் ஹவுஸ் நிறுவனத்திடம் இருந்தும், ஜெனரல் எலெக்ட்ரிக் (GE) நிறுவனத்திடம் இருந்து தலா ஓர் அணு உலைகளுக்கான பணிகளை ஆரம்பிக்கலாம் என்று தனது கருத்தை தெரிவித்தது (12th Plan Period 2012-2017)

எனினும், இந்தியாவின் இழப்பீடு ஏற்பு கொள்கைகளில் அபாயங்கள் இருப்பதாகக் கூறி கடந்த வருடம் (2015) இந்த முடிவில் இருந்து ஜெனரல் எலெக்ட்ரிக் நிறுவனம் பின் வாங்கியது.

இது நமக்கு ஒரு பெரிய நிவாரணம் தான். ஏனெனில் இந்த ஜெனரல் எலெக்ட்ரிக் நிறுவனம் சோதனை செய்யப்படாத ஒரு வடிவமைப்பை (Design) நமக்கு வழங்கியது. வேறு எந்த நாடுகளுக்கும் அந்த வடிவமைப்பை அந்நிறுவனத்தால் விற்க இயலவில்லை.

வெஷ்டிங் ஹவுஸ் நிறுவனம் குறித்தும் எதிர்மறை செய்திகள் தற்போது வந்து கொண்டிருக்கும் போது இன்றைய அரசாங்கம் தனது முதலீட்டை அங்கே அதிகப்படுத்தியுள்ளது. இது கவனிக்கத்தக்க ஒன்று.

ஒரு மாதத்திற்கு முன்னர் தான், ப்ளோரிட் பவர் அண்ட் லைட் (Florida Power and Light) என்ற நிறுவனம் தனது திட்டத்தை அதாவது வெஷ்டிங் ஹவுசின் AP 1000 ரக அணு உலைகளை தயாரிக்கும் திட்டத்தை நான்கு வருடத்திற்கு தள்ளிப்போட்டது.

கடந்த பெப்ரவரி மாதத்தில், யு.எஸ். அரசு நிறுவனமான டென்னிஸ் வேலி அதாரிட்டி (Tennessee Valley Authority) என்ற நிறுவனம் தன்னுடைய இரண்டு AP 1000 ரக அணு உலைகளை தயாரிக்கும் திட்டத்தை ரத்து செய்தது. தற்போது இருக்கும் பொருளாதார நிலையை கணக்கில் கொண்டு அதாவது கடன் மற்றும் நிதி ஒதுக்கீடே இந்த ரத்திற்கு காரணம் என அந்நிறுவனம் கூறியது.

### செலவு மதிப்பீடுகள்

யு.எஸ்.இன் ஜார்ஜியா மாநிலத்தில் தயாராகி கொண்டிருக்கும் இரண்டு AP 1000 ரக அணு உலைகளின் மதிப்பு ரூபாய் 1.4 இலட்சம் கோடி எனக் கண்க்கிடப் பட்டுள்ளது. அதாவது, ஒரு மெகாவாட் திறனை உற்பத்தி செய்ய ஆகும் மூலதன செலவு மட்டும் ஏறக்குறைய ரூபாய் 70 கோடி.

ஆனால் இந்தியாவில் செயல்படும் அணுக்கரு உலைகள் இதைவிட ஏழு மடங்கு குறைவான அதாவது ஒரு மெகாவாட் திறன் உற்பத்தி செய்ய மூலதன செலவாக ஏறக்குறைய ரூபாய் 10 கோடியே எடுத்துக்

கொள்கிறது. எனினும், பொருளாதார போட்டியில் அவைகள் திணறி வருகின்றன.

விளக்கமாக சொல்வது என்றால் இந்த அணுக்கரு உலைகளில் இருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்வதன் மூலம் ஏற்படும் முதல் வருடக் கட்டணம் ஒரு யூனிட்டுக்கு ரூபாய் 25. இதற்கு நேர்மாறாக, சூரிய சக்திகளின் மூலம் பெறப்படும் மின்சாரத்திற்கு ஒரு யூனிட்டிற்கு ரூபாய் 5 ஆகும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

## கிரீன் ஹவுஸ் வாயு

அணுக்கரு உலைகளை ஏற்படுத்துவதன் மூலம் பருவநிலை மாறுபாட்டினை கட்டுப்படுத்துவதற்கு இந்தியா வாக்களித்துள்ள பங்கினை நிறைவேற்றிட இயலும் எனக் கூறப்படுகிறது. ஆனால் இது தவறு. மின்சாரத்தை பெற செலவிடப்படும் தொகை இரண்டு எனில் இந்த உற்பத்தியில் ஒரு கிலோ கிராம் கார்பன்டை ஆக்சைடு வெளியாகிறது என்றால் இது பயனுள்ள செலவு என பொருளாதார வல்லுனர்கள் கணக்கிட்டுள்ளனர். இந்தியாவில் நிலக்கரி ஆலையின் மூலம் ஒரு யூனிட் மின்சாரம் தயாரிக்கும் போது ஒரு கிலோ கிராம் கார்பன்டை ஆக்சைடு வெளியேறுகிறது. இதனோடு ஒப்பிடுகையில் AP 1000 ரக அணு உலைகள் சிறந்ததாக தோன்றலாம். ஆனால் அதனுடைய ஒரு யூனிட் கட்டணம் ரூபாய் 2ஐ விட மிக அதிகம். எனவே இந்தியா தனது முதலீட்டை மற்ற தொழில் நுட்பத்தில் பயன்படுத்தி கிரீன் ஹவுஸ் விளைவை கட்டுப்படுத்த இயலும்.

எனினும், இந்தியா வெஷ்டிங் ஹவுஸ் நிறுவனத்துடன் இணைந்து செயல்படுவதில் தொடர்ந்து முனைப்பு காட்டி வருகிறது. அணு உலை விபத்துகள் ஏற்பட்டால் அதில் மேற்கொள்ளப்படும் மேலதிக இழப்பீடுகள் குறித்த ஒப்பந்தத்தில் இந்தியா பெப்ரவரி மாதத்தில் கையெழுத்திட்டுள்ளது. இது இந்தியாவின் உள்நாடு இழப்பீடு ஏற்பு விதிகளுக்கு முரணானது.

பேரிடர் நேரிடின், வெஷ்டிங்ஹவுசை நீதி விசாரணைக்கு உட்படுத்துவதில் இந்தியாவுக்கு சிக்கல் ஏற்படும். இழப்பீடு ஒப்பந்தத்தில் உள்ள சர்வதேச விதிகளை சுட்டிக்காட்டி வெஷ்டிங்ஹவுஸ் இழப்பீடுகளில் இருந்து தப்பித்துக் கொள்ளும்.

இந்த நிலைமை தான், டவ் கெமிக்கல் (Dow Chemical) நீதி விசாரணையிலும் நடந்தது. சர்வதேச விதிகள் இந்தியாவின் உள்நாட்டு சட்ட விதிகளை செயல் இழக்கச் செய்யும்.

யு.எஸ். காங்கிரஸ் சபையில் மோடி இவ்வாறு கூறினார், “வரலாற்றில் இதுவரை இருந்த தயக்கங்களை தாண்டி யு.எஸ். இந்தியா உறவு முன்னேறியுள்ளது” என்றார். இதனடிப்படையில் நாம் இந்த அணுக்கரு உலை ஒப்பந்தங்களை உற்று நோக்க வேண்டும். பல லட்சம் கோடி மக்களின் பணங்களை இழப்புகளை ஏற்படுத்தும் அமெரிக்கா நிறுவனத்திடம் இந்தியா வழங்கியுள்ளது. இதனால் கிடைக்கும் மின்சாரத்திற்கும் பொதுமக்கள் அதிக பணம் கொடுக்க வேண்டியிருக்கும். அதிலும், விபத்துக்கள் ஏற்பட்டால் எந்த வித இழப்பீடுகளுக்கும் அந்நிறுவனம் பொறுப்பேற்காது. இதற்கு கைமாறாகத் தான் அமெரிக்கா அதிபர் இந்தியாவை பற்றி சில நல்ல வார்த்தைகள் உதிர்த்தார்.

(ஆதாரம் : The HIndeu (ஆங்கிலம்) 20/06/2016 (Suvrat Raju is a Physicist with the Coalition of Nuclear Diplomacy and Peace based in Bangaluru. The views expressed are personal)

**முஸ்லிம் அல்லாதவர்கள் திருகுர்ஆனை இலவசமாக பெற வேண்டுமா? கீழே உள்ள தொலைபேசியை தொடர்பு கொள்ளவும்**

**8148129887**

# சவுதிக்கு எதிராக களமிறங்கும் யு.எஸ். பின்னணி என்ன?

அண்மையில் யு.எஸ். இன் சட்டப் பேரவையில் ஒரு மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன்படி, 9/11 தாக்குதலில் பாதிப்பு அடைந்தவர்களின் குடும்பங்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு எதிராக வழக்கு தொடரலாம் என்பதே அந்த மசோதா. வாக்கெடுப்பில் ஒருமித்தமான ஆதரவை பெற்ற பின் இந்த மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது. அதிபர் ஒபாமா தனது VETO வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி இதை தடுத்து நிறுத்துவேன் என்று கூறியுள்ளதாக வாஷிங்டன் ரிப்போர்ட் தகவல் தருகிறது. எனினும் இந்த மசோதாவிற்கு பின் சவூதி அரேபியா கொதிப்படைந்துள்ளது. அதன் ஊடகங்கள் யு.எஸ். அரசாங்கத்திற்கு எதிராக எழுதி வருகின்றன.

தீவிரவாதத்திற்கு எதிரான ஒரு யுத்தத்தை ஆரம்பிக்க வேண்டும் என்பதற் காகவே 9/11 அன்று உலக வர்த்தக மையத்திலும், பெண்டகனிலும் அமெரிக்க திட்டமிட்டு தாக்குதலை நடத்தியது என சவூதி அரேபியாவை சேர்ந்த ஒரு நிருபர் தற்போது கூறியுள்ளதாக Breitbart ரிப்போர்ட் என்ற செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

சவுதியின் சட்ட வல்லுனரான கதிப் அல் சம்மரி என்பவர் லண்டனை மையமாக கொண்டு இயங்கும் அல் ஹயத் என்ற பத்திரிக்கையில் இது குறித்த கட்டுரையை எழுதியுள்ளார். 9/11 தாக்குதலுக்கு சவூதி அரேபியா நிதி உதவி செய்ததை நிரூபிக்கும் ஆதாரங்களும், மேலும் யு.எஸ். நாட்டில் நடநத இந்த மோசமான தீவிரவாத தாக்குதலில் சவூதி அரேபியாவின் பங்கை விவரிக்கும் ஆவணங்களும் தங்களிடம் உள்ளது என்று பயமுறுத்தும் யு.எஸ்.-ஐ இந்த கட்டுரையில் அவர் வன்மையாக கண்டித்துள்ளார். யு.எஸ். எப்பொழுதுமே தங்களிடமே ஆதாரங்களை வைத்துக் கொண்டு பிற்றைய நாட்களில் அதை பயன்படுத்தி கொள்ளும் என்று சவூதி அரேபியாவின் சட்ட வல்லுநரான அவர் அதில் குறிப்பிடுகிறார். (இவ்வாறு கூறப்படும் ஆதாரங்கள் வெளிப்படையாக அறிவிக்கப் படவில்லை). 1990களில் ஈராக்கின் மீது படையெடுக்கும் முன்பு அதன் அண்டை நாடுகளில் பேரம் பேசுவதற்காக, சதாம் ஹுசேன் உயிரோடு இருக்க வேண்டும் என யு.எஸ். விரும்பியது. பின்னர் சதாம் ஹுசைனை பலிகடா ஆக்கியது.

இதே விதத்தில் தான் 9/11 சம்பவத்தையும் யு.எஸ். பயன்படுத்துகிறது. ஒவ்வொரு நேரத்திலும் அந்த நேரத்தில் யாரின் மீது பழியை சுமத்த வேண்டுமோ அவரின் மேல் சுமத்திவிடும். 9/11 தாக்குதலுக்கு முதலில் அல்காயிதாவையும், தாலிபானையும் குற்றம் சுமத்தியது. பின்னர் சதாம் ஹுசேன், இப்பொழுது சவூதி அரேபியாவை குற்றம் சுமத்துகிறது.

ஆனால் 9/11 தாக்குதலின் வீடியோ தொகுப்புகளையும், அதன் படங்களையும் ஆராய்ச்சி செய்த உலகத்தின் அறிவு ஜீவிகள் அனைவரும் இது யு.எஸ்.இன் திட்டமிட்ட தாக்குதல் தான் என ஒத்துக் கொள்கின்றனர். விமானங்கள் வந்து தகர்க்கும் அதே வேளையில் சிறந்த கட்டிடக்கலை வல்லுநர் களின் உதவியுடன் வெடிப் பொருள்களை கொண்டு கட்டிடங்களை தகர்த்து விட்டனர். அனால் யு.எஸ். இன்றளவும் பழியை மற்ற அனைவர்களின் மீதும் சுமத்தி வருகிறது.

தங்களுடைய சொந்த நாட்டு குடிமக்களுக்கு எதிராக யு.எஸ். அரசாங்கமே நடத்தியது தான் 9/11 தாக்குதல். இந்த தாக்குதலை யு.எஸ். நடத்துவதற்கு இரண்டு விதமான நோக்கங்கள் உள்ளது என அல்

ஷம்மரி குறிப்பிடுகிறார். தீவிரவாதம் என்ற நிழல் எதிரியை இதன் மூலம் யு.எஸ். அரசாங்கம் உருவாக்கி கொள்ளலாம். அதன் பின்னர் தங்களுடைய அனைத்து தவறுகளுக்கும் தீவிரவாதத்தை குற்றம் சுமத்தலாம். தங்களுடைய இராணுவ நடவடிக்கைகளுக்கும், மற்ற நாடுகளின் மேல் மேற்கொள்ளும் இரகசிய நடவடிக்கை களுக்கும், இதனை பயன் படுத்திக் கொள்ள லாம்.

சோவியத் உடனான பனிப்போரில் எந்த வித அணு ஆயுதங்களும் பயன்படுத்தப் படாமல் யு.எஸ். வெற்றி பெறுவதற்கு முஸ்லிம்களின் உதவி அமெரிக்காவிற்கு தேவைப்பட்டது. அப்பொழுது முஸ்லிம்கள் அமெரிக்காவின் உற்ற நண்பர்களாக இருந்தனர். ஆனால் இன்று முஸ்லிம்களின் மேல் தீவிரவாத முத்திரையை குத்துகிறது. குழப்பங்களை உண்டாக்குவதே யு.எஸ். தான். எதிரிகள் இல்லாமல் அதனால் இருக்க இயலாது என்று அல் சம்மரி குறிப்பிடுகிறார். இன்னும் சில கட்டுரைகள் இந்த 9/11 மசோதாவை சாத்தானின் மசோதா என்றும் அழிவின் வாசல்களை இது திறந்து விடும் என்று குறிப்பிடுகின்றன.

ஆதாரம் : www.inquistr.com

# இப்தார் நிகழ்ச்சியில் ஓர் ஆக்கப்பூர்வமான முயற்சி!





தமிழ் மாநில தேசிய லீக் தலைவர் அன்புச் சகோதரர் திருப்பூர் அல்தாப் அவர்கள் நடத்தும் இப்தார் நிகழ்ச்சியில் ஒன்பது ஆண்டுகளாக இடைவிடாமல் தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட் சார்பில் அதன் பொருளாளர் இல்யாஸ் ரியாஜி பங்கேற்று வருகிறார்.

இந்த ஆண்டு 18.6.2016 அன்று சென்னை அபு பேலஸ் ஹோட்டலில் இஃப்தார் நிகழ்ச்சி நடந்தது.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற தமிழக சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் முஸ்லிம்களின் மீது போடப்பட்ட பொய் வழக்குகள் குறித்த விவரங்களை இல்யாஸ் ரியாஜி அளிர்த்தார்.

தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட் மற்றும் நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம் வெளியிட்டுள்ள அந்த விபரங்களை ஸ்டாலின் கூர்மையாக படித்தார். புதிய அரசின் பட்ஜெட் வெளிவரும் போது காவல்துறை மானியக் கோரிக்கை விவாதத்தில் இது குறித்து அவர் பேசுவார் என்று நம்புகிறோம்.

இது முதல்வர் ஜெயலலிதா அவர்களின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டும் முஸ்லிம்களுக்கு நீதி கிடைக்கவில்லை. ஒரு வேளை முதல்வரின் கவனத்துக்கு சென்று விடாமல் பாசிச சிந்தனை கொண்ட அதிகாரிகள் இடைமறித்து விட்டார்களோ என்னவோ. . .

எதிர்கட்சித் தலைவர் சட்ட மன்றத்தில் பேசினாலாவது அப்பாவி முஸ்லிம்களுக்கு நீதி கிடைக்கிறதா? என்று பார்ப்போம்

# டீஸ்டா மீது மோடி அரசின் கெடுபிடி!





குல்பர்க் சொசைட்டி படுகொலைகளின் தீர்ப்பு நாடெங்கும் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. அறுபதுக்கும் மேற்பட்டோர் கொடூரமாக கொல்லப்பட்டு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஹ்சான் ஜாப்ரி, மற்றும் குடும்பத்தார் என 69 பேர் அவர் மனைவி கண் முன்னாலேயே எரித்துக் கொல்லப்பட்டார்கள். அங்கு வந்த காவல்துறை உயர் அதிகாரிகளின் நேரடி மேற்பார்வையில் நடந்த இந்த படுகொலைகளின் தீர்ப்பில் முக்கிய குற்றவாளிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர். சிலருக்கு ஆயுள் தண்டனையும், சிலருக்கு ஏழு ஆண்டு தண்டனையும் அளித்த சிறப்பு நீதிமன்றம், கொல்லப்பட்ட ஜாப்ரியையே இப்படுகொலைக்குக் காரணமாக கூறியுள்ளது. அவர் (தற்காப்புக்காக) தன் கைத்துப்பாக்கியால் சுட்டதால் தான் இந்த படுகொலை நடந்ததாக தீர்ப்பளித்துள்ளது.

ஜாப்ரி உயிருடன் இருந்திருந்தால் நீதிபதி அவருக்கு என்றோ தூக்கு தண்டனை அளித்து இருப்பார் என்பது தெரிகிறது.

இருபதிற்கும் மேலான நேரில் பார்த்த சாட்சிகளை நீதிபதி, அவர்களுக்கு மறதி நோய் உள்ளதென்று கூறியுள்ளது இந்த தீர்ப்பின் தரத்தை விளக்கும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்காக நீண்ட சட்டப் போராட்டம் நடத்தி வரும் தீஸ்தா சிதல்வாட் முயற்சிக்கு சிறிய வெற்றியே கிடைத்தது. ஏற்கனவே 120 குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனை வாங்கி கொடுத்த தீஸ்தா, இப்படுகொலைகளுக்கு முக்கிய காரணமான மோடியை, நீதியின் முன் நிறுத்தி தண்டனை வாங்கி கொடுக்க வேண்டும் என்பதில் தீவிரமாக இருக்கிறார். இதன் காரணமாக தீஸ்தா மீது பல பொய் வழக்குகளை அள்ளிப் போட்டு அவரை அழிக்க வேண்டுமென்பதில் மோடி அரசு தீவிரமாக இறங்கியுள்ளது.

தற்போது வெளிநாட்டு உதவிகளுக்கான அனுமதியை ரத்து (FCRA) செய்துள்ளது. அவர் மீது புழுதி வாரி இறைத்தால் மக்கள் உதவி செய்ய மாட்டார்கள் என்று நினைக்கிறது.

பல்வேறு மிரட்டல்களுக்கும் நெருக்கடிகளுக்கும் இடையில் குற்றவாளிகளை

நீதியின் முன்னிருத்தி தண்டிக்க வேண்டும் என்று முனைப்புடன் போராடி 120 மேற்பட்டோருக்கு ஆயுள் தண்டனையும் பலருக்கு வேறு தண்டனைகளையும் வாங்கி தந்து வரும் நிலையில் மோடி அரசு அவர் மீது பொய் வழக்குகளைப் புனைந்து கைது செய்ய பல வாரண்டுகளைப் பிறப்பித்தது.

இக்கால கட்டத்தில் நாம் அரசியல் நேர்மைக்கான காயிதே மில்லத் விருதை அவருக்கு அளிப்பதாக அறிவித்தோம். பல கெடுபிடிகள், அத்துமீறல்களுக்கு இடையில் அவர் விருது வாங்க சென்னைக்கு வந்த விவரங்களை தனியாக விவரிக்க வேண்டும்.

காயிதே மில்லத் கல்லூரியில் நடந்த சிறப்பு விழாவில் பல ஆயிரம் மக்களின் கரவொலிகளுக்கிடையில் நல்லகண்ணு ஐயாவுடன், தீஸ்தா சீதல்வாடிற்கு மகாத்மா காந்தியின் பேரனால் காயிதே மில்லத் விருது வழங்கப்பட்டது. எந்த மிரட்டலுக்கும் கலங்காத தீஸ்தா, காயிதே மில்லத் கல்லூரியில் மக்கள் அளித்த ஆதரவில் கண் கலங்கிவிட்டார்.

இதை "வைகறை வெளிச்சம்" இதழில் மூத்த பத்திரிகையாளர் குலாம் முஹம்மது,

"கண்ணியமிக காயிதே மில்லத்தின் பேரன் கண்ணியப்படுத்தினார் தீஸ்தா செட்டல்வாட்டை" என்ற தலைப்பில் கட்டுரை வெளியிட்டதின் சிறு பகுதி. . .

"மோடி இந்தியாவின் பிரதமராகவே ஆகிவிட்டார். பிரதமரானதும் நீதித்துறையில் தனக்குரிய வேண்டிய ஆட்களை நியமித்துவிட்டார். இப்போது டீஸ்டாவின் மீதான அவதூறை இன்னும் வேகமாக மோடியால் கொண்டு செல்ல முடிந்தது. அத்தோடு கைது செய்யும் நடவடிக்கையும் விரைவுப்படுத்திட முடிந்தது. கைது செய்யும் நாட்கள் நெருங்கி வந்துவிட்டன.

இந்த நிலையில் தான் டீஸ்டா தூய்மை யானவர் என நாம் நம்புகிறோம். அவர் உண்மையிலேயே நீதிக்காக போராடும் நல்லவர் என்பதை நானிலம் அறியச் செய்திட வேண்டும் எனப் பிரகடனப்படுத்தினார் கண்ணியமிகு காயிதே மில்லத்தின் பேரர் தாவூத் மியானகான் அவர்கள். அந்த வகையில் "அரசியல் மற்றும் பொது வாழ்க்கையில் நேர்மைக்கான காயிதே மில்லத் விருது" என்பதை அப்பழுக்கற்ற பொது வாழ்க்கையை நடத்திய காயிதே மில்லத் அவர்களின் பெயரால் நிறுவி அதை நீதிக்காக போராடும் வீரமங்கை டீஸ்டா செட்டல் வாட்டுக்கு வழங்கினார் தாவூத் மியாகான். அவர் களுக்கும் அவர்கள் நிறுவியுள்ள காயிதே மில்லத் கல்வி மற்றும் சமூக அறக் கட்டளைக்கும் நன்றிகள் பல. அவர்களுக்கு அல்லாஹ் தன் அருளைப் பொழிவானாக!

தன்னை இழிமொழிகளும், பழி சொற்களும், கைதுகளும், கொட்டடிகளும் சூழ்ந்திடும் போது இப்படி ஒரு விருதை தந்தவர்களை நினைவு கூறும் போது அவரையும் அறியாமல் கண்கள் குளமாகின.

அகமகிழ்ச்சி, நன்றிபெருக்கு இவற்றால் நெஞ்சம் நெகிழ்ந்து உதிர்த்த கண்ணீர் அது. அந்த கண்ணீர் வாழவைக்கும் நீதியை.

பலமுறை டீஸ்டாவுக்கு ஏதேனும் பொருளுதவி செய்திட வேண்டும், நீதிக்கான அவருடைய பெரும் போரில் கடுகளவேனும் நாம் உதவிட வேண்டும் என பலமுறை முயற்சி செய்தும் முடியவில்லை. முஸ்லிம்கள் அவருக்கு ஏன் உதவக்கூடாது என பலமுறை நாம் ஏங்கியதுண்டு.

அந்த ஏக்கத்தை போக்கியிருக்கின்றார் கண்ணியமிகு காயிதே மில்லத்தின் பேரர். ஏனெனில் இந்த விருது இரண்டரை இலட்ச ரூபாய்-ஐ உள்ளடக்கியது. . . . . ." வைகறை வெளிச்சம் ஏப்பிரல் 2015.

வெளிநாட்டு உதவிகள் அனுமதியை ரத்து செய்தால் என்ன? இந்நாட்டில் உள்ள பலகோடி பேர் தீஸ்தாவின் சட்ட நடவடிக்கைகளுக்கு உதவ தயாராக இருக்கிறார்கள். இந்த புனித ரமலானில் ஜகாத் மற்றும் சதகாவாகவும் உதவிடுவீர். அவர் 'சப்ரங்' அறக்கட்டளைக்கு அன்பளிப் பாகவும் உதவலாம். தீஸ்தாவின் தோல்வி இந்த நாட்டின் நீதி மற்றும் ஒருமைப்பாட்டின் தோல்வி. தீஸ்தாவின் வெற்றி மோடியுடன் அவர் அரசையும் தூக்கியெறியும்.

தீஸ்தா செதல்வாட் தொடர்புக்கு - teestateesta@gmail.com

தீஸ்வாவைக் கண்ணியப்படுத்திய தாவூத் மியாக்கானின் முகநூலிலிருந்து

# கற்காலம் – ஒரு வரலாற்றுப் பொய்

மூலம் : ஹாருன் யஹ்யா

தமிழில் : அபூஹாசின்

### கலாச்சாரங்களின் தேக்கம் என்பது பரிணாம செயல்முறையின் ஆதாரமல்ல

ஆதி மனிதன் என்பவன் ஓர் அரை குரங்கு படைப்பு. அவனுடைய மன, உல் குணநலன்கள் காலப்போக்கில் வளர்ச்சி பெற்றவையே. இவ்வாறே புதிய திறமைகள் பெற்று நாகரீகத்தை அடைந்தான் என பரிணாமவியலாளர்கள் கூறுகின்றனர்.

எந்த ஓர் அறிவியல் ஆதாரமும் இல்லாத இவர்களின் கூற்றுப்படி நம்முடைய பழங்கால முன்னோர்கள் மிருகங்களைப் போன்று வாழ்க்கையை நடத்தினர். பின்பு மனிதனாக மாற்றம் பெற்று நாகரீகத்தை அடைந்தனர். அவர்களுடைய அறிவுத்திறன் வளர வளர கலாச்சாரத்தில் முன்னேறினர்.

உரோமங்களை தனது உடல் முழுவதும் கொண்டவன் அல்லது மிருகங்களின் தோல் களை போர்த்தி, குந்தி இருந்து கொண்டு நெருப்பை உருவாக்கியவன், வேட்டையாடிய மிருகங்களை தனது தோள்களின் மேல் போட்டுக் கொண்டு நீரோடைகளின் வழியே நடப்பவன், தன்னுடைய தோழர்களுடன் உரையாடுவதற்கு சைகைகளையும், உறுமல் சப்தங்களையும் பயன்படுத்தியவன் என்பன போன்ற ஆதிகால மனிதனை விவரிக்கும் கற்பனையான வரைபடங்கள் ஒரு தவறான படைப்பு. இதற்கு அறிவியல் ஆதாரங்களை இல்லை.

தொல் பொருள் ஆராய்ச்சி படிமங்கள் இத்தகைய கற்பனைக்கு ஒத்துப்போகவில்லை. மனிதன் பூமியில் தோன்றிய நாள்களில் இருந்தே மனிதனாகத் தான் படைக்கப் பட்டான், வாழ்கின்றான். இதையே அறிவியல் கண்டுபிடிப்புகள் நிரூபணம் செய்கின்றன

தொல்லியல் துறை கண்டுபிடிப்புகளும் பரிணாமவியலாளர்களின் கால வரைபடங் களுக்கு ஆதரவாக இல்லை. மனிதன் பேச மட்டுமே கற்றுக் கொண்டான் என்று பரிணாமவியலாளர்களால் கூறப்படும் கால கட்டத்திலிருந்து கண்டு பிடிக்கப்பட்ட கண்டுபிடிப்புகள் மனிதன் அப்பொழுது சமையல் அறைகளை பயன்படுத்தியும், குடும்பங்களோடு சேர்ந்தும் வாழ்ந்துள்ளான் என எடுத்து காட்டுகின்றன.

மனிதன் கலைகளை பற்றி அறியாத வனாக இருந்தான் என்று பரிணாம வியலாளர்கள் கூறும் காலத்தில், அலங்காரப் பொருள்களையும், ஓவியங்களுக்கு தேவை யான பொருள்களையும் மனிதன் அப் பொழுது பயன்படுத்தியுள்ளான் என்று கண்டுபிடிப்புகள் எடுத்துக் காட்டுகின்றன. இதைப் போன்று எண்ணற்ற உதாரணங்கள் புத்தகத்தின் அடுத்தடுத்த பகுதிகளில் காணலாம்.

இந்த எல்லா கண்டுபிடிப்புகளுமே மனிதன் (நாகரீக முதிர்ச்சியற்ற) மிருகங்களைப் போன்று வாழவில்லை என்று எடுத்துரைக் கின்றன. கற்களும், மரங்களுமே மனிதன் உபயோகித்தான் என்று கூறப்படும் நாகரீக மில்லாத காலம் இருந்திருக்கவேயில்லை.

நம்பிக்கையாளர்கள் எப்பொழுதும் மனிதனுக்குரிய வாழ்க்கை முறையே நடத்தி இருக்கின்றனர். மனிதனுக்கு பயன்படும் ஆடைகள், உணவுத் தட்டுகள், கிண்ணம், உணவுக் கரண்டிகள் இவற்றை உபயோகித் துள்ளனர். மனிதன் அவன் வாழ்ந்த எல்லா சூழ்நிலைகளிலும் மொழிகளையும் கட்டிட மற்றும் கலை வேலைப்பாடுகளையும் பயன்படுத்தியுள்ளான். சமூக அமைப்பிலும் மருத்துவர்கள், ஆசிரியர்கள், தையற்காரர்கள், பொறியியலாளர்கள், கட்டட கலைஞர்கள் மற்றும் ஓவியர்களும் இருந்துள்ளனர்.

உண்மையில் தொழில்நுட்பங்கள் முன்னேற்றம் அடைய மனிதர்களின் அறிவுத் திறன் குவிப்பும் பெருகியது. தொழில்நுட்ப மாற்றங்கள் இயற்கையாகவே ஏற்பட்டன. கால மாற்றங்களுக்கு ஏற்ப புதிய கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டன. அறிவியல் முன் னேற்றம் கலாச்சார மாற்றமும் ஏற்பட்டன. அறிவுத்திறன் பெருக்கமும், தொழில்நுட்ப முன்னேற்றங்களும் பரிணாம மாற்றத்தை சுட்டிக்காட்டவில்லை.

அறிவுப்பெருக்கம் இயற்கையான ஒன்று. ஒரு மனிதன் தன்னுடைய கல்வியை ஆரம்பப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, மற்றும் பல்கலைக்கழகங்கள் என்று வெவ்வேறான நிலைகளில் பெறுகிறான். ஒருவர் தன் வாழ்நாள் முழுவதும் அறிவுத்திறனை வளர்த்துக் கொண்டே இருக்கின்றார். இந்த தொடர்ந்த நிலையான வளர்ச்சியை அவன் சில திடீர் விளைவுகளினால் பெற்று முன்னேற்றம் அடைந்தான் என்று கூறிட முடியாது. இதையே சமூக மாற்றத்திலும் ஒப்பிடலாம். சமூகத்தின் தேவைகளுக்கு ஏற்ப புதிய கண்டுபிப்புகள் உருவாக்கப்படுகின்றன. புதிய இயக்க முறைகள் கையாளப்படுகின்றன. எனினும் இது ஒரு பரிணாம முறை மாற்றங்கள் அல்ல.

## CIVILISATION RETREAT AS WELL AS ADVANCE
## நாகரீகங்கள் முன்னேற்றம் அல்லது பின்னேற்றம் அடையும்

மனிதனும் அவனுடைய கலாச்சாரமும், பண்படாத, பழைய நாகரீக முதிர்ச்சியற்ற பழங்குடியினர் என்ற நிலையில் இருந்து நாகரீகத்தை நோக்கி முன்னேறின என்று டார்வினிசம் கூறுகின்றது. எனினும் தொல்லியல் கண்டுபிடிப்புகள், மனிதன் வரலாற்றின் தொடக்க காலந்தொட்டே நாகரீகத்தில், கலாச்சாரத்தில் முன்னேற்றம் பெற்ற சமூகங்களாகயும், இவற்றில் முன்னேற்றம் பெறாத சமூகங்களாகவும் இப்படி இரண்டு நிலையிலும் ஒரே காலத்தில் வாழ்ந்துள்ளதாக தெரிவிக்கின்றன.

உண்மையில் பின்தங்கிய நாகரீகங்கள் இருந்த அதே காலத்தில் செழிப்பான நாகரீகங்களும் இருந்துள்ளன. வரலாறு முழுவதும் இன்று எவ்வாறு இருக்கின்றதோ அதைப் போன்றே. அதாவது, ஒரே காலத்தில் வாழ்ந்த சமுதாயங்கள் வெவ்வேறான தொழில் நுட்பங்களையும் நாகரீகங்களையும் கொண்டிருந்ததோடு, சமூக, கலாச்சார வேறுபாடுகளையும் கொண்டிருந்துள்ளன.

உதாரணமாக, வட அமெரிக்காவில் மருத்துவம், அறிவியல் கட்டிடக்கலை, தொழில் நுட்பங்கள் வளர்ந்து காணப்படுகின்றன. ஆனால் தென் அமெரிக்காவில் சில சமூகங்கள் இதில் பின்தங்கியும், வெளி உலகத் தொடர்பு இல்லாமலும் காணப்படுகின்றன.

மேலும் நோய்களை கண்டறிவதற்கு மிகவும் முன்னேறிய இமேஜிங் தொழில் நுட்பங்கள் உலகின் பல்வேறு பகுதிகளில் பயன்படுத்தப்பட்டு சிகிச்சை அளிக்கப் படுகின்றன. அதே சமயத்தில் நோய்கள், தீய சக்திகளால் உருவாக்கப்படுகின்றன என்ற நம்பிக்கையும் அதை நிவர்த்தி செய்வதற்கு சில சமய சடங்குகளும் உலகின் சில பகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்றன.

இன்று காணப்படும் சமூகங்கள், இனக்குழுக்களை விட சுமார் 3000 BCE யில் வாழ்ந்த இந்துஸ், எகிப்து மற்றும் சுமேரிய சமூகங்கள் மிகச் சிறந்த, உயர்ந்த கலாச்சாரங்களை பின்பற்றியுள்ளனர். இந்த உதாரணங்கள் எதை உணர்த்துகிறது என்றால் நாகரீக முன்னேற்றம் பெற்ற சமூகங்களும், அதில் பின் தங்கிய சமூகங்களும் சம காலங்களில் வாழ முடியும் என்பதே.

இப்படி 20ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பின்தங்கிய சமூகங்களை விட 1000 வருடங்களுக்கு முந்தைய சமூகங்கள் முன்னேறிய நிலையிலேயே இருந்துள்ளன. எனவே பரிணாமத்தின் வழியாகவே மனிதன் முன்னேற்றம் பெற்றான் என்பது இல்லை.

காலங்கள் செல்லச் செல்ல எல்லா துறைகளிலும் பெரிய அளவிலான முன்னேற்றங்கள் ஏற்பட்டன. அறிவியல் மற்றும் தொழில் நுட்பங்கள் பெரிய அளவில்

முன்னேற்றமும் வளர்ச்சியும் பெற்றன. எனினும், இம்மாற்றங்கள் பரிணாம வியலாளர்கள் கூறுவது போன்று பரிணாம மாற்றங்கள் என்பது பகுத்தறிவுமல்ல. அறிவியல் பூர்வமானதும் அல்ல.

ஆயிரம் வருடங்களுக்கு முந்தைய மனிதனுக்கும், தற்போதுள்ள மனிதனுக்கும் உடலியல் பண்புகளில் வேறுபாடு எதுவும் இல்லை. அறிவுத்திறனிலும் செயல் வல்லமையிலும் வேறுபாடு இல்லை.

21 ஆம் நூற்றாண்டில் வாழும் மனிதனின் மூளைத் திறனும் அறிவுத் திறனும் வளர்ச்சி பெற்றுள்ளது. அதனாலேயே நாகரீகம் பெற்றான் என்ற எண்ணம் பரிணாமவியலாளர்களால் திணிக்கப்பட்ட போதனையின் விளைவு.

உண்மை என்னவெனில் வெவ்வேறு பகுதிகளில் வாழும் மக்கள் வெவ்வேறான கோட்பாடுகளையும், கலாச்சாரங்களையும் கொண்டுள்ளனர். அமெரிக்காவில் பிறந்த அறிவியலாளனின் அதே அறிவு ஆஸ்திரேலியாவை பிறப்பிடமாக கொண்டவனிடம் இருக்காது. ஆதலால் அறிவுத் திறனும், மூளையும் வளரவில்லை என்று சொல்லிட முடியாது. மின்சாரத்தை பற்றிய அறிவே இல்லாத சமூகத்தில் பிறந்த எத்தனையோ பேர் மிகுந்த அறிவாளிகளாக இருந்துள்ளனர்.

சொல்லப்போனால் ஒவ்வொரு நூற்றாண்டிலும் வெவ்வேறான தேவைகள் எழுந்துள்ளன. நம்முடைய நடைமுறைகளும் பழங்கால எகிப்தியர்களின் நடைமுறைகளும் ஒரே மாதிரி இல்லை. அதனால் நம்முடைய கலாச்சாரம் அவர்களை விட முன்னேறியது என்று பொருளாகாது.

21வது நூற்றாண்டில் நாகரீகத்தின் சின்னமாக வானளாவிய கட்டிடங்களையும் நாம் கருதும் அதே நேரத்தில் பழங்கால எகிப்தியர்களின் நாகரீகத்தின் சின்னமாக பிரமிடுகளும் Sphinxesகளும் இருந்துள்ளன.

உண்மைகள் எந்த கண்ணோட்டத்தில் விளக்கப்படுகின்றன என்பதே முக்கியம். நிகழ்வுகள் பரிணாம முன்னேற்றங்களுக்கு ஆதரவாக உள்ளது என்ற கருத்தை கொண்ட ஒருவர் தனக்கு கிடைக்கப்பெற்ற எல்லா விபரங்களையும் அதே எண்ணத்தை கொண்டே மதிப்பிடுவார்.

இவ்வாறாக அவர் தன்னுடைய கூற்றுக்கள், கற்பனை கதைகளை நிரூபிக்க முயல்வார். புதைபடிம எலும்புத் துண்டுகளை ஆதாரமாக வைத்து அவர் தன்னுடைய முற்புனைவான கருத்துக்கு ஏற்றவாறு அந்த மக்களின் குடும்ப அமைப்பு முறைகள், அவர்களின் சமுதாய உறவுகள் அவர்கள் தங்களுடைய வாழ்நாளை கழித்த விதம் ஆகியவற்றை கற்பனை செய்வார்.

அம்மக்கள் நேராக நிற்க தெரியாதவர்கள், உறுமல் சப்தங்களை மட்டுமே வெளிப்படுத்த கூடியவர்கள், உரோமங்களை உடையவர்கள் மற்றும் கரடு முரடான கற்களை பயன்படுத்தியவர்கள் என புதைபடிம எலும்புத் துண்டுகளை ஆதாரமாக வைத்து முடிவு செய்யலாம். இவை அறிவியல் சான்றுகளின் அடிப்படையில் கூறப்பட்டவைஅல்ல. மாறாக அவருடைய கொள்கை இம்மாதிரியான விளக்கங்களை கூற வைக்கிறது. மேலும், இதற்கு தகுந்தவாறு உருவாக்கப்பட்ட போலியான வரைபடங்களும் டார்வினிஸ்ட் கொள்கையின் விளக்கமாகவே தரப்படுகின்றன.

எஞ்சிய படிமங்கள், செதுக்கப்பட்ட கற்கள் மற்றும் வரைபடங்களின் காலம் குறித்து எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு தொல்லியல் நிபுணர்கள் தற்போது தரும் விளக்கம் மேற்கூறப்பட்ட உதாரணத்திலிருந்து வேறுபட்டதாகவே உள்ளது. எனினும், பரிணாமவியலாளர்கள் தங்களுடைய கற்பனை கதைகளை எழுது வதை நிறுத்தவில்லை. அவர்களின் கற்பனை யான விளக்கங்களும், வரைபடங்களும் இன்னும் பல இதழ்கள், பத்திரிகைகளின் பக்கங்களை அலங்கரிக்கின்றன.

**தொடரும்...**

# புற்று நோய் (Cancer)

## Dr. எஸ். முஹம்மது அப்சல்

புற்றுநோய் என்பது அபரிதமாக பெருகும் திசுக்கள் (Abnormal Growth of cells), அடுத்துளள உடல் பகுதிகளையும், தூரம் உள்ள உடல் உறுப்புகளையும் ஆக்கிரமிக்கும் தன்மையை உள்ளடக்கிய ஒரு நோயாகும். இந்நோய் தகுந்த நேரத்தில் கண்டறியப்பட்டு அகற்றப்படாவிட்டால் மரணத்தை ஏற் படுத்தும். புற்றுநோய் உடலின் எந்த பகுதி யிலும், எந்த பாகத்திலும், எந்த வகையான திசுக்களிலும் வரலாம். அபரிதமான திசு வளர்ச்சி நியோபிளாசம் (சூநடியீடயளஅ) எனவும், அது பரவி கேட விளைவித்தால் மேலிக்னென்ட் (Malignant) எனவும் அழைக்கப்படும்.

புற்று நோய், பண்டைய காலங்களில் அறியப்பட்டிருந்தாலும், 19-ம் நூற்றாண்டில் ஜெர்மனி நாட்டின் நோய் இயலார் என்பவர் தான் இந்நோயின் தன்மையை தெளிவுப் படுத்தினார். 20-ம் நூற்றாண்டின் துவக்கத்தில் எல்லா வகையான புற்று நோய்களும் கண்டறியப்பட்டன.

உலக அளவில் சுமார் 10 மில்லியன் மக்கள் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் 6 மில்லியனுக்கும் அதிகமானோர் ஆண்டுதோறும் இறக்கின்றனர். உலக அளவில் நுரையீரல் புற்றுநோய் 12.3 சதவீதம். மார்பக புற்று நோய் 10.4 சதவீதம். பெருங்குடல் மற்றும் மலகுடல் புற்றுநோய் 9.4 சதவீதம் ஆகும். மோசமான Prognosis காரணமாக உலகில் ஆண்டுதோறும் நுரையீரல் புற்று நோயால் 1.1 மில்லியன் மரணங்களும், அடுத்து இரப்பை, கல்லீரல் புற்று நோயாலும் மக்கள் இறக்கின்றனர்.

இந்தியாவில் நிகழும் மரணங்களில் 3.4 சதவீதம் புற்றுநோயால் நிகழ்கிறது, 34 மில்லியன் பேர் புற்றுநோயால் பாதிக்கப் பட்டுள்ளனர். இதில் ஆண்கள் 18.4 மில்லியன், பெண்கள் 15.6 மில்லியன். சமீபத்தில் ICMR வெளியிட்ட புற்றுநோய் புள்ளி விபரம், ஆண்கள் மத்தியில் புகையிலை தொடர்பான வாய், இரப்பை புற்று நோய் 7.6 சதவீதம், நுரையீரல் புற்று நோய் 10.6 சதவீதம், பிராஸ்டேட் புற்று நோய் 12.3 சதவீதம், மார்பக புற்று நோய் 27.5 சதவீதம், அண்ட உறுப்பு புற்றுநோய் (Overy) 5.3 சதவீதம், மிசோரம், ஐஸ்வாலில் ஆண்களிடம் அதிகம் புற்றுநோயும், அருணாசல பிரதேசத்தில் பெண்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பொதுவாக, உடல் வளர்ச்சியில் உடலில் உள்ள செல்கள், மைட்டாடிக் செல் பிரிதல், வளர்ச்சி மற்றும் மாறுபாடு அடைதல் போன்ற நிகழ்வுகளை செல்லில் உள்ள மரபணுக்கள் கட்டுப்படுத்துகின்றன. இந்த மரபணுக்களில் ஏற்படும் திடீர் மாற்றம் அல்லது அதிவேக செயல்பாடு புற்றுநோய்க்கு காரணமாகிறது. புற்றுநோயின் தொடர் வளர்ச்சியில் உருவாகும் சேய் செல்களில் திடீர் மாற்றங்களினால் பல துணை செல்கள் உருவாகி வேகமாக உடலின் வேறு திசுக்களுக்கும் பரவும் தன்மை கொண்டவை. இவை சாதாரண செல்களிலிருந்து வேறுபட்டு காணப்படும். மற்ற செல்களைப் போன்று இல்லாமல் திசு வளர்ச்சி பெற்ற பின்பும் இவை செல் பிரிதல் பண்பை இழப்பதில்லை. சுற்றியுள்ள மற்ற திசுக்களையும் புற்று நோய் செல்கள் ஆக்கிரமிக்கும் தன்மை கொண்ட வை. சாதாரண செல்களைப் போன்ற செல்லின் உள் மற்றும் வெளி வளர்ச்சி கட்டுபாடு புற்று செல்களில் காணப்படு வதில்லை. செல் வளர்ச்சியை தூண்டும் ஜீனோம் (Genome) பகுதி DNA மரபனு இழையில் உள்ள புரோட்டோ ஆங்கோ ஜீன்கள் (Proto Oncogenes) தூண்டப்படும் போது செல்லின் வளர்ச்சி அதிகரிக்கிறது. இவை தூண்டப்படுத்தும், கட்டுப்படுத்தும் மரபணுக்கள் செயல் இழப்பதும் புற்று நோய் உருவாகுதல் மற்றும் பரவுதலுக்கு முக்கிய காரணங்களாகும்.

### புற்று நோய் வகைகள்

1. கார்சினோமா (Caricinoma) - இவை உள் உறுப்புகளான வாய், உணவு, குழல், இரப்பை, குடல், கருப்பை போன்றவற்றின் எபிதீலியல் திசுக்களில் வரும்.

2. சார்க்கோமா (Sarcoma) - அமைப்பு திசுக்களில் ஏற்படும் புற்றுநோய் கட்டிகள்.

3. லிம்போமா (Lympoma) - நிணநீர் திசுக்களில் வருவது. (Liquid Tumour)

4. மயிலோமோ (Myeloma)

5. லுயுக்கிமியா (Leukemia) - இரத்த வெள்ளை அணுக்களில் வரும் புற்று நோய் (Liquide Tumour)

## புற்று நோய்க்கான காரணங்கள்

### I - 1. சுற்றுச் சுழல்

80-90 சதவீதம் புற்றுநோய்க்கு சுற்றுச் சூழல் முக்கிய காரணமாகும். இதில் புகையிலை முக்கிய பங்கு வகிக்கிறது. புகையிலை காரணமாக நுரையீரல், வாய், தொண்டை (Pharynx), குரல் வளை (Larynx), உணவு குழல், சிறுநீர்பை (Urinary Bladder), கணயம் ஆகியவற்றில் புற்று நோய் ஏற்படுகிறது.

### 2. மது

அதிகமான மது அருந்துதல் உணவு குழல் மற்றும் கல்லீரல் புற்று நோயை உண்டாக்குகிறது. அதிகமாக பீர் அருந்துவது மலகுடல் புற்று நோயை உண்டாக்குவதாக கண்டறியப்பட்டுள்ளது.

### 3. உணவு முறைகள்

புகைக்கப்பட்ட மீன் (Smoked Fish), இரப்பை புற்று நோயையும், நார்சத்து குடல் புற்று நோயையும், மாட்டிறைச்சி Bowel புற்றுநோயையும், அதிக கொழுப்புள்ள உணவு மார்பக புற்று நோயையும் உண்டாக்குகிறது.

### II - வைரஸ்

1. ஹிப்படைடீஸ் B மற்றும் C (Hepatitis B,C), கல்லீரல் புற்று நோய் (Hepatocellular Carcinoma) உண்டாக்குகிறது.

2. HIV - கபோஸி சார்கோமாலை (Kapasi Sarcoma) உண்டாக்குகிறது. ஹாஜ்கின்ஸ் அல்லாத லிம்போமா (Non Hodgkins Lymphoma) AIDS காரணமாக வருகிறது.

3. இப்ஸ்டீன் பார் வைரஸ் (Epstein Barr Virus), சைட்டோ மெகலோ வைரஸ் Cytomegalo Virus), HIV போன்றவை பல வகையான புற்றுநோயை உண்டாக்குகின்றன.

### III - ஒட்டுண்ணிகள் (PARASITER):

ஒட்டுண்ணிகள் பல புற்று நோய்க்கான ரிஸ்கை அதிகப்படுத்துகிறது.

### IV - கதிர்கள்

X-கதிர்கள், காமா கதிர்கள், புற ஊதாக் கதிர்கள் புற்றுநோயை உருவாக்குகின்றன.

**V** - நமது பழக்க வழக்கங்கள், வாழ்க்கை முறை புற்றுநோய் வருவதற்கு காரணமாக அமைகிறன.

**VI** - சில வகை புற்று நோய்கள் பாரம்பரிய நோயாக கருதப்படுகிறது. ரெட்டினோபிளாஸ்டோமா (Retino Blastoma) எனும் கண்ணில் ஏற்படும் புற்று நோய் பாரம்பரியமாக ஏற்படுகிறது.

## புற்றுநோயில் காணப்படும் பொதுவான அறிகுறிகள் (Symptoms)

பசியின்மை, எடை குறைவு, வாந்தி, இரத்த சோகை (Anameia), வலி, அதிக நாள் நீடிக்கும் காய்ச்சல், தளர்ச்சி, விக்கல் போன்றவை எல்லா வகை புற்று நோய்களிலும் காணப்படும்.

பல்வேறு உறுப்புகளில் தோன்றும் புற்றுநோய்கள் இரத்தம் அல்லது நாணநீர் மூலம் தூரத்து உறுப்புகளான கல்லீரல், நுரையீரல், எலும்புகள், மற்றும் மூளைக்கு பரவலாம்.

புற்று நோயாளிகளிடம் காணப்படும் நோய் எதிர்ப்பு குறைவின் காரணமாக, உணவு செரிமான உறுப்புகள், மூளை, சிறுநீரகம், இதயம் போன்றவற்றில் தொற்று நோய்கள் வர வாய்ப்புள்ளது. பல Endocrine Syndromes (நாளமில்லா சுரப்பி), நரம்பு தொடர்பான Syndromes வர வாய்ப்புள்ளது.

## CANCER SCREENING

புற்று நோய் வர Risk அதிகம் உள்ளவர்கள் கீழ்கண்ட புற்றுநோய் Screening பரிசோனைகள் செய்து கொள்ள வேண்டும். (As per American Cancer Society recommendations)

1). 50 வயதிற்கு மேற்பட்டவர்கள் 3 முதல் 5 வருடத்திற்கு ஒரு முறை சிக்மாய் டோஸ்கோப்பி (Sigmoidoscopy) வருடம்

தோறும் Fecal Occult blood மற்றும் ஆண்கள் PSA பரிசோதனை செய்ய வேண்டும்.

2). 40 வயதிற்கு மேல் ஆண்டுதோறும் Digital Rectal Examination செய்து கொள்ள வேண்டும்.

3). 20 முதல் 40 வயதினர், 3 மாதம் ஒரு முறை தோல் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

4). மாதவிலக்கு ஏற்பட்ட பெண்களில் (Oestrogern) ஈஸ்டிரோஜன் அதிகம் உபயோகித்தவர்கள் Endometrial Tissue Sampling செய்து கொள்ள வேண்டும்.

5). நாற்பது வயதிற்கு மேற்பட்ட பெண்கள், ஆண்டு தோறும் மார்பக பரிசோதனை, Pelvic பரிசோதனை மற்றும் மேமோகிராபி செய்ய வேண்டும்.

6). 20 முதல் 40 வயதிற்கு உட்பட்டவர்கள் 3 வருடம் ஒரு முறை மார்பக பரிசோதனை செய்ய வேண்டும்.

1-3 ஆண்டுகளுக்கு ஒரு முறை PAP Test மற்றும் Pelvic பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

### புற்று நோய்க்கான சிகிச்சை முறைகள்

புற்றுநோய் சிகிச்சையின் நோக்கம், புற்று நோயை முழுவதுமாக அகற்றுவது, இவை இயலாத பட்சம், நோயின் தாக்கம் குறைந்து, நோயாளியின் அன்றாட வாழ்க்கை முறைமை மேம்படுத்தி ஆயுளை நீடிக்கச் செய்வது.

### அறுவை சிகிச்சை

அறுவை சிகிச்சை மூலம் புற்று நோய் வருவதை தடுப்பது, நோயை கண்டறிவது, நோய்க்கான Staging, நோய் அகற்றுவது, Palliative மற்றும் Rehabalitation செய்யப்படுகிறது.

அறுவை சிகிச்சை மூலம் தோல், குடல், செர்விக்ஸ், வாய் பகுதிகளில் வரும் சில Premaligant (புற்றுநோய்க்கு முன் நிலையில் உள்ள) கட்டிகளை அகற்றுவதன் மூலம் புற்று வருவது தடுக்கப்படுகிறது.

அறுவை சிகிச்சை மூலம் நோய் உறுதி செய்யப்படுவதுடன் Staging செய்யவும் உதவுகிறது.

அறுவை சிகிச்சையானது புற்று நோயை அகற்ற சிறந்த சிகிச்சை முறையாகும். அறுவை சிகிச்சை மூலம் 40 சதவீதம் புற்றுநோயாளிகள் குணமடைகின்றனர். கட்டிகள் அகற்றப் படுவதால் உறுப்புகளின் செயல்பாடு பாதுகாக்கப்படுகிறது.

### கதிர் வீச்சு முறை

கதிர் வீச்சு சிகிச்சை மூலம் மூன்று வகையாக செய்யப்படுகிறது. (1) டெலிதெராபி (Tele Therapy), 2. பிரேக்கி தெராபி (Brachy Therapy), 3. Raido Nuclide Therapy முறையில் செய்யப்படுகிறது.

டெலி தெராபி சிகிச்சை முறை அதிகமாக செய்யப்படும் முறை. வாரம் 5 நாட்கள் செய்யப்படும்.

கதிர் வீச்சு சிகிச்சை மூலம் மார்பக புற்று நோய்கள், பிராஸ்டேட் புற்றுநோய், பெண்கள் இன பெருக்க மண்டல புற்று நோய்களுக்கு சிகிச்சை செய்யப்படுகிறது. பிரேக்கி தெராப்பி மூளை புற்று நோய்க்கும் செர்விக்ஸ் புற்றுநோய்க்கும் செய்யப்படுகிறது. Radio Nuclide Therapy முறையில் தைராய்டு புற்றுநோய்க்கு சிகிச்சை செய்யப்படுகிறது.

### மருந்து சிகிச்சை முறை (Chemotheroapy)

சிகிச்சையில் உபயோகப்படுத்தும் வேதிப் பொருட்கள் செல்கள் பெருகுதல் மற்றும் புற்று கட்டியின் வளர்ச்சியை தடுக்கிறது. பல்வேறு மருந்துகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ உபயோகப்படுத்தப் படுகிறது. இச்சிகிச்சை முறையில் ஹார்மோன் களும் உபயோகப்படுத்தப்படுகின்றன.

மேம்பட்ட கண்டறியும் முறை, சிகிச்சை முறைகள் இருந்தும் புற்றுநோயால் ஏற்படும் இறப்பு அதிகமாகவே உள்ளது என்பது வேதனையான உண்மை.

# இந்துத்துவா தீவிரவாதிகள் புரோகித் – பிரக்யா சிங் தாக்கூர் ஆகியோரின் விடுதலை!

## எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்களுடன் பேட்டி!



நாட்டில் நடந்த 23 குண்டு வெடிப்புகளை நடத்தியவர்கள் இந்துத்துவ தீவிரவாதிகள்.

இந்துத்துவ தீவிரவாதிகள் தாம் தீவிரவாத செயல்களில் ஈடுபடுகின்றார்கள் என்பதை கண்டுபிடித்து உலகுக்கு அறிவித்தவர் ஹேமந்த் கர்கரே என்ற மராட்டிய மாநில காவல்துறை அதிகாரி. அவரை திட்டம் போட்டுக் கொலை செய்தார்கள், இந்த நாட்டின் மத்திய உளவுத்துறையினர் IB என்ற Intelligence Bureau. இதற்காக ஏற்பாடு செய்ததே 26/11 என அடையாளப்படுத்தப் படும் மும்பைத் தாக்குதல்.

ஹேமந்த் கர்கரே கண்டுபிடித்த, அரிய கண்டுபிடிப்புகளுள் ஒன்றுதான், அபிநவ் பாரத் என்ற தீவிரவாத அமைப்பு. அதன் காரிய தரிசிகள் தாம் புரோகித் என்ற இராணுவ அதிகாரியும், பிரக்யா சிங் தாக்கூர் என்ற பெண் சந்நியாசியும்.

இவர்கள் பல குண்டு வெடிப்புகளை நடத்தியவர்கள் பல கொலைகளைச் செய்த வர்கள். இந்தக் கொலைகளில் ஒன்றுதான் இவர்களின் அமைப்பையே சார்ந்த சுனில் ஜோஷி என்பவரின் கொலை.

இவர்களையெல்லாம் கைது செய்து சிறையில் அடைத்தார் ஹேமந்த் கர்கரே என்ற மராட்டிய காவல்துறை அதிகாரி. அப்பாவி மக்கள் பலரின் உயிரைக் குடித்த இவர்கள் வெளியே வந்திட இயலாத அளவிற்கு வழக்குகளை தகுந்த ஆதாரங்களோடு தாக்கல் செய்தார் ஹேமந்த் கர்கரே.

ஆனால் மோடி ஆட்சிக்கு வந்ததும், இது போன்ற இந்துத்துவ தீவிரவாதி களெல்லாம் விடுதலைச் செய்யப்பட்டு வருகின்றார்கள்.

அந்த வகையில் ஓர் முயற்சியை மோடியின் விரலசைப்பின் கீழ் இயங்கும் NIA என்ற தேசிய புலனாய்வு மூகவாண்மை ஓர் முயற்சியை மேற்கொண்டது. இதனை சென்ற வைகறை இதழில் (ஜூன் 2016) விரிவாகக் குறிப்பிட்டிருந்தோம்.

இந்துத்துவ தீவிரவாதியும் இந்திய இராணுவத்தின் தளபதியுமான கலோனல் புரோகித், பிரக்கியாசிங் தாக்கூர் ஆகியோர் மீது மராட்டிய மாநிலத்தின் குண்டர் சட்டம் என அறியப்படும் "மோக் கோகேகோ"வும் போடப்பட்டிருந்தது.

அண்மையில் சிறப்பு நீதிமன்றத்தில் தேசிய புலனாய்வு முகவாண்மை "மோக் கோக்கோ" என்ற குண்டர் சட்டத்திலிருந்து அவர்களை விடுவிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டது.

இதன் மூலம் இந்த இந்துத்துவ தீவிரவாதிகளின் விடுதலைக்கு வழிகோலியது, தேசிய விசாரணை முகவாண்மை (NIA).

பலர் இந்தத் தீவிரவாதிகள், கலோனல் புரோகித்வும் பெண் சந்நியாசி, பிரக்யா சிங் தாக்கூரும் விடுவிக்கப்பட்டு விட்டார்கள் என்றே எண்ணிக் கொண்டார்கள்.

இதனால் நாம் மராட்டிய மாநிலத்தின் முன்னாள் காவல்துறை அதிகாரி எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்களைத் தொலைபேசியில் பேட்டிக்கண்டோம். ஏனெனில் எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்கள் தாம். கொலை

தொடர்ச்சி 56ம் பக்கம்

# தொழில் நகரமான திருப்பூரில் அமைதியைக் குலைக்க இந்து முன்னணி சதி!

உலக அளவில் ஏற்றுமதியில் திருப்பூர் சிறந்து விளங்குகின்றது. இதன் மூலம் அரசுக்கு மிகையான வருமானம் கிடைக்கின்றது. பலருக்கு வேலைக் கிடைக்கின்றது. பலர் என்பதை விட பல லட்சம் பேருக்கு வேலை கிடைக்கின்றது.

அண்மைக்காலமாகவே இந்து முன்னணி இந்தத் திருப்பூரை குறி வைத்துச் செயல்படுகின்றது. வகுப்புக் கலவரங்களை உருவாக்கி அதில் குளிர் காயலாம் என பிரயத்தன படுகின்றது.

வகுப்புக் கலவரத்தை உருவாக்குவதன் ஒரு பகுதியாக சிறுபான்மை கிறித்தவர்கள் வழிபாடுகள் நடத்தும் சர்ச்சுகளிலும், முஸ்லிம்கள் தொழுகை நடத்தும் பள்ளி வாசல்களிலும் தொடர்ந்து பிரச்னைகளை ஏற்படுத்தி வருகின்றார்கள்.

கடந்த மாதம் வட இந்தியாவில் யாரோ பிறந்த நாளைக் காரணங்காட்டி திருப்பூரில் கலவரத்தை உருவாக்கிட திட்டமிட்டு செயல்பட்டனர். பல இடங்களில் இந்து முன்னணியின் கொடியை நாட்டியும் பெயர் பலகைகளை நாட்டியும் பிரச்னைகளை எழுப்பினர்.

இந்த முயற்சியின் ஒரு பகுதியாக திருப்பூரின் எஸ்.பி. காலணியில் பாரம் பரியமிக்க பள்ளிவாசல் ஒன்று உள்ளது. இந்தப் பள்ளிவாசலைக் கட்டும் போதே 300 அடி சுற்றுவட்டாரத்திற்கு வேற்று மத வழிபாடோ, கொடிக்கம்பமோ, பெயர் பலகையோ வரக்கூடாது எனத் தடை உத்தரவு வாங்கியுள்ளனர். ஆனால் இந்தப் பள்ளிக்கும் இன்னொரு பள்ளிக்கும் அருகில் கொடி கம்பத்தை நாட்டி குழப்பத்தை ஏற்படுத்த சதி செய்தனர்.

இப்பகுதியில் ஏற்கெனவே சில ஆண்டுகளுக்கு முன் ஷாஜஹான் என்ற அப்பாவியை இந்து முன்னணியினர் வெட்டிக் கொலை செய்தனர். அதே நேரத்தில் உஸ்மான் அலீ என்ற முஅத்தினை கொலை செய்ய கத்தியால் 20 இடங்களில் குத்தினர். ஆனால் அவர் உயிர் பிழைத்துக் கொண்டார். இந்நிலையில் மீண்டும் இப்பகுதியில் பதற்றத்தை ஏற்படுத்தி வருகின்றனர். ஆனால் முஸ்லிம்கள் அமைதியாக ஒன்றிணைந்து காவல் துறையிடம் புகார் தந்து பிரச்சினையைச் சாதுர்யமாகத் தடுத்தனர். காவல் துறையினரும் பொறுப்புடன் செயல்பட்டனர்.

காவல்துறையினர் இந்து முன்னணியினரை அழைத்து கொடிகம்பம், பெயர்பலகைகள் ஆகியவற்றை அகற்றிட வைத்தனர். இது போன்ற செயல்கள் மூலம் தமிழகத்தில் கலவரத்தை ஏற்படுத்தி தொடர்ந்து முயற்சித்து வருகின்றனர்.

இவர்களை உடனே சிறைபிடிக்கா விட்டால் தமிழகத்தின் அமைதிக்கு பங்கம் ஏற்படும் வாய்ப்புள்ளது.

**திருப்பூரிலிருந்து நமது நிருபர்**


**அடிமைத்தனத்தை இஸ்லாம் அங்கீகரித்ததா?**

**மூலம் :**
**முஹம்மது குதுப் மிஸ்ரி**
(முன்னாள் பேராசிரியர்
உம்முல்குறா பல்கலைக்கழகம், சவூதி அரேபியா)

**தமிழில் :**
**மு. குலாம் முஹம்மது**

# பெருமானார் (ஸல்) அவர்கள் நமது காலத்திற்காக அனுப்பப்பட்ட நபி

**ஆங்கிலம் : கரன் ஆம்ஸ்டிராங்** **தமிழில் : மு. குலாம் முஹம்மத்**



**நவீனங்கள் நிறைந்த இன்றைய உலகைப் பற்றி யார் கொள்ளும் பார்வையும் முழுமையானதாக அமைந்திடாது. அவர் இஸ்லாத்தைப் புரிந்து கொள்ளவில்லை என்றால்.**

**இஸ்லாத்தைப் புரிந்திட வேண்டும் என்றால், இறைவனின் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களைப் புரிந்திட வேண்டும்.**

**முஹம்மத் (ஸல்) அவர்களை ஓர் இறைத்தூதர் என்ற அளவிலும், ஒரு மனிதர் என்ற அளவிலும் ஒரு தனி மனிதர் என்ற அளவிலும் புரிந்திட வேண்டும்.**

**இந்த உலகிற்கு மதங்களைக் கொண்டு வந்தவர்களில் மிகவும் அதிகமாக அறியப்படுபவர் முஹம்மத் (ஸல்) அவர்கள்.**

**அவர்களைப் பற்றி வெளிவந்துள்ள இலக்கியங்கள் பலப்பல. இந்த இலக்கியங்களில் பல அவரது வாழ்க்கையை சரியான கோணத்தில் நம் முன் சமர்ப்பிக்கின்றன. இன்னும் பல, வேண்டுமென்றே அவருடைய வாழ்க்கையைத் திரித்தும் புரட்டியும் தவறான எண்ணங்களையும் அவற்றின் வழி தவறான சிந்தனைகளையும் விதைக்கின்றன, வளர்க்கின்றன.**

**ஆனால் கரன் ஆம்ஸ்ட்ராங் -இன் இந்த நூல் அந்த கண்ணியமிக்க மனிதரின் வாழ்க்கையை நடுநிலையோடு நம்முன் சமர்ப்பிக்கின்றது.**

SUNDAY TIMES **லண்டலிலிருந்து வெளிவரும் ஆங்கில நாளிதழ்**

*அன்பார்ந்த வாசகர்களே!*

*மன்னிக்க வேண்டும்!*

*தவிர்க்க இயலாத காரணங்களால் இந்தத் தொடர் கடந்த இரண்டு மாதங்களாக இடம் பெறவில்லை. வாசகர்கள் சிலர் இதனை முறையாகச் சுட்டிக்காட்டினார்கள். பலர் பாங்காக இடித்துக் காட்டினார்கள். இன்ஷாஅல்லாஹ், இனி இந்தத் தொடர் தொடர்ந்து இடம் பெறும்.*

*கடந்த இதழ்களில் கரன் ஆம்ஸ்டிராங் அவர்கள் பெருமானார்(ஸல்) அவர்கள் பிறந்த பூமியாகிய மக்கமா நகரின் அரசியல், பொருளாதார சமூக சூழல்களைப் பற்றி விரிவாகவே குறிப்பிட்டார்கள்.*

*முஹம்மத்(ஸல்) அவர்கள் தனது பிள்ளைப் பருவத்தில் ஓர் அநாதை வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அதன் வேதனைகளை அதிகமாக அழுத்தமாக உணர்ந்தார்கள்.*

*அதனால் உலகம் உள்ளளவும் அநாதைகள் நல்வாழ்வு வாழ்ந்திட வழிவகைச் செய்தார்கள் என்பதை கரன் ஆம்ஸ்டிராங் அவர்கள் மிகவும் சிலாகித்துக் கூறினார்கள். இறைவனின் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களை இரக்கக் குணமற்றவர், தீவிரவாதத்திற்கெல்லாம் தலையாய மனிதர் என்றெல்லாம் சாடிக் கொண்டிருக்கும், மேலை நாட்டவர்களுக்கு ஓர் சம்மட்டி அடி என்றால் அது மிகையாகாது.*

அடுத்து கரண் ஆம்ஸ்டிராங் அவர்கள் அரபு நாட்டுமக்களின் மனநிலைகளில் ஏற்பட்ட தலைகீழ் மாற்றங்களைக் குறிப்பிட்டார்கள்.

ஒரு காலத்தில் தங்கள் குலத்தவர்களில் நலிந்தவர்களுக்கு வழங்கி வாழ்வதை வழியாகக் கொண்டவர்கள் பிற்றை நாள்களில் தங்கள் சுக வாழ்க்கையையே இலட்சியமாகக் கொண்டார்கள்.

அவர்கள் நோகாத வாழ்க்கை, போகாத சுகம் என சுயநலத்தில் வீழ்ந்துகிடந்தார்கள். அதற்குத் தகுந்தாற்போல் தங்களுக்கென தனி கடவுள் கொள்கையை வைத்துக் கொண்டார்கள்.

அவர்கள் கடவுளை நம்பினார்கள். ஆனால் அதைக் கடவுளுக்குத் தங்கள் தனிப்பட்ட விவகாரத்தில் தலையிட எந்த உரிமையும் இல்லை என்றே எண்ணினார்கள்.

இதனால் இவர்கள் தங்கள் மனம் போன போக்கில் வாழ்ந்தார்கள். நாங்கள் யாருக்கும் எந்தக் கடவுளுக்கும் பதில் சொல்லிட தேவையில்லை என்றே எண்ணினார்கள். அப்படி ஒரு கடவுள், இறைவன் இருந்தால் அவனிடம் தங்களுக்காகப் பல துணைக் கடவுள்களைக் கற்பித்துக் கொண்டார்கள்.

இந்தத் துணைக் கடவுள் வழி என்ன வேண்டுமானாலும் சாதிக்கலாம் என எண்ணினார்கள். உண்மையைச் சொன்னால் அவர்கள் எந்த ஆதாரமும் அடிப்படையுமில்லாமல் இப்படியொரு கொள்கையை வளர்த்துக் கொண்டார்கள்.

இதுவரை நாம் வைகறை வெளிச்சம் ஏப்பிரல் இதழில் வெளியிட்டிருந்தோம். இந்த இதழில் அதன் தொடர்ச்சியைப் பார்ப்போம்.

# அரபுக்களின் கடவுள் கொள்கை !

அரபுக்கள் தங்களுக்கென பல்வேறு கடவுள் கொள்கையைக் கொண்டவர்களாக இருந்தாலும், ஒரு கடவுளை எல்லாக் கடவுள்களுக்கும் தலையாய கடவுள் என எண்ணினார்கள். அதுதான் அல்லாஹ் என்ற கடவுள். இந்தக் கடவுளை அவ்வளவு எளிதாக நெருக்க முடியாது என்பது அவர்களின் அடிப்படை நம்பிக்கை. அதே நேரத்தில் அந்தக் கடவுளை நாம் நெருங்கிடத் தேவையில்லை என்று கொள்ளை வகுத்திருந்தார்கள்.

அந்தப் பெரிய கடவுளை அணுக பல சிறிய கடவுள்களை வைத்திருந்தார்கள்.

ஆனால் பெரிய ஆபத்துக்கள் வந்தால், உடனே "அல்லாஹ்" என்ற அந்தப் பெரிய கடவுள்களிடம் மான்றாடத் தொடங்கி விடுவார்கள்.

அந்தக் கஷ்டம் நீங்கிவிட்டால் எதுவுமே நடக்காததைபோல் நடந்து கொள்வார்கள். இந்த நிலையை பின்னர் அல்லாஹ் அருளிய இறை வசனங்களும் உறுதி செய்தன.

இதில் ஜீரணிக்க இயலாத ஓர் விஷயம் உண்டு. அது, அரபுக்கள் தங்களுக்குப் பெண் குழந்தைகள் பிறந்தால் அதை அவமானம் எனக் கருதினார்கள். அதனால் அந்த அவமானத்திலிருந்து விடுபட அந்தப் பெண் குழந்தைகளை உயிரோடு புதைத்தார்கள்.

ஆனால் அவர்கள் மூன்று பெண் கடவுள்களைப் பெரிதாக வழிபட்டார்கள்.

அவை, லாத், அல் உஸ்ஸா, மனாத் என்பனவாகும். மக்காவிலுள்ள கஅபாவில்

அரபுக்கள் கடவுள்கள் என தாங்கள் வைத்துக் கொண்டவைகளுக்கெல்லாம் சிலைகளை வைத்திருந்தார்கள். ஆனால், லாத், அல்உஸ்ஸா, மனாத் ஆகிய மூன்று பெண் கடவுள்களுக்கும் சிலை வைத்திடவில்லை. அந்த கடவுள்களுக்கு தாயூஃப், நஹ்லாக், குதாத் ஆகிய இடங்களில் மட்டுமே சிலைகளை வைத்திருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இது குறித்தும் ஓர் ஆய்வை மேற்கொண்டேன். அதில் இந்தக் கடவுள்கள் அதாவது பெண்கடவுள்கள் சிரியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட கடவுள்கள் என்பது புலப்பட்டது. ஆனால் அரபுக்கள் இந்தக் கடவுள்களைத் தங்கள் சொந்தக் கடவுள்களாகவே பாவித்தார்கள். அவற்றிற்கு விழாக்கள் எடுத்தார்கள்.

இந்தப் பெண் கடவுள்களை அவர்கள் வைத்திருந்த இடங்களை மக்காவிலுள்ள கஅபாவைப் போல் பாவித்தார்கள். கண்ணியமாகக் கருதினார்கள்.

ஆனால் இந்தக் கடவுள்கள் எல்லாம் அல்லாஹ்வுக்குக் கீழ் உள்ளக் கடவுள்கள் தாம். அல்லாஹ்வை அவர்கள் அரபி மொழியில் அழைத்ததை அப்படியே நாம் ஆங்கிலத்தில் தருவதாக இருந்தால் அல்லர்ஹ High God or Sky God. அதாவது அல்லாஹ் உயர்ந்த இடத்திலிருக்கும் உயர்ந்தக் கடவுள். அவன் அல்லாஹ் வானத்தில் எட்டாத இடத்தில் இருப்பவன்.

இந்த லாத், அல் உஸா, மனாத் ஆகிய கடவுள்கள் அல்லாஹ்வை அடைவதற்கு உதவி செய்பவை. இவை உயரத்தில் பறந்த அல்லாஹ்வை எட்டிப்பிடிக்கும் ஆற்றல்மிக்கவை என அவர்கள் கருதியதால் வானத்தில் பறக்கும் பறவைகளில் மிகவும் அழகானவற்றின் பெயர்களை இந்தக் கடவள்களுக்கு வைத்தார்கள். ‘கரானிக்’ என்ற பறவை நீண்ட கருத்தையும், நீண்டு வளர்ந்த கால்களையும் கொண்டது. வானத்தில் மிகவும் உயரத்தில் பறப்பது. இதனால் அந்த SKY God என்ற வானத்துக் கடவுளை அல்லாஹ்வை சென்றடைந்து விடும் என்ற நம்பிக்கையையும் கொண்டிருந்தார்கள். அதனால் இந்தப் பறவைகளின் பெயர்களை அந்தக் கடவுள்களுக்குப் பட்டப் பெயராக வைத்திருந்தார்கள்.

மக்காவில் இந்தக் கடவுள்களுக்கு கோயில்கள் வசியுமிடங்கள் இல்லை. ஆனால் மக்கத்து மக்கள் இந்தக் கடவுள்களைத் தான் அதிகமாகப் போற்றிப் புகழ்ந்தார்கள், மண்டியிட்டார்கள், யாசித்தார்கள். இந்தக் கடவுள்களைக் கொண்டுதான் எட்டாத கடவுள் “அல்லாஹ்”வை அடைந்திட வேண்டும் என நம்பினார்கள். அதனால் அல்லாஹ்விடம் தங்கள் கஷ்டங்களையும், நஷ்டங்களையும் எடுத்துரைத்து சிபாரிசு செய்யும் படி வேண்டினார்கள்.

இந்தக் கடவுள்கள் மீது அதிகமான பற்றும், பக்தி, பணிவும் கொண்டவர்கள் குறைஷிகள் என்ற மக்காவின் உயர்ந்தக் குலத்தவர்கள் தாம்.

இந்த குறைஷிகள் மக்காவை வலம் வந்து ஓடும் போதெல்லாம் “அல்லாத் - அல் உஸ்ஸா - மனாத்” இன்னும் உள்ள கடவுள்களே நீங்கள் பரிந்துரையுங்கள் என்று பொருள்படும் முழக்கங்களை எழுப்பினார்கள்.

அநீதிகள், பாவங்கள், இவற்றில் தங்குதடையின்றி ஈடுபட்ட இவர்கள் இந்தக் கடவுள்களை வெட்கமின்றி தங்கள் உதவிக்கு அழைத்துக் கொண்டார்கள். அங்கே ஓர் வெற்றிடம் அவர்கள் உள்ளத்தில்

அதனை இன்ஷா அல்லா அடுத்த இதழில் பார்ப்போம்.

**தொடரும்**

# அப்துல் ரவூஃப்-இன் அம்மாவை அல்லாஹ் அழைத்துக் கொண்டான்!

**தா**ஃவா களத்தில் நம்மோடு எல்லா நிலைகளிலும் துணை நிற்பவர் தம்பி நிடூர் அப்துல் ரவூஃப். அவருடைய முயற்சியின் விளைவே இன்றுள்ள பல தாஃவா மையங்கள்.

நாம் நிறுவி நிருவகித்து வந்ததே அறிவகம் என்ற இஸ்லாமியக் கல்விக் கூடம். இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களுக்கான பயிற்சிக் கூடம். இதனை திருப்பனந்தாளில் நடத்தியபோது நிருவாகச் செலவிற்கு மாதம் தவறாமல் பணம் தந்து உதவியவர்கள் இந்த ரவூஃப் குடும்பத்தினரே!

அரசு தந்த நெருக்கடிகளுக்குப் பிறகு நாம் முத்துத்தேவன் பட்டியில் ஆசிரியர் ஹிதாயத்துல்லாஹ் அவர்கள் எதிர்கொண்ட பிரச்னைகளுக்குத் தீர்வாக நகர்ந்தபோது, ஓர் வனப்பான கட்டிடத்தை எழுப்புவதற்கு ஒரு வெரும் நிதியைத் தந்தவர்களும் இந்த அப்துல் ரவூஃப் குடும்பதினரே. அப்போதெல்லாம் நாம் வெளியில் நிதி வசூலிப்பதில்லை.

பின்னர் இந்தப் பணிகளை விரிவாக்கிட நீங்கள் ஏன் எங்கள் நிதிகளையும் பயன் படுத்திடக் கூடாது என சிலர் வினாக்களை எழுப்பிய போதுதான் நாம் சற்று நமது வட்டத்தை விட்டு வெளியே வந்தோம்.

இதில் எல்லாம் மிக்க துணையாக நின்றவர்கள் தம்பி அப்துல் ரவூஃப் இன் தயார் முஹம்மத் ஃபாத்திமா அவர்கள்.

மனித நீதி பாசறை என்றொன்றை நாம் நடத்தி வந்தோம். இதன் முதல் சகோதர்களின் சந்திப்பிற்கான பெருந்தொகையை ஏற்றக் கொண்டவர்கள் அப்துல் ரவூஃப் அவர்களின் தயார் அவர்களே! சகோதரர்களின் சந்திப்பு முடிந்து, நான் அவர்களைச் சந்தித்த போது நிறைய செலவானதே, சந்திப்பு பயனுள்ளதாக இருந்ததா எனக் கேட்டார்கள்.

அந்த சந்திப்பு தந்த பயன் பலவற்றையும் பற்றிச் சொன்னேன் அகம் மகிழ்ந்தார்கள்.

எனக்கும் வழக்கம் போல் என்னோடு வந்த சகோதரர்களுக்கும் விருந்து வைத்து வாழ்த்தி அனுப்பினார்கள்.

பிற்றை நாட்களில் பல்வேறு அநீதிகளுக்கெதிராக மனித நீதி பாசறை எம்.என்.பி. என்ற இயக்கத்தை 2000 ஆம் ஆண்டு நிறுவினோம்.

எம்.என்.பி.யின் விறுவிறுப்பான நாட்களில் வழக்குகள் பல எம்.என்.பி.யைச் சுற்றி. அத்தனையும் பொய் வழக்குகள். அதனால் நாம் சில எதிர் வழக்குகளைக் காவல் துறையின் மேல் தொடுத்திட வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டோம். இதற்கான நிதி ஆதாரத்தை தேடுவதில் ரவூஃப் -ஐ பயன்படுத்தினோம். அதனால் ரவூஃப் வியாபாரத்தில் இழப்புகள். அதனையும் தாங்கி நின்று நமக்கு உதவி செய்தார்கள். அல்ஹம்ந்துலில்லாஹ்!

நீண்ட நெடும் நாள்களாக சுமார் 25 ஆண்டுகளாக சர்க்கரையால் பீடிக்கப் பட்டிருந்தார்கள். ஆனால் "சர்க்கரையை" கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்கள். மருத்துவர்கள் போடும் நிபந்தனைகளை அப்படியே பின்பற்றி வந்தார்கள். டாக்டர் மோகன் அவர்கள் சர்க்கரை நோயைக் கட்டுபபாட்டில் வைத்திருப்பதையும், அதில் காட்டும் கட்டுப்பாடுகளையும் பாராட்டி யதை நான் நேரில் கேட்டிருக்கின்றேன்.

ரவூஃப் இன் தந்தையை இளம் வயதிலேயே அல்லாஹ் அழைத்துக் கொண்டான்.

அதனால் வாழ்க்கையின் கடினமான பகுதிகளை தன்னந்தனியாகவே எதிர் கொண்ட வேண்டிய சூழல். தன் இரண்டு மகன்களின் கல்வி, 4 மகள்களின் திருமணம் ஆகியவற்றை எதிர் கொண்டு அவற்றில் வெற்றி கண்டவர்.

மகன்கள், அப்துல்ரஊஃப், மன்சூர் அலீ ஆகியோர் தமிழகத்தில் தழைத்த இஸ்லாமிய இயக்கங்களில் பெரும் பங்காற்றியவர்கள்.

எமது 36 ஆண்டுகால தாஃவா பணியில் துணை நின்றவர்கள்.

இந்தப் பெரும் செல்வங்களை இஸ்லாத்திற்குத் தந்த அந்த பெருந்தகை 20.5.2016 அன்று அல்லாஹ்விடம் சென்று சேர்ந்தார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா அலைஹி ராஜிவூன்.

ஹஜ் கடமையை நிறைவாக நிறைவேற்றி இருந்தார்கள். சலாத், இபாத இவற்றில் மிகைத்த நெறிமுறைகளோடு வாழ்ந்தார்கள்.

தனது கடைசி நாள்களில் எல்லோரிடமும் தான் ஏதாவது மனம் புண்படும்படி நடந்திருந்தால் மன்னிக்கும்படி கேட்டு வந்தார்கள்.

அந்த அளவுக்கு அல்லாஹ்வையும், இறுதி நாளையும் முன்னிறுத்தி வாழ்ந்தார்கள்.

இஸ்லாமிய இயக்க வாழ்க்கையில் முஹம்மது பாத்திமா ரஊஃப் இன் அன்னை அவர்களின் கைகளால் பல முறை உணவு அல்ல விருந்துண்டவன் என்ற அடிப்படையில் அவர்களின் ‘ஜனசா’ தொழுகையில் கலந்து கொண்டிருக்க வேண்டும். ஆனால் மறுநாள் காலையில் நாம் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டியிருந்தது. தமிழகமெங்கு மிருந்து பிரதிநிதிகள் வந்து காத்திருந்தனர்.

அதனால் நிகழ்ச்சியை ஏற்றுச் செய்திட இயலவில்லை. ஆனால் 21.5.2016 அன்று லுஹர் நேரத்தில் தொழுகை முடிந்தவுடன் வந்திருந்த பிரதிநிதிகளுடன் காயிஃப் - ஜனாஸா தொழுகையை அனைவரும் இணைந்து நிறைவேற்றி அவர்களின் மஃபிரத்திற்குத் துஆ செய்தோம்.

அல்லாஹ் அவர்களுடைய பாவங்களை மன்னித்து சுவர்க்கத்தில் உயர்ந்த இடத்தை வழங்கிடுவானாக!

இந்தத் துஆவை வைகறை வாசகர்கள் அனைவரும் செய்திட வேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன்.

**அன்புடன்**

**மு. குலாம் முஹம்மத், ஆசிரியர்**





**மனம் திருந்திய குற்றவாளி**
**சுவாமி அசிமானந்தாவின்**
**ஒப்புதல் வாக்குமூலம்**

*விலை ரூ. 20 மட்டுமே*

**வேர்கள் பதிப்பகம்,**
**52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001.**
**தொடர்ப்புக்கு : 8148129887**

# மதுரையும் வண்டி பந்தயமும்

மதுரை மாநகரின் இருதய பகுதியில் அமைந்திருக்கும் ஒரு பகுதிதான் காஜிமார் தெரு. பல நூறு வருடங்களாக முஸ்லிம்கள் குழுமி வாழும் பகுதி இது. இங்கு ஒரு பெரிய பள்ளிவாசல் ஒன்றும் உண்டு. இப்பகுதியை சேர்ந்தவர்கள்தான் பல வருடங்களாக "மதுரை டவுன் காஜி" என்ற அரசு பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படும் பாக்கியம் பெற்றவர்கள். இம்முஸ்லிம்கள் பொதுவாக அரசு ஊழியர் களாகவே இருப்பார்கள். காலவோட்டத்தில் உலக மாற்றத்தில் இன்று தொழில் முனைவர் பலர் உள்ளனர்.

இப்பகுதி மக்களில் பலரும் தங்கள் இஸ்லாமிய ஆன்மீக கடமைகளில் ஆழ்ந்த பற்றுடையவர்கள். ரமழான் மாதத்தின் கடைசி பத்து நோன்பு நாட்களில் இஃதிகாஃப் என்றொரு ஆன்மீக தேடல் உண்டு. வீட்டிற்கு திரும்பிச் செல்லாமல் பள்ளிவாசலிலேயே 10 நாட்களும் அமர்ந்து நோன்பு நோற்று இறைசேவையில் ஈடுபடக்கூடிய திருப் பணியில் இப்பகுதியைச் சேர்ந்தவர்கள் முன்னிலையில் இருப்பார்கள். இது போன்ற ஆன்மீக தேடல் பிற பள்ளிகளுக்கு சமீப காலங்களில்தான் பரவியுள்ளது. இப்படி ஆன்மீக ஈடுபாடு கொண்ட பல பெரியோர்கள் வாழும் பகுதியிது.

இங்கு ஒரு நடைமுறை காலகாலமாக இருந்து வருகிறது. ரமலான் பெருநாள் பண்டிகையன்று, மாலை வேளையில் பலரும் கலந்துக் கொள்ளும் வீர விளையாட்டுதான் அது. தங்கள் பயண வாகனங்களை இப்பெரிய பள்ளியை சுற்றிய அகலமான தெருக்களில் சுற்றி சுற்றி வந்து "கேர்ளா ரேஸ்" போன்று நடத்துகிறார்கள் இப்பகுதியை சேர்ந்தவர்கள். இதில் ஏற்படும் பரபரப்புக்கு பஞ்சமில்லை. இது குதூகலத்தை ஏற்படுத்தும். பரபரப்பு (பத்திரிக்கைள் அன்றாடம் முஸ்லிம்களை பற்றி அவதூறு, பொய் செய்திகளை பரப்பும் பரபரப்பை போன்றதில்லை இது.) இளைஞர்கள் பலர் கலந்து கொள்வர். இதை வேடிக்கை பார்க்க பல பகுதிகளை சேர்ந்த சாதி, மதம் கடந்த சகோதர சமுதாயத்தை சேர்ந்தவர்களும் வருவார்கள். கலந்துக் கொள்வார்கள். கண்டுகளிப்பார்கள்.

இதில் ஆடல், பாடல் இல்லை. கவர்ச்சி ஆட்டங்கள் இல்லை. அருவருப்பும் இல்லை. ஆதலால் பெண்களை சிறுமைப்படுத்தும் செயலும், மனநிலையும் இல்லை.

ஓங்கி ஒலிக்கும் பாடல்களும் இல்லை. ஒலி மாசும் (Sound Pollution) இல்லை. ஆக ஒழுக்க கேடும் இல்லை.

இந்த வண்டி பந்தயத்தில் சகோதர சமுதாயத்தை சேர்ந்தவர்களும் வண்டி விரட்டுவார்கள். இவர்கள் முஸ்லிம்களின் நண்பர்களாக இருப்பார்கள். சமூக நல்லிணக்கத்திற்கு துணைபோகக் கூடியவையாக இது இருந்து வந்தது.

விஞ்ஞான வளர்ச்சியின் விளைவால் குதிரை வண்டி, ரேக்ளா வண்டிகளுக்கு பதிலாக, ஆட்டோ, கார், மற்றும் டூவீலர்கள் கலந்துக் கொள்ள ஆரம்பித்தன. பிரச்சனையும் வெளிப்படத் தொடங்கியது.

வண்டி பந்தயம் நடந்து வந்த அகலமான பாதைகளில் பஸ் போக்குவரத்து பாதிக்கப் பட்டது. பொதுமக்கள் கவலைக் கொள்ள தொடங்கினர். வண்டி பந்தயம் ரமலான் மாதத்தில், முஸ்லிம் பகுதியில் நடப்பதால் இது முஸ்லிம்களின் விளை யாட்டாகி விட்டதால், முஸ்லிம் பெரியவர்கள்,

சமூக ஆர்வலர்கள் இது உருவாக்கும் பிரச்சனையை பற்றி கவலைக் கொள்ள தொடங்கினர்.

கருத்து வேறுபாடுகள் முளைத்தன. இரு அணிகளானது கருத்துகள். ஆனால் மோதல் இல்லை. இறைவன் இணக்கத்தை காப்பானாக.

எனினும், பொறுப்புணர்ந்த அரசோ, அல்லது காவல்துறையோ இவ்வண்டி பந்தயத்தை நிறுத்த முயற்சிகள் பல செய்தன. காரணம் காட்டின.

காலங்காலமாக போலீஸ் பாதுகாப்பில் நடந்து வந்த இப்பாரம்பரிய விளையாட்டு, இன்று காவல்துறையால் நெருக்கடிக் குள்ளாக்கப்பட்டுள்ளது. நிறுத்தும் சூழ்நிலைக்கு வந்துவிட்டது.

ஒவ்வொரு மனிதனிடத்திலும், ஒவ்வொரு திறன் இருக்கிறது. அதற்கு வடிகாலாகவே பல துறைகளை சேர்ந்த செயல் முறைகள் மனித வாழ்வில் காணகிடக்கின்றன. உடல் தகுதியுள்ளவர் காவல்துறை, ராணுவ துறை இவற்றிற்கு செல்வார். பிறபிற தகுதியுடையவர் பிற துறைகளுக்கு செல்வர். இத்திறன்களை வெளிப்படுத்தும் பொது ஜன விளையாட்டு தான் பாரம்பரிய விளையாட்டு. உதாரணத்திற்கு ரேக்ளா ரேஸ், ஜல்லிகட்டு என்று பல உள்ளன. இது எல்லாம் மத நம்பிக்கையை சார்ந்தது இல்லை.

மனிதனுக்கு உணவும், உடையும், தேவைப்படுவதுபோல் சம்பிரதாய சடங்கு களும், பாரம்பரிய வீர விளையாட்டுகளும் தேவைப்படுகின்றன. இவ்விளையாட்டுகள் தான் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் போன்றவற்றை ஊட்டக்கூடியது.

உலக அளவில் நம் நாட்டை அடையாளப்படுத்துகின்றன இது போன்ற விளையாட்டுக்கள். நவீன யுகத்தில் பைக் ரேஸ், கார் ரேஸ் போன்றவற்றை நம் நாடு ஊக்குவிக்கின்றது. இப்படியான போட்டியில் ஈடுபடும் இளைஞர்கள் ஊக்குவிக்கும் ஒரு வாய்ப்பாக இது இருக்கிறது.

இவ்விளையாட்டுகளில் அதிகம் ஈர்க்கப்படக் கூடியவர்கள் இளைஞர்கள். பெரும் நகரங்களில் இந்த இளைய சக்திகளிடம் சாதி மத துவேஷங்கள் பொதுவாக இராது. இவர்களை ஆக்க சக்தியாக, ஒற்றுமை சக்தியாக ஆக்கக் கூடியது விளையாட்டுகள்.

விளையாட்டுகள் உடற் பயிற்சியை போன்றது. ஆரோக்கியத்தை வழங்கக் கூடியது. புத்திகூர்மையை ஏற்படுத்தக் கூடியது. நமது சட்டங்கள் இதனை ஊக்குவிக்கின்றன.

இப்படி பல நன்மைகளையும், சமூக இணக்கத்தையும் ஏற்படுத்தும் ரமழான் வண்டி பந்தயத்தை சில வருடங்கள் முன் நடந்த சில பலிகளை கொண்டு தடுக்க முயற்சித்து வருகிறது மதுரை மாநகர காவல் துறை.

இத்துறையை சேர்ந்த உதவி கமிஷனர் சகோ. பீர்முகைதீன் அவர்கள் கடந்த 02.7.2016 மதியம் காஜிமார் பள்ளியில் லுஹர் தொழுகைக்கு பின் ஜமாத்தார்களின் அறிவுறுத்தலின் படி தொழுகை பள்ளியில் போலீஸ் தொப்பியில்லாமல் தொழுகை தொப்பியில் உரை நிகழ்த்தினார். தாடி வைக்க பிரச்சனை செய்யும் துறையில் தொழுகை தொப்பியில் யூனிபார்ம் உடன் ஒரு போலீஸ் அதிகாரியா? வியப்புதான். இவருடன் ஆய்வாளர் சகோ. துரை பாண்டியன் அவர்களும் கலந்து கொண்டார்கள்.

உதவி கமிஷனர் பீர் முகைதீன் அவர்கள் அற்புதமாக இம்மை, மறுமை வாழ்வை காட்டியும், இறைவனின் அருட் கொடையில் உயிரின் முக்கியத்துவத்தையும் எடுத்துக் சொல்லியதோடு, அநாவசியமாக உயிர் இழப்பு ஏற்படுவதை எடுத்துச் சொல்லி, ரமலான் வண்டி ரேஸை தடுப்பதை பற்றி வலியுறுத்தி பேசினார்கள்.

முடிவில், கலந்து கொண்டவர்களின் கருத்து கேட்காமல் சலவாத்தை ராகமாக பாடி குழுமியிருந்தவர்களை அவ்வாறே செய்ய வைத்து இனிதே முடித்துக் கொண்டார் உதவி கமிஷனர் அவர்கள்.

அவருடைய காவல்துறை நேரத்தில் எந்த ஒரு மனிதனும், அவன் இந்துவோ, முஸ்லிமோ, கிறிஸ்தவனோ, ஒரு குறையையும் காண முடியாது. நூறு சதவீதம் வரவேற்க தக்கது.

ஆனால் நமக்கு ஏற்படும் கேள்வியை நாகரீக உலகில் தடுத்து நிறுத்த முடியவில்லை.

காலங்காலமாக பாதுகாப்பு கொடுத்த காவல்துறை இப்பொழுது ஏன் பாதுகாப்பு தர தயங்குகிறது.

உயிரிழப்புகளை குறைக்கும் பொறுப்பை சுமக்கும் காவல் துறை இதுவரை அதற்கான மாற்று ஏற்பாடுகளை ஏதாவது செய்துள்ளதா?

கடந்த காலங்களில் ஏற்படுத்தப்பட்ட மாற்று ஏற்பாடுகளின் விவரங்கள் என்ன?

தமிழ்நாட்டில் பல வீரவிளையாட்டுகள் நடக்கின்றன. அதற்கு அரசின் அனுமதியும், காவல்துறையின் பாதுகாப்பு எப்படி தரப்படுகிறதோ, அவ்வாறு ரமலான் வண்டி ரேஸுக்கு தரப்பட்டுள்ளதா? புள்ளி விவரம் என்ன சொல்கிறது?

இந்த ரேஸை தடுப்பதற்கு பதிலாக, முறைபடுத்த மாற்று திட்டம் இருந்தால், பத்திரிகை வாயிலாக மக்களுக்கு தெரியப்டுத்துமா காவல்துறை.

இந்த ரேஸை மக்கள் நடமாடும் மக்கள் பகுதிகளில் நடத்தவிட தயங்கும் காவல்துறை, தமுக்கம் மைதானம் போன்ற அரசின் மைதானங்களில் நடத்த தேவையான அனைத்துவிதமான உதவியை வழங்குவதை பற்றி பள்ளிவாசலில் வந்து ஆலோசனை கூறினால், அது சகோதர சமுதாயத்தை சேர்ந்தவர்களையும் இணைத்து பிரமாதமான சுற்றுலா நிகழ்வாக மாற்றலாமே? உலக பிரபலம் ஆகுமே.

இப்படியெல்லாம் ஆக்கபூர்வ முயற்சியை விட்டுவிட்டு மாற்றந்தாய் மனது டன் தடுக்கும் நோக்கத்துடன் ஜமாத்தார்களை அணுகியது நல்ல இணக்கமான ஆரோக்கிய மான அணுகுமுறையாக இல்லை.

உயிரிழப்பை குறைக்கவும், தடுக்கவும் தான் இந்த நடவடிக்கை என்று திரும்பத் திரும்ப காரணம் காட்டினால் நேர்மையான நடைமுறையில் உள்ள சில காவல்துறை முன்னுதாரணங்கள் காட்ட வேண்டியுள்ளது.

மதுரையில் பல பால்குட ஊர்வலங்கள் முக்கியமான டிராபிக்கான சாலைகளில் நடக்கின்றன. சித்திரை திருவிழாவை ஒட்டிய பல ஆன்மீக ஊர்வலங்கள் பல சாலைகளில் நடக்கின்றன. அதில் எப்படி உயிரிழப்பு ஏற்படாமல் தக்க நடவடிக்கையை காவல்துறை எடுத்து போக்குவரத்தில் மாற்றம் செய்கிறதோ, அதுபோன்று ரமலான் வண்டி ரேஸில் செய்யலாமே?

இந்த ரேஸ் கூட 2 அல்லது 3 மணி நேரத்தில் முடியக் கூடியதுதான். இதற்கு ஏற்றாற்போல் வசதிகளை காவல்துறை செய்து தர வேண்டும் என்பதுதான் பாரம்பரிய விளையாட்டுகளை உயிர்ப்பிக்க காக்க துடிக்கும் உள்ளங்களின் எதிர்பார்ப்பு. செய்யுமா காவல்துறை?

சில சட்டங்களை காரணம் காட்டி, இதனை மொத்தமாக தடுப்பது முஸ்லிம்களின் உள்ளத்தில் சந்தேகங்களை உருவாக்குகிறது. இன்று ஆலோசனை இப்படி வருகிறது. நாளை பாங்கு ஒலிதடை என்று வந்தால் என்ன செய்வது?த இதை நாசூக்காக அல்லாஹ், ரசூல், பிறருக்கு தொந்தரவு தரக்கூடாது என்று கூறினார்கள் என பேசி காவல்துறை ஆலோசனை என்று வந்தால்?

இப்படி ஆலோசனைகள் வளர்ந்து வளர்ந்து முஸ்லிம்களாகிய நீங்கள் தொழலாம், ஆனால் நாங்கள் தான் உங்கள் பள்ளியின் பூட்டை திறப்போம், மூடுவோம் என்று சொல்ல எவ்வளவு காலம் பிடித்திடும்? என்பதை உணர்வார்களாக மக்கள்.

சின்ன நன்மையில் நம்மை ஈடுபடுத்தி, அதனால் மனம் பக்குவமடைய அப்பக்குவத்தையே பள்ளிக்கு ஆபத்தாக கொண்டு போகமுடியும் என்பதை உணர வேண்டும்.

இந்தியாவில் முஸ்லிம்களுக்கு எதிராக நடக்கும் செயல்முறைகள் நமக்கு முனனெச்ச ரிக்கை உணர்வை ஏற்படுத்தினால் அது நமது தப்பில்லை.

வண்டி ரேஸை புரோஃபஸனலாக மாற்றுவதற்கு ஜமாத்தார்கள் முயற்சி செய்ய வேண்டும். பல்வேறு மோட்டார்

கம்பெனிகள் தங்கள் புதிய யுக்திகளை கொண்ட வண்டிகளை அறிமுகம் செய்ய மோட்டார் ரேஸ்களை நடத்தி வருகின்றன. இவற்றுடன் இணைந்து இப்பாரம்பரிய விளையாட்டை நவீன உலகத்திற்கு ஏற்ற மாதிரி அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்ல வேண்டும். சாதனையாளர்களை, திறமை யாளர்களை நாட்டுக்கு அறிமுகம் செய்யலாம்.

---

**46ம் பக்கத்தின் தொடர்ச்சி. . .**

செய்யப்பட்டக் காவல் துறை அதிகாரி ஹேமந்த் கர்கரே கொலைக்கு நீதி தேடிக் கொண்டிருக் கின்றார். நீதி தேடும் இந்த முயற்சியில் அவருக்கு புரோகித், பிரக்யா சிங் தாக்கூர் ஆகியோர் மீது தொடரப்பட்ட வழக்குகளை நன்றாக அறிவார். அவர் நம்மிடம் பேசியவற்றை அப்படியே இங்கு பதிவு செய்கின்றோம்.

**வைகறை :** பிரக்யா சிங் தாக்கூரும் புரோகிதும் பிணையில் விடப்படுவார் என்ற எண்ணம் வலுப்பெற்று வருகின்றது. குறிப்பாக தேசிய புலனாய்வு முகவாண்மை அவர்கள் மீது குண்டர் சட்டமான மோக்கோக்கோ பாய்ச்சிட போதிய ஆதாரங்கள் இல்லை எனக் கூறி இருக்கையில் இந்த எண்ணம், அதாவது அவர்கள் பிணையில் விடப்படுவார்கள் என்ற எண்ணம் இன்றும் உறுதியாகி வருகின்றது.

இவர்கள் பிணையில் விடப்படு வார்களா?

**எஸ்.எம். முஷ்ரிப் :** நிச்சயமாக அவர்கள் பிணையில் வந்திட இயலாது. நானே என்னை இநதப் பிணை வழக்கில், இணைத்துக் கொண்டிருக்கின்றன. பிரக்யா சிங், புரோகித் ஆகியோர் எல்லா சதிதிட்டங்களிலும் (Conspiracies) தங்களை இணைத்துக் கொண்டுள்ளார்கள். இதனை நாம் வெளியிட்டு விநியோகித்துவரும் சி.டியில் பகுதி ழ இல் பார்க்கலாம். இந்த சி.டி.ஐயும் இன்னுமுள்ள ஆதாரங்களையும் நாம் நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருக்கின்றோம்.

பெண் சந்நியாசி தாக்கூர், புரோகித், தயானந்தா பாண்டே ஆகிய அனைவரும் பரீதாபாத் இல் நடந்த சதி ஆலோசனையில் கலந்து கொண்டார்கள். இதற்கான ஆதாரங்களை ஹேமந்த் கர்கரேயே நீதிமன்றத்தில் தாக்கல் செய்துவிட்டார். இதனை இந்த தீவிரவாதிகளின் வழக்கறிஞர்களோ,அல்லது NIA என்ற தேசிய புலனாய்வு மகவாண்மையோ இன்றளவும் எதிர்க்கவில்லை. இல்லை என்றும் சொல்லிடவில்லை. பிரக்யா சிங் தாக்கூரின் செல்போன் அலைபேசி அவள் தொடர்ந்து இவர்களுடன் தொடர்பில் இருந்தார் என்பதை நிரூபித்துக் கொண்டே இருக்கின்றது.

## வைகறை வெளிச்சம் வாசகர்கள் அனைவருக்கும் ரமழான் பெருநாள் ஈதுல் ஃபித்ர் நல் வாழ்த்துக்கள்

இந்தப் புனித ரமழான் மாதத்தில் தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட், நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம் இவற்றைச் சார்ந்த செயல் மழவர்கள். உங்கள் உதவியை நாடி வந்தார்கள். உங்கள் நன்கொடைகளை தந்து உற்சாகப்படுத்தினீர்கள். உங்கள் அனைவருக்கும் எங்கள் உளமார்ந்த நன்றியினைத் உரித்தாக்கிக் கொள்கின்றோம்.

இவண்,
**தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட் நிருவாகிகள்**
**மு. குலாம் முஹம்மத்,** தாளாளர்
**பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி,** பொருளாளர்
**எஸ்.ஏ. அப்துல் ரவூஃப்,** இணைச் செயலாளர்
**நீதி அமைதிக்கான மக்கள் இயக்கத்தின் செயல்வீரர்கள்**
**மற்றும் வைகறை வாசகர் வட்டம்.**

# 35 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் பரபரப்பில் மீனாட்சிபுரம்!

மென்பொறியாளர் சுவாதி கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட ராம்குமார் சொந்த ஊரான மீனாட்சிபுரம் கிராமம் 35 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் நாடு முழுவதும் பேசப்படும் கிராமமாக மாறி இருக்கிறது.

திருநெல்வேலி மாவட்டத்தின் மேற்கு கரையோரம் அமைந்துள்ள சின்னஞ்சிறிய கிராமம் மீனாட்சிபுரம். செங்கோட்டை ஊராட்சி ஒன்றியம், தேன்பொத்தை ஊராட்சிக்கு உட்பட்ட இந்த கிராமத்தில் சுமார் 300 குடும்பங்கள் வசித்து வருகின்றன. மீனாட்சிபுரம் கடந்த 1981-ம் ஆண்டு நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இங்கு வசிக்கும் 300 குடும்பங்களில் 210 குடும்பத்தினர் இந்து மதத்தில் இருந்து ஒட்டுமொத்தமாக இஸ்லாம் மார்க்கத்திற்கு மாறியதுதான் அந்த பரபரப்புக்கு காரணம்.

தீண்டாமை, மேல் வர்க்கத்தின் அடக்குமுறை போன்ற காரணங்களால் 1981-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19ம் தேதி பல குடும்பங்கள் இஸ்லாம் மதத்துக்கு மாறின. நாடு முழுவதும் இந்த விவகாரம் எதிரொலித்தது. பா.ஜ.க. தேசிய தலைவராக இருந்த வாஜ்பாய் உள்ளிட்டோர் இந்த கிராமத்துக்கு நேரில் வந்து நிலைமையை ஆராய்ந்தனர். அந்த மீனாட்சிபுரம் தற்போது நாட்டையே உலுக்கிய ஒரு படுகொலை சம்பவத்தின் மூலம் மீண்டும் பரபரப்பு பெற்றிருக்கிறது.

அரசு ஆவணங்களிலும், இந்துக் களிடமும் அந்தக் கிராமத்துக்கு மீனாட்சிபுரம் என்பதுதான் பெயர். ஆனால் உள்ளூர் முஸ்லிம்களுக்கு அது ரஹ்மத் நகர். இங்கு பெயரும் மதமும்தான் வித்தியாசமே தவிர, உள்ளூர் மக்கள் அனைவரும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர்.

### மரியாதை கிடைத்தது

இது குறித்து இந்த கிராமத்தைச் சேர்ந்த மதம் மாறிய சுலைமான் கூறும் போது, "மேல் வர்க்கத்தினரின் அடக்குமுறை காரணமாக ஒட்டுமொத்தமாக மதம் மாறினோம். மதம் மாறிய பிறகு எங்களது மரியாதை உயர்ந்துள்ளது. முன்பு எங்களை மேல்வர்க்கத்தினர் வா, போ என மரியாதை இல்லாமல் நடத்துவார்கள். எங்களது வாழ்க்கைத் தரமும் உயர்ந்துள்ளது. பலர் வெளிநாடுகளுக்கு சென்று நல்ல வருமானம் ஈட்டுகின்றனர்.

அந்த மத மாற்றம் சம்பவத்துக்கு பிறகு, தற்போது ஒரு கொலை மூலம் ராம்குமார் எங்கள் கிராமத்தை நாடு முழுவதும் பேச வைத்துள்ளார். இது எங்களுக்கு வேதனையைத் தருகிறது. ஊருக்கு கெட்ட பெயரை ஏற்படுத்தித் தந்துள்ளார்" என்றார்.

### தலைகுனிவு

மதம் மாறிய நாகூர் மீரான் என்பவர் கூறும்போது, "மேல் ஜாதியினரின் அடக்குமுறை காரணமாகவே நாங்கள் மொத்தமாக மதம் மாறினோம். எனினும், மதம் மாறாத மற்ற உறவினர்களுடன் தொடர்ந்து அதே உறவு முறையோடு தான் பழகி வருகிறோம். எங்களுக்குள் எந்த வேற்றுமையயும் இல்லை.

35 ஆண்டுகளுக்கு பிறகு எங்கள் கிராமம் மீண்டும் வெளி உலகுக்கு தெரியவந்துள்ளது. ஆனால் இந்த முறை வெட்கித் தலைகுனியும் நிலையில் இருக்கிறோம்" என்றார்.

**ஆதாரம் : தி ஹிந்து (தமிழ்)**
**03.07.2016**
**சென்னை பதிப்பு**

# தமிழ்நாடு சிறுபான்மையினருக்கான கடன் உதவி

தற்பொழுது தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு கழகத்தின் மூலம் கூட்டுறவு வங்கிகள் வழியாக சிறுபான்மையினருக்கான கடன் உதவி வழங்கப்பட்டு வருகிறது. இதில் தமிழ் நாட்டில் உள்ள கூட்டுறவு வங்கிகள் சிறுபான்மையினருக்கான கடன் தொகைகள் வழங்குவதில் அக்கறை எடுத்துக் கொள்வது இல்லை. பல்வேறு விதிமுறைகளையும் கட்டுப்பாடுகளையும் பெற முடியாமல் அலைக்கழிக்கப்படுகின்றனர்.

அதே நேரத்தில் கூட்டுறவு வங்கிகள் தமது திட்டத்தில் உள்ள கடன்களை வழங்குவதில் அக்கறை கொண்டுள்ளனர். இதனால், பாதிக்கப்படுவோர் தமிழ்நாட்டின் சிறுபான்மையினர் தான் டில்லியில் உள்ள தேசிய சிறுபான்மை பொருளாதார மேம் பாட்டுக் கழகம் எவ்வளவு வேண்டுமானாலும் தமிழ்நாட்டுக்கு நிதி வழங்கிட தயாராக இருக்கும் போது தமிழ்நாடு சிறுபான்மையினர் கடன் பெறுவதில் சிரமம் இருப்பதினால் இத்திட்டம் பயனற்று கிடக்கிறது.

ஆகவே, அண்டை மாநிலமான கர்நாடகத்தில் உள்ளது போல் தமிழ்நாடு சிறுபான்மை பொருளாதார மேம்பாட்டு கழகத்திற்கு மாவட்டந்தோறும் கிளைகளை ஏற்படுத்தி இதர கூட்டுறவு சங்கங்களில் கடன் வழங்குவது போல், நேரடியாக கடன் வழங்கினால் இக்குறைகள் தீர்க்கப்படும். இதனால் சிறுபான்மையினர்ட பெரிய அளவில் பயன் அடைவார்கள். 2007 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாடு முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்களை (MWAS) ஆரம்பித்து சிறப்பாக செயல்படவில்லை. எந்தெந்த மாவட்டங்களில் முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்கள் ஆரம்பித்து செயல்படாத நிலையில் உள்ளனவோ அவற்றைக் கண்டறிந்து, அதிலுள்ள நிர்வாகிகளை மாற்றிவிட்டு, புதிய நிர்வாகிகள் நியமனம் மூலமாகவோ அல்லது தேர்தல் மூலம் தேர்ந்தெடுத்து, முஸ்லிம் உதவும் சங்கங்களை சிறப்பாக செயல்பட வைப்பதன் மூலம் தமிழ்நாடு முழுவதும் முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்கள் மூலமாக சிறுபான்மையினர் முழுமையான பயனடைய ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தில் இதற்கு முந்திய ஆட்சியில் 1+1 (2006ஆம் ஆண்டு) என்ற இணை மானியத்தை சிறுபான்மையினர் நலன் கருதி மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் பெருந்தன்மையாக 1+2 (2011 ஆம் ஆண்டு) என்ற விகிதத்தில் இணை மானியத்தை வழங்கி உத்தரவிட்டார்கள். இருப்பினும், இஸ்லாமிய சமுதாயத்தினர் தமது இலக்குகளை எட்ட முடியாமல் இருப்பதால் 1+2 என்பதற்கு பதிலாக 1+3 (2016 ஆம் ஆண்டு) என்ற விகிதத்தில் இணை மானியம் வழங்கிட வேண்டுகிறோம்.

இந்த இணை மானியம் ஆண்டுக்கு 3 முறை பிரித்துட வழங்கிடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

உலமா பென்ஷன் மாதம் 1ஆயிரம் ரூபாய் கொடுப்பதை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மாதம் 1500 ரூபாய் என்று கொடுப்பதாக சொன்னார்கள். அதை உடனடியாக கொடுக்க ஏற்பாடு செய்யவும் கேட்டுக் கொள்கிறோம்.

**இப்படிக்கு**

**(கே.எம். அசன் ஷேக்)**

# வேர்கள் வெளியீட்டகத்தின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | சிறையில் எனது நாட்கள் - ஜெய்னப் அல் கஸ்ஸாலி - பக்கம் : 212 | ரூ. 90.00 |
| 2. | ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு - மு. குலாம் முஹம்மது | ரூ. 100.00 |
| 3. | சாதி ஒழிந்தது - டி.எம். மணி, ஐந்தாம் பதிப்பு - பக்கம் 132 | ரூ. 50.00 |
| 4. | End of Casteism T.M. Mani பக்கம் -134 | ரூ. 50.00 |
| 5. | அஹமதாபாத் குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் -48 | ரூ. 10.00 |
| 6. | டெல்லி குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் - 48 | ரூ. 10.00 |
| 7. | நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள், மு. குலாம் முஹம்மத் | ரூ. 25.00 |
| 8. | மால்கம் எக்ஸ் - மு. குலாம் முஹம்மது, பக்கம் -231 | ரூ. 80.00 |
| 9. | தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம், டி.எம். மணி, பக்கம் -31 | ரூ. 20.00 |
| 10. | செந்தமிழ்நாட்டுச் சேரிகள்- டி.எம். மணி, பக்கம்:94 | ரூ. 40.00 |
| 11. | கர்கரேயை கொலை செய்தது யார்? பக்கம் 453 | ரூ. 250.00 |
| 12. | சிந்திப்பீர் செயல்படுவீர், நா. கோதண்டபாணி, பக்கம் 47 | ரூ. 15.00 |
| 13. | ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம், ப. கோபால கிருஷ்ணன், பக்கம்-84 | ரூ. 40.00 |
| 14. | சாதி ஒழிந்தது- ஹிந்தி - டி.எம். மணி, பக்கம் - 148 | ரூ. 50.00 |
| 15. | நாம் பிரிந்து விடவேண்டாம், பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி, பக்கம்-292 | ரூ. 175.00 |
| 16. | தாலிபானின் பிடியில், மு. குலாம் முஹம்மது, பக்கம் - 202 | ரூ. 90.00 |
| 17. | பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு, மு. குலாம் முஹம்மது பக்கம்-163 | ரூ. 110.00 |
| 18. | பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள், மு. குலாம்மது, பக்கம் -143 | ரூ. 90.00 |
| 19. | இஸ்லாமிய நாகரிகம் - முஸ்தஃபா அல் சிபாய், பக்கம் - 206 | ரூ. 130.00 |
| 20. | கஷ்மீரின் பாதி விதவைகள், மு. குலாம் முஹம்மது, பக்கம் - 140 | ரூ. 70.00 |
| 21. | எது முதலில்? டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவீ, தமிழில் கா.மு. இல்யாஸ் ரியாஜி | ரூ. 50.00 |
| 22. | சாதி ஒழிந்தது - கன்னடம், | ரூ. 50.00 |
| 23. | அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி? டி.எம். உமர் ஃபாரூக் | ரூ. 20.00 |
| 24. | கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்? மு. குலாம் முஹம்மது பக்கம்:48 | ரூ. 30.00 |
| 25. | முஹம்மத் (ஸல்) அவர்கள் ஓர் சகாப்தம், பக்கம் 30 | ரூ. 15.00 |
| 26. | இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும், பக்கம் - 120 | ரூ. 50.00 |
| 27. | இஸ்லாம் வழங்கும் தண்டனைகள் | ரூ. 40.00 |
| 28. | இஸ்லாமும் விஞ்ஞானமும் | ரூ. 70.00 |
| 29. | இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா? | ரூ. 60.00 |
| 30. | இஸ்லாமும் பெண்களும் | ரூ. 70.00 |
| 31. | இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா? | ரூ. 70.00 |
| 32. | தேசப்பிரிவினைக்கு யார் காரணம்? | ரூ. 30.00 |
| 33. | 26/11 -நீதித்துறையும் மயங்கியது ஏன்? | ரூ. 220.00 |
| 34. | ஒரு தலித் போராளியின் வாழ்வும், அவர் காட்டிய வழியும் | ரூ. 20.00 |

**வேர்கள் பதிப்பகம்,** 52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001.

தொடர்புக்கு : 8148129887



தொடர் - 44

# எது முதலில்?

-இமாம். யூசுப் அல் கர்ளாவி

## உள்ளத்தால் செய்யும் பெரும் பாவங்கள்!

பெரும் பாவங்கள் என்பவை வெளியே தெரியும்படி செய்யப்படும் செயல்களால் மட்டுமே ஏற்படும் என்று நினைத்துக் கொள்ளாதீர்கள். சிலர் அப்படித்தான் நினைக்கிறார்கள்.

அப்படியல்ல. செயல்களின் வழியாக ஏற்படும் பாவங்களை விட உள்ளத்தால் செய்யும் பாவங்கள் பயங்கரமானவையாக இருக்கின்றன.

உறுப்புக்களால் செய்யும் நற்செயல் களை விட உள்ளத்தால் செய்யும் நன்மைகள் சிறப்புக்குரியவை என்பதை முன்னர் கூறினோம். அது போலத்தான் பாவங்களும்.

உள்ளத்தால் செய்யும் பாவங்கள் பயங்கரமானவை. பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்த வல்லவை. பெரும் தண்டனைக்குரியவை.

### ஆதம்(அலை), இப்லீஸ் இருவரின் பாவங்களும் ஒரே மாதிரியானவை அல்ல

ஆதிமனிதர் ஆதம்(அலை) அவர்கள் படைக்கப்பட்டு அவர்கள் சொர்க்கத்தில் குடியமர்த்தப்பட்ட பின்னர் இருபாவங்கள் நடந்ததாக திருக்குர்ஆன் கூறுகிறது. இவைதான் முதல் பாவங்கள்.

### ஒரு பாவம்

ஆதம் (அலை) அவர்களும் அவர்தம் மனைவியும் தடுக்கப்பட்ட மரத்தின் கனியைப் புசித்தனர். இது வெளிப்படையான உறுப்புக்களால் ஏற்பட்ட பாவம். இது மறதியாலும், உறுதி குன்றியதாலும் நிகழ்ந்தது.

இதே அல்லாஹ் கூறுவதைப் பாருங்கள். “நான் ஆதமிடம் முன்னரே (நம் கட்டளைப்படி நடந்திட வேண்டும் என்று) உடன்படிக்கை பெற்றிருந்தோம். ஆனால் அவர் மறந்துவிட்டார். அவரிடம் உறுதிப்பாட்டை நாம் காணவில்லை” (20:115)

இந்த மறதியையும், பலவீனத்தையும் அவர்களிடம் மெல்ல மெல்ல ஏற்படுத்தி யிருந்தான் சாபத்துக்குரிய இப்லீஸ்.

அம்மரத்தின் கனியைச் சாப்பிடுவதால் நல்லதே நடக்கும் என்றான். அவ்விருவரையும் ஏமாற்றித் தன் வலையில் வீழ்த்தினான். நான் உங்களின் நலன் விரும்பி தான் என்று அல்லாஹ்வின் மீதே சத்தியம் செய்தான். முடிவில் அவ்விருவரும் இறைக் கட்டளைக்கு மாறு செய்தனர்.

எனினும், அவ்விருவரின் உள்ளத்திலும் குடி கொண்டிருந்த ஈமான் எனம் இறை நம்பிக்கை வெகு விரைவாகவே விழித்துக் கொண்டது. தாம் செய்தது பாவம் எனப் புரிந்து அல்லாஹ்விடம் மன்னிப்புக் கேட்டனர். அல்லாஹ் இருவரையும் மன்னித்தான்.

இதோ அல்லாஹ் கூறுகிறான். ஆதம் தன் இறைவனுக்கு செய்தார். இதனால் வழி பிசிகினார். பின்னர் அவரை அவரின் இறைவன் தேர்ந்தெடுத்து மன்னிப்பு வழங்கு நேர் வழி காட்டினான். (20:121,122)

ஆதம் தன் இறைவனிடமிருந்து சில வார்த்தைப் பெற்று (அதைக் கூறி பாவமன்னிப்பு வேண்டினார்). அவரை இறைவன் மன்னித்தான். நிச்சயமாக அவன் மன்னிப்பவன், இரக்கமுள்ளவன். (2:37)

“எங்கள் இறைவா! எங்களுக்கே நாங்கள் அநீதி செய்து விட்டோம். நீ எங்களை மன்னித்து எங்களுக்கு இரக்கம் காட்டவில்லை என்றால் நாங்கள் இழப்புக்குரியவர்களாகி விடுவோம்” என்று அவ்விருவரும் கூறினார். (7:23)

இதுவே இறைவனிடமிருந்து ஆதம் பெற்ற வார்த்தைகள்.

## மற்றொரு பாவம்

(தாய், தந்தை எவருமின்றி) அல்லாஹ்வால் நேரடியாகப் படைக்கப்பட்ட அவனது உயிர் ஊதப்பட்டு உருவாக்கப்பட்வர் ஆதி மனிதர் ஆதம் (அலை).

அவருக்குக் காணிக்கையாகவும் மரியாதைக்காகவும் சிரம் பணியும்படி வானவர்களுக்குக்கும் இப்லீசுக்கும் அல்லாஹ் உத்தரவிட்டான்.

“அப்பொழுது வானவர்கள் அனைவரும் சிரம் பணித்தனர். இப்லீசைத் தவிர, அவன் சிரம் பணிவோருள் ஒருவனாக இருந்திட மறுத்துவிட்டான். அப்பொழுது, “உனக்கென்ன ஆயிற்று? ஏன் சிரம் பணிவோருள் ஒருவனாக நீ இருக்கவில்லை?” என்று அல்லாஹ் கேட்டான். அதற்கு, “ஓசை தரும் கருப்புக்களி மண்ணிலிருந்து நீ படைத்தவருக்கெல்லாம் நான் சிரம் பணிவதற்கில்லை” என்று இப்லீஸ் கூறிவிட்டான். “அப்படியானால் நீ இங்கிருந்து வெளியேறி விடு. நிச்சயமாக நீ விரட்டப்பட்டவன். நியாயத்தீர்ப்பு நாள் வரை உன் மீது சாபம் உண்டாகும்” என்று அல்லாஹ் கூறினான்” (15:30-35)

இப்லீசின் இந்தப் பாவம் அடங்காமையால் ஏற்பட்ட பாவம். இறைக்கட்டளையை ஏற்க மறுத்து ஆணவம் கொண்டதால் வந்த பாவம்.

இதைப்பற்றி அல்லாஹ் இப்படிக் கூறுகிறான், “அனைவரும் சிரம் பணிந்தனர். இப்லீசைத் தவிர. அவன் அடங்க மறுத்தான். ஆணவம் கொண்டான். இறை மறுப்பாளர்களில் ஒருவனாகி விட்டான்”. (2:34)

“நான் அவரை விடச் சிறந்தவன். என்னை நெருப்பால் படைத்தாய். அவரை களிமண்ணால் படைத்தாய்” (7:12) என்று இறுமாப்புடன் கூறினான்.

இப்போது இவ்விரண்டு பாவங்களுக்கு மிடையேயான வேறுபாட்டைப் பார்ப்போம்.

ஆதம் (அலை) செய்தது வெளி உறுப்புக்களால் செய்த பாவம். அதை உணர்ந்து உடனே பாவம் மன்னிப்புத் தேடிட விரைந்து முன் வந்தார்கள்.

ஆனால் இப்லீஸின் பாவமோ அந்தரங்க உறுப்பான உள்ளத்தால் செய்த பாவம். அது எவ்வளவு இழிவான முடிவுக்குக் கொண்டு சென்று விட்டது பார்த்தீர்களா? இது போன்ற முடிவுகள் எவருக்கும் ஏற்படாமல் அல்லாஹ் தான் பாதுகாக்க வேண்டும்.

எனவேதான், உள்ளத்தால் செய்யப்படும் பாவங்கள் கடுமையாக எச்சரிக்கப்படுகின்றன. திரும்பத் திரும்ப அவை கூறப்படுகின்றன. இவை அழிவிலாழ்த்தும் குற்றங்களாகவும் பேராபத்தை ஏற்படுத்தும் பாவங்களாகவும் கருதப்படுவது இதனால் தான்.

னின் கீழாடை அவற்றில் பங்கு கேட்பவனை நான் கடுமையாக தண்டிப்பேன் என்று அல்லாஹ் கூறுகிறான்.

நபி (ஸல்) கூறினார்கள், தன் சகோதர முஸ்லிமை ஒருவன் இழிவாகக் கருதுவதே பாவமாக இருக்கப் போதுமானது. (அறிவிப்பாளர் : அபூ ஹுரைரா (ரழி) நூல் : முஸ்லிம்)

நபி (ஸல்) கூறினார்கள், தன் ஆடையை பெருமையுடன் கீழிறக்கிச் செல்பவனை அல்லாஹ் மறுமை நாளில் பார்க்க மாட்டான் (நூல்: புஹாரீ)

திருக்குர்ஆனின் பல்வேறு வசனங்கள் ஆணவக்காரர்களையும் பெருமையையும் இகழ்கின்றன.

பெரும்பாலானவர்கள் இறைவனின் திருத்தூதர்களை நம்பிக்கை கொள்ளாமல் நரகவாசிகளானதற்கு ஆணவமே காரணம் என்பதையும் திருக்குர்ஆன் தெளிவுபடுத்து கிறது.

"அநியாயமாகவும் ஆணவமாகவும் அவற்றை அவர்கள் மறுத்தனர். அவர்களின் உள்ளங்களை அவற்றை (சான்றுகளை) நம்பின" (27:14)

"நரகத்தின் வாசல் வழியாக நுழையுங்கள். அதில் நிரந்தரமாக இருப்பீர்கள். ஆணவக்காரர்களின் ஒதுங்குமிடம் மிகக் கெட்டது" (16:29)


"ஆணவக்காரர்களை அல்லாஹ் விரும்ப மாட்டான்" (16:23)

"பெருமைக்காரனாகவும் ஆணவம் பிடித்தவனாகவுமிருக்கின்ற எல்லோரின் இதயத்திலும் அல்லாஹ் முத்திரையிட்டு விடுகிறான்" (40:35)

தொடரும்...

தமிழ் வடிவம் : இல்யாஸ் ரியாஜி


**இப்போது பரபரப்பான விற்பனையில்**




விலை ரு. 200 மட்டுமே





விலை ரு. 225 மட்டுமே

**வேர்கள் பதிப்பகம்,**

52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001. தொடர்ப்புக்கு : 8148129887

தொடர். . .

## முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன?



# மதவாதிகளால் ஐரோப்பாவை முன்னேற்றியிருக்க முடியும் ஆனால் அவர்கள் அதைச் செய்யவில்லை

**- அபுல் ஹஸன் அலீ நத்வீ**

**மொழிபெயர்ப்பு: அஹ்மது ஜலாலுத்தீன் நத்வீ**

அத்து மீறிய துறவு ஆட்டம் போட்ட உலகாதயம் இவ்விரண்டுக்கு மிடையே கிறிஸ்தவ உலகம் எப்படி தத்தளித்துக் கொண்டிருந்தது என்பதை அறிஞர் Lecy நமக்குக் காட்சிப்படுத்துகிறார். இதோ,

மக்களின் குணங்களிலும், அவர்களின் சமுதாய அமைப்பிலும் ஈனத்தனமான மட்டமான செயல்களே ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்தன.

அசிங்கம், அனர்த்தம், உல்லாசம், சுகபோகம், சிற்றின்பம், மன்னர்கள், செல்வந்தர்கள், பிரமுகர்கள் ஆகியோர் கூடியிருக்கும் அவையில் போலியாக பாசாங்காகவும், நடந்துக் கொள்வது, பகட்டான ஆடைகள் அணிவது, போட்டி போட்டுக் கொண்டு பெருமைமிகு அனிகலன்கள் அலங்காரங்களுடன் உலாவருவது ஆகியன அவர்களிடையே வியாபித்திருந்தது.

துறவும் மட்டுமே மீறியிருந்தது. உலகாதயமும் எல்லைகளை உடைத்து நின்றது.

எந்தெந்த நகரங்களிலிருந்ததெல்லாம் ஏராளமான பாதிரிகள் வெளி போந்தார்களோ அந்த நகரங்கள் தாம் பாவங்களிலும் அருவருப்பான செயல்களிலும் பிற நகரங்களை விட முன்னே நின்றது.

மனித மாண்புக்கும், மகத்துவத்துக்கும் மிகப் பெரும் எதிரிகளாக இருப்பவை இரண்டு. ஒன்று பாவங்கள், மற்றொன்று மனதில் தோன்றியபடியெல்லாம் வாழ்வது. இவ்விரண்டும் அக்காலத்தில் இருந்தது.

பெரும்பான்மை மக்களின் சிந்தனைத் திறனும் வற்றிவறண்டு போய்விட்டது. எனவே அவர்கள் பாவங்களைச் செய்வதால் சமூகத்தில் ஏற்படும் அவப்பெயர்களைப் பற்றிக் கவலைப்படவேயில்லை.

எப்போதாவது சில நேரங்களில் அவர்களுக்கு மதம் கூறும் எச்சரிக்கைகளை எண்ணி பயம் வருதுண்டு. கொஞ்ச நேரத்திலேயே அந்த பயம் அடங்கி மனம் அமைதி பெற்றுவிடும்.

ஏனெனில் ஒருவன் எவ்வளவு பாவம் செய்திருந்தாலும் சில பிரார்த்தனைகள் வேண்டுதல் செய்துவிட்டால் பாவம் பறந்தோடி விடும் என்று நம்பிக் கொண்டிருந்தனர்.

பொய், பித்தலாட்டம், சூழ்ச்சி ஆகியன கைசர் மன்னர்களின் காலத்திலிருந்ததை விட இப்போது வேகமாக இருந்தன. கொடிக் கட்டிப் பறந்தன.

எனினும் வரம்பு மீறல்கள், அநியாயங்கள், கருத்துச் சுதந்திரம், இனவெறி ஆகியவை கைசர்கள் காலத்தை விடக் குறைவாக இருந்தன. (Surce : History of European Morale Vol. II, Pg. 162-163)

மத நிறுவனங்களில் நிலவிய சீர்கேடுகள்

உலகாதயத்தை முடக்கிப் போடுவதற்காக கிறிஸ்தவ மதம் முன்வைத்த மதக்கட்டமைப்பும் துறவுக் கோட்பாடும் மனித இயல்புடன் முரண்பட்டவையாகவே இருந்தன.

ஆக மதம் மனித சுபாவத்தை வேறு சில துணைக் காரணங்களுடன் சேர்ந்து அடக்கிவிட எத்தனித்தது. ஆனால் மனித சுபாவம் மதத்தை அடக்கிவிட்டது.

ஆம், குணக்கேடுகள், ஒழுங்கீனங்கள் மதநிறுவனங்களையும் கவ்விக் கொண்டன. உலக நிறுவனங்களுக்கு ஈடாக மத நிறுவனங்களும் தவறுகளைச் செய்தன. பாவங்கள், குற்றங்கள், சமூகத் தீமைகள் ஆகியன மத நிறுவனங்களிலேயே அதிகமாக நடந்தன.

கிறிஸ்தவர்களிடையே அன்பையும் சகோதரத்துவத்தையும் ஏற்படுத்துவதற்காக நடைபெறும் மத விருந்துகள், நல்ல மனிதர்கள், தியாகிகள் ஆகியோரின் நினைவு தினங்கள், திருச்சபைகள் இவற்றில் கூட தீய செயல்கள் பாவங்கள் அரங்கேறின.

இதனால் அரசாங்கம் மத நிகழ்ச்சிகளை தடை செய்துவிட்டது.

பெரும் பெரும் பாதிரிகளும் கூட பாவங்களை துணிந்து செய்ததாகச் சொல்லப்படுவதுண்டு.

St. Jarum என்பவர் கூறுகிறார், பெரும் பிரபுக்கள், செல்வச் சீமான்கள் ஆகியோரின் ஆடம்பர வாழ்வுயே மிஞ்சும்படியான உல்லாச வாழ்வு வாழ்ந்தனர் சில பாதிரியார்கள்.

போப்களின் ஒழுக்கங்கள் தரைதட்டிப் போய் பெரும் வீழ்ச்சி கண்டிருந்தது. பேராசையும், பணப்பித்தும் பிடித்து அலைந்தனர் அவர்கள்.

மத ரீதியிலான பதவிகளையும் உத்யோகங்களையும் பணம் தந்தவர்களுக்கெல்லாம் தந்தார். கண்டவற்றை பொது ஏலத்துக்கு விட்டு அதிகப் பணம் தந்தவனுக்கே பெரிய பதவி என்றாக்கினார்கள்.

பாவ மன்னிப்பு வழங்க சொர்க்கத்திற்கு சீட்டு வழங்க கையூட்டுப் பெற்றார்கள். காசு வாங்கிக் கொண்டு மதச் சட்டங்களை மீறி சிலருக்கு அனுமதி வழங்கினார்கள்.

தடுக்கப்பட்ட பாவங்களைச் செய்திடவும், ஈடேற்றம் பெற்றதற்கான சான்று வழங்கவும், டிக்கட் (சீட்டு) வழங்கி சம்பாதித்தனர். இது போதாதென்று லஞ்சம் வாங்கினர். வட்டிக்கு விட்டு காசு பார்த்தார்கள்.

இப்படி பாவத்தால் ஈட்டிய பணத்தை வீணாக விரயம் செய்தனர். ஆடம்பர வாழ்வு வாழ்ந்தனர்.

எட்டாம் போப் இன்னோசண்ட் என்பவர் தம் கிரீடத்தையே அடகு வைத்திடும் நிலைக்குத் தள்ளப்பட்டார்.

பத்தாம் போப் லியோ (Leo) என்பவர் அவருக்கு முந்தைய போப் விட்டுச் சென்ற சொத்து சுகங்களையும், தனக்கென ஒதுக்கப்பட்ட செல்வங்களையும் தனக்குப் பின்னர் போப்பாக வரக் காத்திருந்தவரின்

செல்வங்களையும் செலவு செய்து அழித்திருக்கிறார் என்று கூறப்படுகிறது.

ஃபிரான்ஸ் நாட்டின் மொத்த வருமானமும் போப்களின் இச்சைகளைத் தனித்திட போதுமானதான இல்லை என்றும் வரலாற்றில் ஒரு குறிப்புண்டு.

(Source : Conflict of Religion and Science P.230)

தமிழ் வடிவம் : இல்யாஸ் ரியாஜி


**தமிழன்**

**தொலைக்காட்சியில்**

**தரீக்குல் குர்ஆன்**

**வாரந்தோறும் செவ்வாய்க்கிழமை**

**இரவு 10.00 மணி முதல் 10.30 மணி வரை**

**வைகறை வெளிச்சம்**

**துணை ஆசிரியர்**

**இல்யாஸ் ரியாஜி**

**திருக்குர்ஆன் விரிவுரை**

**நிகழ்த்துகிறார்**

**RSD வீடியோ நிறுவனம்**

**இந்நிகழ்ச்சியை**

**நடத்துகிறது.**


**காணத்தவறாதீர்கள்**

**தொடர்புக்கு :**

**காயல் தர்வேஷ்**

**9841898044**






*விலை ரூ. 60 மட்டுமே*

**தீவிரவாதிகள் என்று**

**சித்தரிக்கப்படும் தாலிபான்கள்**

**யார்? என்பதை தெரிந்து**

**கொள்ள இந்த நூல்களை**

**படியுங்கள்!**




*விலை ரூ. 90 மட்டுமே*

**வேர்கள் பதிப்பகம்,**

**52/1, மண்ணடி தெரு, மண்ணடி,**

**சென்னை - 600 001.**

**தொடர்ப்புக்கு : 8148129887**



Owned and published by M. Gulam Mohamed from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001. Editor M. Gulam Mohamed, Printed by M. Gulam Mohamed at Chennai Offset Printers, 19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.